உ

சாமிநாத வெண்பா



ஆசிரியர்

வரதராசன் அ.கி.

சிங்கப்பூர்

KMM05563

உ

சாமிநாத வெண்பா

821



ஆசிரியர்

வரதராசன் அ.கி.

வெளியிடுவோர்

வரதராசன். அ.கி.

சிங்கப்பூர். நவம்பர் - 2012.



முதல் பதிப்பு : நவம்பர் 2012

உரிமை பதிவு : பதிப்புரிமை ஆசிரியருக்கு

நூல் : சாமிநாத வெண்பா

ஆசிரியர் : வரதராசன் அ.கி.

ISBN : 978-981-07-4686-5

விலை : சிங்கப்பூர் வெள்ளி Singapore $ 10

நூல் கிடைக்குமிடம்

BLK 7, # 04-34
"THE RIVERVALE"
7, RIVERVALE LINK
SINGAPORE - 545125.

அச்சிட்டோர்

ஜயப்பன் பிரிண்ட் ஹவுஸ்,
1A ஒபுளா சுப்பையர் சந்து, சின்னக்கடைத்தெரு,
தெற்குமாசி வீதி, மதுரை – 625 001,
செல் : 96002 66884, 98945 59135.

பொருளடக்கம்

முன்னுரை

முனைவர் சாரதா நம்பி ஆரூரன் 4

அணிந்துரை

பேராசிரியர்.சொ.சொ.மீ.சுந்தரம் 12

வாழ்த்துரை

முனைவர் சுப.திண்ணப்பன் 19

என்னுரை

வரதராசன்.அ.கி. 25

உ.வே.சா. வாழ்க்கை வரலாறு – ஒரு சிறு குறிப்பு 32

"சாமிநாதவெண்பா" – 447 வெண்பாக்கள் 41

உ.வே.சா–வாழ்வின் முக்கிய நிகழ்வுகள் – பட்டியல் 104

தமிழ்த்தாதா – கல்கியின் கடிதம் (இணைப்பு) 110

முக்கியமான மேற்கோள் நூற்கள் பட்டியல் 112

சாமிநாதையர் பதிப்பித்த நூற்கள் – பட்டியல் 113

முன்னுரை

கலைமாமணி முனைவர்
சாரதா நம்பி ஆரூரன்
தமிழக அரசின் மாநிலத் தகவல் ஆணையர் (ஓய்வு)

முன்னுரை

திங்களொடும், செழும்பரிதி தன்னோடும் விண்ணோடும்,
உடுக்களோடும்
பொங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழ்

என்று தமிழின் தொன்மையைப் பாராட்டுவார் பாவேந்தர் பாரதிதாசன்.

தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடும் சூழ்கலை வாணர்களும் என்று பிறந்தவள் என்றுணர முடியாத இயல்பையும் ஏற்றத்தையும் பெற்றவள் நம் தமிழ்த்தாய்.

"தமிழ்" என்ற சொல்லுக்கே இனிமை என்பது பொருள். இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும் என்கிறது பிங்கல நிகண்டு.

இன்றமிழ் என்று சிந்தாமணி தமிழைச் சிறப்பிக்கின்றது. "தமிழ் வையத் தண்ணம் புனல்" என்ற பரிபாடல் வரிக்கு, இனிமை உடைய வையப் புனல் என்பதே பொருள்.

தமிழ்ப் பாட்டிசைக்கும் தாமரையே என்ற கம்பன் பாடலிலும், தமிழ் என்ற சொல் இனிமை என்ற பொருளில் எடுத்தாளப்பட்டுள்ளது.

நீர்மை, அழகு, மென்மை போன்ற பல பொருள்கள் தமிழ் என்ற சொல்லுக்கு இருப்பினும், இனிமை என்பதே இம்மொழியின் இயல்புக்குப் பொருந்துவதாகும்.

வானம் அளந்தது அனைத்தும் அறிந்து வளர் மொழியாகத் தமிழ்மொழி திகழ்வதற்குக் காரணம் அதன் இலக்கண, இலக்கியச் சிறப்பே

முச்சங்கம் வைத்து மூவேந்தர் வளர்த்த தமிழ் இலக்கியங்கள் பலவற்றைக் கால வெள்ளத்தாலும் காப்பாற்றுவாரின்மையாலும் நாம் இழந்தோம். "அனலாலும் புனலாலும் அழிக்க முடியாத அவையனைத்தும், நம் அக்கறையின்மையால் அழிந்தன" எஞ்சிய ஏடுகளை அரிதின் முயன்று, தேடி எடுத்து, பாட பேதங்களை நீக்கி, தக்க முறையில் நூலாக்கித் தமிழன்னைக்குப் புத்துயிர் அளித்தவர் மகா மகோபாத்பாய டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் ஆவார்.

பனை ஓலையில் உள்ள தமிழ் ஏடுகளைத் தேடுவதிலும், அவற்றைக் கற்று ஆராய்ந்து படி எடுத்துப் பிழையறப் பதிப்பிப்பதிலும்

அவற்றிற்கு ஆராய்ச்சித் தரம் உள்ள முகவுரையும், ஆசிரியர் வரலாறும், நூற்பொருள் பற்றிய குறிப்புகள் எழுதுவதிலும், அயராமல் உழைத்ததன் பயனாக, பழைய சங்க நூல்கள் உயர்ந்த முறையில் ஐயரால் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்தன.

சங்க நூல்களைப் பதிப்பிக்கும்போது, நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், அரும்பத உரையாசிரியர் போன்ற பெரும் புலமைச் சான்றோர் உரைகளை இணைத்து அவர் வெளியிட்டார். அது மட்டுமல்ல. தாம் பதிப்பித்த நூல்களில் அரசர் வரலாறு, புலவர் வரலாறு, செய்யுள் நயம், அகப்பொருள்–புறப்பொருள் அமைதி, கால ஆராய்ச்சி, நூலுக்குரிய மூலநூல் விவரம் போன்ற பல்வேறு கூறுகளையுமிணைத்து வெளியிட்டதால் கற்றோர் முழுப்பயனும் பெற்றனர்.

புறநானூறு, பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து போன்றவற்றின் பதிப்புகளில் அவர் எழுதியுள்ள குறிப்புகளை, "உயர்ந்த ஆராய்ச்சிக் கருவூலங்கள்" என்று தம் இலக்கிய வரலாற்று நூலில் அறிஞர் மு.வ.அவர்கள் போற்றுகிறார்கள்.

அவருடைய ஆராய்ச்சிக் குறிப்புகளும், தெளிவான கட்டுரைகளும்,, வாழ்க்கை வரலாற்று நூல்களும் இருபதாம் நூற்றாண்டின் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியதால், தமிழுக்காகவே வாழ்ந்த அன்னாரைப் பாராட்டி,

பொதிய மலைப் பிறந்தமொழி வாழ்வறியும் காலமெல்லாம்
புலவர் வாயில்,
துதி அறிவாய் அவர் நெஞ்சின் வாழ்த்தறிவாய் இறப்பின்றித்
துலங்கு வாயே

என்று கவிமழை பொழிந்தார் பாட்டுக்கொரு புலவன் பாரதியார்.

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலியில் பிறந்தவர். வெல்லத் தமிழ் பேசும் நெல்லைத் தமிழ் மகன், பாண்டி நாட்டில் பிறந்து சிங்கப்பூரில் தமிழ் வளர்க்கும் அன்புச் சகோதரர் அ.கி.வரதராசன் படைத்துள்ள "சாமிநாத வெண்பா" முழுமையும் படித்து, சுவைத்தபின் மெல்லத் தமிழ் இனி வளரும் என்ற புத்துணர்ச்சி பிறந்தது.

"காரிகை கற்றுக் கவி பாடுவதை விட,
பேரிகை கொட்டிப் பிழைப்பது நன்று""

என்ற வகையில் மரபுக் கவிதைகளைப் படைப்போர் குறைந்து, வசன கவிதைகள் என்ற பெயரில் எழுதுகோல் எடுத்தவரெல்லாம் எழுத்தாளராகி, புற்றீசல்களாகப் புதுக்கவிதைகளை அள்ளித் தெளிக்கும் அவசரயுகத்தில், வரலாற்று நூலொன்றை வெண்பாவில் யாத்து, "செயற்கரிய செய்வர் பெரியர்" என்பதற்கு எடுத்துக்காட்டாய்த் திகழ்கின்றார் நூலாசிரியர்.

நால்வகைப் பாக்களுள் நயமிக்கது, நவில்தற்கரியது, செப்பலோசையால் சிறப்புற்றது, இலக்கணக் கட்டுப்பாடுகள் நிறைந்தது வெண்பா 447 வெண்பாக்களில் உ.வே.சா. அவர்களின் பிறப்பு, வளர்ப்பு, கல்வி, இசைப்பயிற்சி, ஏடுகளைத் தேடியெடுத்து நூல்களைப் பதிப்பித்த அருமைப்பாடு அனைத்தையும் அற்புதமாக விளக்கியுள்ளமை பெரிதும் பாராட்டுக்குரியது.

வெண்பா என்பதால் படித்துப் புரிந்து கொள்ள உரையாசிரியர் தேவையோ என்று எண்ணவேண்டாம். ஒரு புதினத்தைப் படிப்பது போல எளிய இனிய தமிழில் வெண்பாக்கள் அமைந்துள்ளமை வியத்தற்குரியது.

சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்,
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்

என்பார் ஔவை மூதாட்டி.

மூதுரை நாலடியார் முற்றுமே பாராம(ல்),
ஓதுவா(ன்) எப்பொழுது(ம்) ஓய்வின்றி. — *பாடல் 25*

நன்னூல் முழுவதையும் நன்றாகப் பாராமல்
பன்னும் வகையில் படித்தறிந்தா(ன்). — *பாடல் 38*

என்ற வெண்பாக்கள் மறைமலை அடிகளை நினைவுறுத்துவன. தமது பதினைந்தாம் ஆண்டில் தொடங்கி, இருபத்தோராம் அகவைக்குள் தொல்காப்பியம், திருக்குறள், கலித்தொகை போன்றவற்றை முழுமையாகவும் பத்துப்பாட்டு, சிலப்பதிகாரம், சிவஞான போதம் சிவஞான சித்தியார் முழுமையும் நெட்டுருச் செய்து முடித்ததாகவும், யாப்பருங்கலம், நன்னூல், இறையனார் அகப்பொருள் தண்டியலங்காரம் இவற்றையும் முறையே மனப்பாடம் செய்ததாகவும் அடிகள் குறித்துள்ளார்.

அடிகளும் ஐயரும் தமிழார்வம் கொள்ளவும், செம்மாந்த நடையில் தம் படைப்புகளைப் படைக்கவும் இப்பயிற்சியே காரணமாக அமைந்தது என்பதை உணரலாம்.

மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையிடம் உ.வே.சா. மாணவராகச் சேர்ந்து, குருகுல வாசமாகத் தமிழ் பயின்றது. பிள்ளையின் அன்புக் கட்டளையால் இசைப்பயிற்சியைத் துறந்து இயற்றமிழை ஏற்றது போன்ற பகுதிகள் சுவையுடன் எடுத்தியம்பப் பட்டுள்ளன.

குறிப்பாக ஆசிரியர், மாணவர் உறவுக்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாக இவை அமைந்துள்ளன. (இப்படி ஓர் உறவு இனியும் அமையுமா என்ற ஏக்கம் எழுவதையும் தவிர்க்க இயலவில்லை).

உரைக்கப்படும் பொருள் உள்ளத்தமைத்து, விரையாமல், வெகுளாமல் விரும்பி முகமலர்ந்து கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உள்ளம் கொள்ளும்படி கற்பித்தார் பிள்ளை அவர்கள்.

ஆசிரியரின் குணத்தொடு பழகி, குறிப்பில் சார்ந்து இரு என இருந்து சொல் எனச் சொல்லி, பருகுவன் அன்ன ஆர்வத்தனாகி, சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கி செவி வாயாக, நெஞ்சு களனாகக் கேட்ட பொருள்களை உள்ளத்தில் அமைத்து நன்னூலார் கூறும் நன்மாணாக்கராக ஐயர் திகழ்ந்ததை அருமையாக விளக்குகிறார் நூலாசிரியர்.

கூசாமல் சேவை குறைவின்றி ஆற்றினான்,
ஆசா(ன்) அடியுறைந்(து) அன்புடனே - பேசான்
மறுத்தொரு வார்த்தை, மனமொப்பி முற்றும்
கருத்துடன் செய்தான் களித்து. பாடல் 81

வீட்டோ(டு) உறைந்தான் விருப்பம் மிகுந்தவனாய்,
பாட்டோடு கற்றான்நற் பண்பெலாம் - நாட்டோர்
வியந்து துதிக்கின்ற வித்தகர்க்குச் செய்தான்
பயன்சற்று(ம்) எண்ணாப் பணி. பாடல் 82

பாசமும் நேசமும் மிக்க மாணவனை மைந்தன் என ஏற்றுப் பழந்தமிழ் நூல்பலவும் பயில்வித்தார் பிள்ளை அவர்கள்.

"சந்தத் தமிழா அன்றிச் சங்கீதமா?" என்று நூலாசிரியர் சுட்டுவது, அற்புதமான பட்டிமன்றத் தலைப்பு.

.... இச்சையுடன்
என்னிடத்துக் கற்க இசைபயிலல் கைவிடு,
உன்னித் தெரிவுசெய் ஒன்று. பாடல் 94

என்று குரு ஆணையிட,

இரண்டில் தமிழையே ஏற்பேன் பாடல் 96

என்ற முடிவுடன் தமிழ்ப் பயிற்சியைத் தொடர்கின்றான் சீடன்.

கும்பகோணம் கல்லூரியில் ஆசிரியராகப் பணியேற்கிறார் உ.வே.சா.

கல்லூரி சென்றேதும் கற்றதில்லை என்றாலும்,
கல்லூரி ஏகினார் கற்பிக்க. பாடல்-162

என்று நயமுடன் நவில்கிறார் நூலாசிரியர்.

உ.வே.சா.அவர்களின் அழியாப் புகழுக்குக் காரணம், ஏடுகளைத் தேடியலைந்து, பாட பேதம் பார்த்து, தொகுத்து, வகுத்து, நூல்களாகப் பதிப்பித்தமையே. எனவே, இப்பகுதி மிகவும் விரிவாக, சுவையாக வெண்பாக்கள் வடிவம் பெற்றுள்ளது. (பாடல்கள் 187–289)

ஏட்டின் பெருமை அறியாமல், சிக்கிய ஏடுகளைச் சீராகக் காக்காமல் எரிதழலில் இட்டனர் அன்றைய அப்பாவித் தமிழர் ஆற்றிலே போட்டார் அருமை அறியாமல், பொல்லாச் செயல்களால் புழுங்கியவர், திக்கு பல சென்றிட்டார், பரணெல்லாம் ஏறிப் பழைய ஏடுகளைக் கண்டார். மனமகிழ்வு கொண்டார்.

ஏடுகளுக்காக ஐயர்

சேரா இடமில்லை, செல்லாத ஊரில்லை,
ஏறாப் பரணென்(று) எதுவுமில்லை பாடல் 212

படைபதைக்கும் வெப்பத்தைப் பார்த்து மருளார்
தடைகண்டு காலமவர் தாழ்த்தார். பாடல் 216

பட்டிதொட்டி என்றவர் பாராரெப் பேதமும்,
அட்டியென ஏதுமிலை ஐயருக்கு - விட்டிடேன்
ஓரேடு கூட உரைத்திவ(ர்) ஆற்றினார்
பாரேற்றும் வண்ணம் பணி. பாடல் 222

படிகள் பலவிருந்தாலும் கச்சிதமாய்க் கண்டு களைகளை
நீக்கினார் பாடல் 230

தக்கதைக் கொண்டு தரமற்றவை தள்ளிப்
பக்குவமாய்ச்செய்தார் சிந்தாமணிப் பதிப்பினை பாடல் 236

வேலைத்திறன் கண்டு வியப்பு மிகுந்து போப்பும் புகழ்ந்தார், பண்டிதர் வின்ஸோனும் வியந்தார்.

சிந்தாமணியின் வளத்தை நுகர்ந்த மறைமலையடிகள் தான் பெற்ற முதல் மகவுக்குச் சிந்தாமணி என்று பெயரிட்டு மகிழ்ந்தமை ஈண்டு நினைவு கூரத்தக்கதாகும்.

சிந்தாமணியைத் தொடர்ந்து ஐயருடைய அயரா உழைப்பால் எண்ணற்ற ஏடுகள் நூலாக்கம் பெற்றன.

மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்.

குமரகுருபரர் நீதிநெறி விளக்கம் 53

என்பதற்கு இலக்கணமாய் மின்னலாய்த் திட்டங்கள் பற்பல மேற் கொண்டு, கன்னலாம் நூல்களைக் கச்சிதமாய் வெளியிட்டார், அன்னைத் தமிழுக்கு அணிபல சேர்த்தார்.

செயற்கரிய செய்வர் பெரியர் என்பதுணர்ந்து, சேதுபதி மன்னர் ஒரூரைத் தானமாக அளிக்க முன்வந்தபோது

....
ஊர்வேண்டேன் என்மறுப்பை ஒப்பிடுவீர் சீர்கொண்ட
நெஞ்சகம் முற்றும் நிறைந்திடும் உம்மன்பைப்
பஞ்சமற வேட்பேன் பணிந்து பாடல் 291

என்று ஐயர் பணிவுடன் மறுத்தார்.

யா அ மிரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால்
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே பரிபாடல் 5

என்ற சங்கப் புலவரின் சான்றாண்மையைச் சாமிநாதனிடம் காண்கிறோம். மிகுந்த பெருமிதம் கொள்கிறோம்.

"பெரிதின் மிகப் பெரிய பேராசான்" என்று இவர் பெற்ற "மகா மகோபாத்யாய" என்ற பட்டத்தை நூலாசிரியர் தமிழாக்கம் செய்துள்ளமை நயமுடைத்து.

திருமுறைகளிலும், ஆழ்வார் பாடல்களிலும் பிற தமிழ் இலக்கியங்களிலும் நூலாசிரியருக்குள்ள ஆழங்காற்பட்ட அறிவை நூலெங்கும் அவர் பயன்படுத்துகின்ற முன்னோர் சொற்களை முறையாகப் போற்றுகின்ற தன்மை புலப்படுத்துகின்றது.

“உம்பர் உலகத்து உவப்பு” (பாடல் 76) “ஒல்லையிது செய்வேன்” (பாடல் 140) கோதில்லா மாணவர் (பாடல் 169) “கோதகற்றி” (பாடல் 225) “அலமந்து” (230) “சிற்றஞ் சிறு காலை” (பாடல் 233) மன்னுபுகழ் (பாடல் 235) “விச்சை” (பாடல் 282) “தூசாவேன்” (பாடல் 331) போன்ற அழகிய சொற்களைத் தம் பாடல்களில் நூலாசிரியர் பொன் போலப் பொதிந்துள்ளார்.

தம் குருநாதர் பிள்ளையின் வாழ்வைக் கொள்ளை அழகோடு கூறினார் உ.வே.சா.அவ்வன்பிற்குச் சற்றும் குறையாமல் சாமிநாத வெண்பாவைத் தமிழ் கூறும் நல்லுலகின் சார்பில் நன்றி மலர்களாய் அர்ப்பணித்துள்ளார் நூலாசிரியர் வரதராசன் அவர்கள்.

அவர்தம் இலக்கியப்பணி தொடரக் கற்பகாம்பிகை உடனுறை கபாலியை இறைஞ்சுகிறேன்.

அன்புடன்

சாரதா நம்பிஆரூரன்
(சிற்றம்பலம்)
30–முத்து கிருஷ்ணன் தெரு,
மைலாப்பூர்,
சென்னை – 600 004



அணிந்துரை

பொற்கிழிக் கவிஞர்

பேராசிரியர். சொ.சொ.மீ.சுந்தரம்

அணிந்துரை

தமிழுக்கு உயர்தனிச் செம்மொழி என்று பெயர். இந்தப் பெயர் வரப் பெரிதும் காரணமாயிருந்தவர் தமிழ்த் தாத்தா சாமிநாதையர். 19–02–1855ல் தோன்றி, 28–04–1942ல் மறைந்த இப்பெருந்தகை. அறுபதாண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் ஏடுகளைத் தேடித் தொகுத்துச் சிறப்பாகப் பதிப்பித்தவர். இவருக்குப் பொருளாசை இல்லை. புகழாசை இல்லை. இவர் கொண்ட தமிழாசை மட்டும் தணியவில்லை. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை என்ற தமிழ்க்காவிரி பொங்கிப் பெருகியது. அந்தக் காவிரியில் திளைத்து, அதைக் குடத்தில் எடுத்துக் கொண்டு வந்து, இல்லம் தோறும் குடிக்கக் கொடுத்து, தாமும் குடித்து மகிழ்ந்தவர் சாமிநாதையர். தமிழ்வாழும் காலமெல்லாம் தான் வாழும் தகுதி பெற்ற சாமிநாதையர் புலவர் பாடும் புகழ் பெற்றவர். “தமிழ்க்காதல்” என்ற தரமான ஆய்வு நூலை எழுதியவரும், என்னுடைய மதிப்பு மிக்க பேராசிரியருமாகிய வ.சுப.மாணிக்கனார் அவர்கள். சாமிநாதரைப் புகழ்ந்து பாடிப் பரவினார்கள்.

பார் காத்தார் ஆயிரம் பேர்; பசித்தவர்க்குப்
பயிர் காத்தார் ஆயிரம் பேர், பாலர்க்காக,
மார் காத்தார் ஆயிரம் பேர்; வாழ்ந்த நாட்டில்
மனங்காத்த தமிழ்த்தாய் என்னுடைமை எல்லாம்
யார் காப்பார் எனக் கேட்க, ஒருவன் அம்மா
யான் காப்பேன் எனஎழுந்தான் சாமிநாதன்,
நீர்காத்த தமிழகத்தார் நெஞ்சினுள்ளான்,
நிலைகாத்த இமயத்தின் நெற்றி மேலான்.

பொய்யாத தமிழ்க்குமரி ஈன்ற சாமி
போகாத புகழ்க்கன்னி மணந்த நாத,
செய்யாத மொழித்தொண்டு செய்த ஐய,
சிறுகாத நெஞ்சத்தேம் வணங்கும் செம்மல்,
எய்யாத திருவடியால் எண்பதாண்டும்
இளையாத உள்ளத்தால் எங்கும் சென்றே
நெய்யாத தொன்னூல்கள் நெய்து வைத்த,

நீங்காத தமிழ்க்குயிரே! நின்தாள் வாழ்க.

என்ற மாணிக்கப் பாடல்கள், சாமிநாதையர் திருவடி மலர்களாகச் சிறந்து விளங்குகின்றன.

நிதியறியோம், இவ்வுலகத் தொருகோடி இன்பவகை
நித்தம் துய்க்கும்
கதியறியோம் என்று மனம் வருந்தற்க, குடந்தைநகர்க்
கலைஞர் கோவே,
பொதிய மலைப் பிறந்த மொழி வாழ்வறியும்
காலமெலாம்
புலவோர் வாயில்,
துதியறிவாய், அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்,
இறப்பின்றித்
துலங்கு வாயே

என்று பாரதியார் பாடிய பாடல் வரிகள் சாமிநாதையர் கழுத்தில் தங்கத் தமிழ் மாலையாக ஒளி வீசுகின்றன.

மாணிக்கப் பாடல் மலரடி சேர்ந்தது. பாரதி பாடல் கழுத்தில் படர்ந்தது. இதைக் கண்ட ஒரு கவிஞர் சாமிநாதருக்கு வைரமுடி சூட்ட ஆசைப்பட்டார். தங்கத் தமிழில் வெண்பா ஆக்கினார். நானூற்று நாற்பத்தேழு வைரம் பதித்தார். சாமிநாத வெண்பா என்று தமிழ்த்தாத்தாவுக்கு மணிமுடி சூட்டினார். அவர்தான் இந்நூலாசிரியரும், தரமான கவிஞருமான சிங்கப்பூர் வரதராசன் அவர்கள்.

எப்படி எழுதினாலும் கவிதை என்றே எண்ணிக் கொண்டிருக்கும் இக்கால்த்தில் இவர் தப்பிப் பிறந்த தமிழ்க்கவிஞர். நல்ல வெண்பா நயமுடன் பாடுவார். சொல்லைக் குழைத்துச் சுவையுடன் தருவார். புலவர் என்பதால்,

என்பால் சிறிதளவும் இல்லை திறனெனினும்
வெண்பா வடிக்க விழைகின்றேன் 10

என்று பொய் சொல்லுவார். அது அடுத்த பாட்டிலேயே தெரிந்து விடும்.

கைம்மாறு செய்ய முடியாத அளவுக்குப் பணிவிடை செய்த சாமிநாதருக்கு இவர் வெண்பா மாலை சூட்டித் தன்னுடைய நன்றியை வெளிப்படுத்துகிறார். இந்நூலை இவர் பாடவில்லை. இவருக்குள் புகுந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை, தன் சீடனுக்குத் தமிழ் மாலை சூட்டியிருக்கிறார், எளிமையாகப் பாடவும் என்னால் முடியும் என்று காட்டியிருக்கிறார்.

கவியிவர் கூறினால் கன்னலும் கைக்கும்,
செவிதனில் தேன்மிகச் சேரும் - புவியுறைவோர்
போற்றிடும் வண்ணம் புகலும் அரியதோர்
ஆற்றலவர் கொண்டார் அறி. 174

என்று சாமிநாதையர் புகழ்பாடும் பாடல், சாமிநாத வெண்பாப் பாடிய வரதராசனுக்கும் பொருந்துவதாகும்.

சிறுபையன் ஆனாலும் செந்தமிழ்க் கல்வி
உறுதுணை என்றே உணர்ந்தான். 36

என்று இவர் பாடும் பொழுது, இந்த நிலை தமிழ் மண்ணில் என்று வந்திடுமோ என்ற ஏக்கம் உண்டாகிறது.

விலை சொல்லிக் கல்வியை விற்காமல் அன்று
கலையென்றே ஈந்து களித்தார். 39

என்றும்,

"தாய்மொழி கற்காத் தவறிழையேன்" என்றுதன்
ஆய்ந்த முடிவை அறிவித்தான் - "மாய்கின்ற
நாள்வரை கற்றிருப்பேன் நற்றமிழை" என்றொரு
சூள்தன்னை உள்வைத்தான் சூழ்ந்து. 42

என்றும் பாடப்படும் வரிகள், கண்ணை மூடிக்கொண்டு கிணற்றில் விழும் இன்றைய சமுதாயத்தின் கண்களைத் திறக்கும் கவிதை விளக்குகளாகத் தோன்றுகின்றன. ஆசிரியரின் எண்ண ஓட்டத்திற்கேற்பக் கவிதையும் ஓடுகிறது.

பிறவிப் பயன்பெற்றேன்; பிள்ளையிடம் வந்தேன்;
அறிவுப் பசியிங் கடங்கும் 68

என்றும்

பிள்ளைவாள் இட்டபெயர் பின்னாள் அவனுக்குக்
கொள்ளையாய் நற்பெயரைக் கூட்டிற்று. 73

என்றும்

அந்தாதி கூட்டும் அளப்பில்லா இன்பத்தை
"இந்தா! எடுத்துக்கொள்" என்றீந்தார் 84

என்றும்

புலமையுடன் கைகோர்த்துப் போகும் வறுமை,
உலகின் இயல்பென்றே ஓர்ந்தான். 101

என்றும் வரும் வரிகள் உள்ளத்தின் ஓட்டத்தை உடனே படம் பிடித்துக் காட்டுகின்றன. எளிமையும், இனிமையும் தமிழெனலாகும் என்று பாடத் தோன்றுகிறது. இலக்கண வரையறைக்கு உட்பட்டு எளிமையாக, இனிமையாகப் பாடுவது சிங்கப்பூர் வரதராசனுக்குச் செந்தமிழ்த் தாய் கொடுத்த சிறந்த வரமாகும்.

ஏடுதேடச் சாமிநாதர் பட்ட பாடு பெரும்பாடு. அதை விளக்கி,

எந்தவித மாயினும் ஏடுகைக் கொள்ளவே,
தந்திடுவார் தம்முயிரும் தான். 204

என்றும்,

கறையான் துணைக்கொண்டு காலன் புசித்தான்
நிறையவே ஏடுகளை நித்தம் - குறையிதனைப்
போக்கத் தொடுத்தார் புனிதமிகு போர்தன்னை,
ஆக்கமுற வென்றார் அதில். 208

என்றும் பாடுவது மிகச் சிறப்பாக இருக்கிறது. அவர் கொண்ட தமிழ்க் காதல்,

காதவழி எண்ணார்; கதிரவன் சூடெண்ணார்,
மாதம்பொழியும் மழைஎண்ணார். 227

என்ற வரிகளில் வெளிப்படுகின்றது.

அவர் புகழ்பாடும் கல்வெட்டாக,

பாட்டும் பொருளும் பகுத்திவர் கூறுவதைக்
கேட்டதும் உள்ளம் கிறுகிறுக்கும் - நாட்டமுடன்
நற்றமிழ் வேள்வி நடத்திக் களித்தாரை
எற்றைக்குக் காண்போம் இனி. 380

என்ற பாடல் ஒளி வீசுகிறது.

சாமிநாதையருக்குத் தமிழ்நாடு பட்ட நன்றிக் கடனைச் சிங்கப்பூர் வரதராசன் தீர்த்து வைத்ததால், தமிழ்கூறும் நல்லுலகம் இவருக்கு நன்றிக்கடன் பட்டுவிட்டது

எத்தனை காவியம் இன்று படிக்கின்றோம்?
அத்தனைக்கும் பின்புலம் ஐயரன்றோ! 405

என்ற வரிகளில் தமிழ்த்தாத்தா சாகாத வரம் பெற்றுவிட்டார்.

நஞ்சாமி நாதனின் நற்கவிதை நாட்டோர்க்குப்
பஞ்சாமிர் தம்தான் பகர். 413

என்று படிக்கும் போது, பழனிப் பஞ்சாமிர்தம் சிங்கப்பூரில் சிறப்பாகக் கிடைப்பது தெரிகிறது. வகுப்பாசிரியர், வரலாற்றாசிரியர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், கவிஞர் என ஐந்துமுகம் கொண்ட அறிவு விளக்கான சாமிநாதையரின் வெண்பா, பஞ்சாமிர்தமாக இல்லாமல் வேறு எப்படி இருக்கமுடியும்? பழனியாண்டவன் பஞ்சாமிர்தத்தைத் திருவேரகச் சாமிநாதன் திருடிக் கொண்டு வந்துவிட்டார். இந்தத் திருட்டு சுவையான திருட்டு. இதற்குக் காரணமான கவிஞர் வரதராசனை வாயார வாழ்த்தி மனமாரப் பாராட்டுகிறேன். இந்நூலை நாம் வாங்கிப் படிப்பது, சாமிநாதையரிடம் பட்ட தமிழ்க்கடனுக்கு வட்டி மட்டுமாவது கட்டுவதாகும். அன்னை மீனாட்சி வரதராசனுக்கு அருள்மழை பொழியட்டும்.

சங்கத் தமிழ்தந்த சாமிநா தையருக்குத்
தங்கத் தமிழ்வெண்பா சாற்றியதால் - சிங்கப்பூர்
வாழும் கவிஞர் வரதராசன் வாழ்க,
சூழும் புகழால் தொடர்ந்து.

மெள்ளவெண்பாப் பாடுதற்கு மீனாட்சி சுந்தரம்
பிள்ளையே வந்து பிறந்தாரோ? - தெள்ளுதமிழ்
அன்னை கொடையோ அருள்வரத ராசன்சீர்
மன்னுதமிழ் வெண்பா மழை.

ஏடெல்லாம் தேடி எடுத்துப் பதிப்பித்து
நாடெல்லாம் போற்றுபுகழ் நாட்டியதைப் - பாடுதமிழ்
வெண்பா சிறந்ததுவா? வேள்வரத ராசனுளப்
பண்பு சிறந்ததுவா? பார்.

எங்கெல்லாம் சென்றானோ என்னதுயர் பட்டானோ
அங்கெல்லாம் சென்றே அருந்தமிழால் - மங்காத
வெண்பா விளக்கேற்றி மேலாம் ஒளிதந்தான்
நண்பன் வரதன் நயந்து.

தேடித் திரிந்துதமிழ் சேர்த்த திருவடியை
நாடிப் புகழ்ந்துரைத்து நன்றியுடன் - பாடியதால்
சிங்கப்பூர், வாழ்க திகழ்வரத ராசனிசை
பொங்குதமிழ் வாழ்க பொலிந்து.

பணிவுள்ள

சொ.சொ.மீ. சுந்தரம்

15-06-2012

திருவாசகம்,
B1, வதுமிதா, வசுதாரா வளாகம்
84, திருப்பரங்குன்றம் சாலை,
மதுரை – 625 003.
கைபேசி – 94430 47060.

வாழ்த்துரை

பேராசிரியர் டாக்டர்
சுப.திண்ணப்பன்
(சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம்,
சிம் பல்கலைக்கழகம், சிங்கப்பூர்)

வாழ்த்துரை

எழுத்து முதலா ஈண்டிய அடியில்,
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பு எனமொழிப யாப்பு அறி புலவர் (தொல்.செய்.74)

இந்தத் தொல்காப்பிய நூற்பா, வடிவமும் (எழுத்து முதலா ஈண்டிய அடியில்), பொருளும் (குறித்த பொருளை) ஒருங்கிணைய (முடிய), படைப்பாளி ஆக்குவது, (நாட்டல்) தான், யாப்பு என்று யாப்பிலக்கணப் புலவர் கூறுவர் என்னும் பொருளை உணர்த்தும். இந்நூற்பா யாப்பின் தன்மையை மட்டுமின்றித் தொன்மையையும் காட்டுவதாகும். இத்தகைய யாப்பிலக்கணம் கூறும் நால்வகைப் பாக்களுள் (வெண்பா, அகவற்பா, கலிப்பா, வஞ்சிப்பா) நாயகமாக விளங்குவது வெண்பா. இலக்கணக் கட்டுப்பாடு மிகுதியாகக் கொண்ட காரணத்தால் எளிதில் இயற்ற இயலாத ஏற்றம் மிக்கது வெண்பா. செப்பலோசையால் சிறந்து நிற்கும் வெண்பாவில் ஒவ்வொரு சொல்லையும் சீராக அமைத்து (வகையுளி வராமல்) பாடுவது இன்னும் சிறப்பாகும்.

ஆசிரியப்பா கோலோச்சிய சங்க இலக்கியத்திற்குப் பிறகு பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில், வெண்பாவின் செல்வாக்கினைக் காண்கிறோம். முத்தொள்ளாயிரம், காரைக்கால் அம்மையாரின் அற்புதத் திருவந்தாதி, முதலாழ்வார் பாடல்கள் ஆகியவற்றில் வெண்பா யாப்பு சிறப்பாக விளங்குவதைப் பார்க்கின்றோம். பாரதக் கதையை வெண்பா யாப்பில் பாடிய நூல், (பாரத வெண்பா) என்பர். அது நமக்குக் கிடைக்கவில்லை. நளனது வரலாற்றை வெண்பா யாப்பில் சிறு காவியமாக்கி வெண்பாவிற் புகழேந்தி எனப் பெயர் பெற்றவர் புகழேந்திப் புலவர். பாரதிதாசன்

மணிமேகலை வெண்பா பாடியுள்ளார். கவிஞர் வாலியும் முருகனைப் பற்றி ஒரு வெண்பா நூல் இயற்றியுள்ளார். சிங்கப்பூரில் வெண்பாச் சிற்பி இக்குவனம் சித்திரக்கவி, அந்தாதி ஆகியவற்றின் அடிப்படையில் பல சான்றோர்களைப் பற்றி வெண்பாவால் நூல்கள் இயற்றியுள்ளார்.

இந்த வரிசையில் சிங்கப்பூர்க்கவிஞர் அ.கி.வரதராசன் இன்று தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையரின் வாழ்க்கை வரலாற்றைச் "சாமிநாத வெண்பா" என்னும் பெயரில் நூலாக்கித் தந்துள்ளார். இதற்கு முன் இவர் கண்ணப்பர். திருநீலகண்டர், சிறுத்தொண்டர், மெய்ப்பொருள் நாயனார் ஆகியோர் வரலாற்றை வெண்பா யாப்பில் குறுங்காவியம் போல இயற்றிச் சிங்கப்பூர் திருமுறை மாநாடுகளில் உணர்ச்சி பொங்க அரங்கேற்றியுள்ளார். சிவனடியார்களை வெண்பாவில் பாடிய சிறப்புடைய வரதராசன் இப்போது தமிழடியாராகிய உ.வே.சா.அவர்களைப் பாடுகிறார்.

சிவமும் தமிழும் ஒன்று என்றுதானே நம் அருளாளர்கள் பாடியுள்ளனர். "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்" என்பது சுந்தரர் சிவனைக் குறிப்பிடும் சொற்றொடர். "நறை பழுத்த துறைத்தீம் தமிழின் ஒழுகு நறுஞ் சுவையே" என்று சிவனின் சக்தியாகிய மீனாட்சியை அழைக் கின்றார் குமரகுருபரர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் மாணவராகிய சாமிநாதையரைத் தமிழ் அடியாரை, சிவனடியாராகக் காண்பதில் தவறென்ன?

"தழற்புரை சுடர்க் கடவுள் (சிவன்) தந்த தமிழ்" என்றுதானே கவிச்சக்கர வர்த்தி கம்பன் தம் அகத்தியப் படலத்தில் குறிப்பிடுகிறான். வரதராசனும் கம்பராமாயணக் கடலில் குளித்துத் திளைத்துப் பல கட்டுரை முத்துக்களை எடுத்தவர். "அன்னையின் ஆணை" என்னும் தலைப்பில், இலக்குவன் பற்றி அரியதோர் ஆய்வு நூலை ஆக்கிய அ.கி.வரதராசன் கம்பன் அடிச்சுவட்டைப் பின்பற்றாமல் இருப்பாரா என்ன? சிவனடியாரும் சிவன் தந்த தமிழ் அடியாரும் சிறப்பால் ஒருவரே அன்றோ?

சாமிநாத வெண்பா என்னும் இந்நூலில் 400க்கும் மேற்பட்ட வெண்பாக்கள் உள்ளன. இந்நூலின் உள்ளடக்கம் உ.வே.சா. வாழ்க்கை வரலாறு. இதற்கு மூலம் உ.வே.சா. தன் வரலாற்றை உரைநடையில் கூறும் சுயசரிதை (Autobiography) "என் சரித்திரம்" என்பதும், உ.வே.சா அவர்களின் தலைமாணாக்கர் கி.வா.ஜகந்நாதன் எழுதிய சரிதை (Biography) நூலாகிய "என் ஆசிரியப் பிரான்" என்னும் தலைப்பிட்ட வாழ்க்கை வரலாற்று நூலும் ஆகும்.

இந்நூல் உருவம், எளிமை, இனிமை, தெளிவுமிக்க நேரிசை வெண்பாக்களைக் கொண்டது. நம் தொல்காப்பிய நூற்பா கூறுவதற் கேற்ப உள்ளடக்கமும், உருவமும் ஒன்றாக இணைந்து நிற்கும் இயல்பை இப்பாக்களில் காணலாம். வெண்பாவில் வந்துள்ள சொற்கள் எல்லோர்க்கும் பொருள் விளங்கும் எளிமையுடன் அமைந்துள்ளன. எளிமையாக இருப்பினும், இவை கருத்தால் ஆழம் கொண்ட அருமையும் அமைந்திருக்கக் காணலாம். எளிமையில் அருமை, அருமையில் எளிமை என்று அமைந்திருப்பதால் இனிமை இயல்பாக இலங்குகிறது. நடை ஆற்றொழுக்காகச் செல்வதால் யாரும் விரைந்து படிக்க முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக வகையுளி இல்லாமல் – அதாவது சொற்களைச் சீர், தளை, இலக்கணம் இவற்றிற்காகச் சிதைக்காமல் – இயற்றி இருப்பதையே இந்நூலின் சிறப்பினும் சிறப்பாக இயம்பலாம். சில வெண்பாக்கள் இரு குறள் வெண்பாக்களின் இணைப்புப் போல இருக்கும் இயல்பினையும் கண்டு நான் இன்புற்றேன்.

சாமிநாத வெண்பா என்னும் தீம் பாற்கடலில் நான் சுவைத்த சில துளிகள் இதோ,

தமிழ்த்தாத்தாவுக்குத் தக்கதோர் விளக்கம்

அப்பாவோ அம்மாவோ ஆருமிலா எம்மொழிக்குத்
தப்பாமல் வந்தாரித் தாத்தாவும் – ஒப்பார்
எவருமே இன்றி இமயமாய் நின்ற
அவர் சரிதை சொன்னேன் அகழ்ந்து. 441

புகழ் வேண்டாப் புலவர்

தன்புகழ் நாடார், தமிழ்நலமே நாடிடுவார்;
என்புகழ்வேன் ஐயா இவரையான்? - மன்பதையில்
உண்டோ இவர்போல ஒன்றிப் பணிசெய்தார்?
கண்டால் அவரைநீ காட்டு. 403

ஈடில்லாத் தொண்டு

காத்தளித்தார் நூல்பலவும் காலன்கொண் டேகாமல்
மூத்தவய தென்றாலும் முன்னின்றார் - ஏத்துவேன்
எஞ்சாமி நாதனின் ஈடில்லாத் தொண்டுதனை
நெஞ்சார என்றும் நினைந்து 417

ஐயர் மறைந்தாரா?

ஐயர் மறைந்ததாய் அத்தனை பேருமே
பொய்யுரை அன்றோ புகல்கின்றார்! - வையத்தில்
எந்நாள் வரையில் இனியதமிழ் வாழுமோ
அந்நாளும் வாழ்வார் அவர். 371

ஒப்பில்லா நாயகன்

புதுப்பித்தார் ஏடுகளைப் புத்துயிர் ஊட்டிப்
பதிப்பித்தார் பல்வகைப் பாக்கள் - மதிப்புடன்
தூயதமிழ் நூலைத் துலக்கும் தனியொரு
நாயகனாய் வாழ்ந்திருந்தார் நன்கு. 401

நஞ்சாமி நாதனின் நற்சரிதை நாட்டோர்க்குப்
பஞ்சாமிர் தம்தான் பகர் 413

என்று வரதராசன் கூறுவதைப் படித்தேன். நாட்டோர்க்கு மட்டுமின்றிக் கேட்டோர்க்கும் இது பஞ்சாமிர்தம் தான். மேலே குறிப்பிட்ட ஐந்து பாடல்கள் போதாவோ பஞ்சாமிர்தம் தான் என்பதை நிலை நாட்ட ?

சாமிநாத வெண்பாவைச் சாற்றிய பாவுலரைப்
பூமிதனில் வீழ்ந்துநீ போற்று

என்பது இந்த நூலைப் படித்து முடித்ததும் என் இதயம் எனக்கு இட்ட கட்டளை. நீங்களும் இந்நூலைப் படியுங்கள். இந்தக் கட்டளையை உங்கள் உள்ளமும் உரைக்கும்.

என் சாதாரண வேண்டுகோள் ஒன்றை அன்புக் கட்டளையாகவே ஏற்றுத் தமிழ்த்தாத்தா உ.வே.சா. வாழ்க்கை வரலாற்றை வெண்பாவில் வடித்துத் தமிழன்னைக்குத் தக்கதோர் பணியாற்றிய அ.கி.வரதராசன் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறேன். பாராட்டிப் போற்றுகிறேன்.

சுப.திண்ணப்பன்

Blk 107, Towner Road,
#03-336,
Singapore - 321107

என்னுரை

வரதராசன்.அ.கி.

2011 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி, சிங்கப்பூரில் தமிழ் விழா ஒன்று தமிழ்த் தாத்தா உ.வே.சா அவர்களைச் சிறப்பித்து நடைபெற்றது. சிங்கப்பூரில் கடற்கரைச்சாலைக் கவிமாலை அமைப்பு அந்த விழாவை ஏற்பாடு செய்திருந்தது. இவ்விழாவுக்குச் சிங்கப்பூர் தேசிய பல்லைக்கழகப் பேராசிரியர் சுப. திண்ணப்பன் அவர்கள் தலைமை ஏற்றார். தமிழகத்தின் பொற்றாமரைக் கலை இலக்கிய அமைப்பின் தலைவரும் பாரதிய ஜனதா கட்சிப் பிரமுகருமான திரு இல. கணேசன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

விழாவில் பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருந்தாலும், திரு. இல.கணேசனின் உரைதான் விழாவின் மிக முக்கியமான அங்கமாக விளம்பரப் படுத்தப் பட்டிருந்தது. என்னைப் போன்றே பலரும் மிக விரைவான மிக ஆழமான ஒரு உரையை அவரிடமிருந்து எதிர்பார்த்து, விழாவிற்குச் சென்றிருந்தோம். ஆனால் திரு.இல.கணேசன் அவர்கள் அன்றைய விழாவின் பல செய்திகளைக் கூறிவிட்டு அதன் பின்னர் தான் அன்றையப் பேச்சின் முக்கிய விஷயமான சாமிநாதையர் பற்றிப் பேசத் தொடங்கினார். எனவே அவருடைய உரை சாமிநாதையர் பற்றிய பேருரையாக அமையாமல், சிற்றுரையாகவே அமைந்தது.

உ.வே.சா. அவர்களின் சுய சரிதையான "என் சரித்திரம்" புத்தகத்திலிருந்து பல அருமையான, சுவையூட்டும் பகுதிகளை அவர் எடுத்துக் கூறினார். இருந்தாலும் பேச்சின் தொடக்கத்திலிருந்தே மற்ற விஷயங்களில் அவ்வளவு நேரம் செலவழிக்காமல் சாமிநாதையர் பற்றிய செய்திகளை மட்டுமே அவர் கூறியிருந்தால் தமிழ்த்தாத்தா பற்றிய பல செய்திகள் கிடைத்திருக்குமே என்ற ஆதங்கம் அன்றைய நிகழ்விற்கு வந்திருந்த பலருள்ளும் இருந்தது.



நிகழ்ச்சி முடிந்து வீட்டிற்குப் போன பிறகு, முனைவர், பேராசிரியர் திண்ணப்பன் ஐயாவிடமிருந்து எனக்குத் தொலைபேசி அழைப்பு வந்தது. அன்றைய விழா பற்றியும், நேரமின்மை காரணமாக நல்லதோர் பேருரையைக் கேட்கும் வாய்ப்பை இழந்து விட்டோம் என்றும் பேசிக் கொண்டிருந்தோம். திடிரென்று, அப்பேச்சின் இடையே, ஐயா அவர்கள் "உ.வே.சா மீது ஒரு வெண்பா நூல் எழுதுங்கள்" என்று என்னிடம் கூறினார்.

நான் மலைத்துப் போய் விட்டேன். நானாவது வெண்பாவாக அதுவும் முழுவதாக நூல் ஒன்று எழுதுவதாவது என்று திகைத்தேன்.

ஆனால் ஐயாவோ மேலும் மேலும் இது பற்றிப் பேசிக்கொண்டே போனார்கள். "நளனுக்கு வாய்த்த வெண்பாப் போலச் சாமிநாதனுக்கு உங்கள் வெண்பா அமையலாம் பெயரும் சாமிநாத வெண்பா என்று வைத்துக் கொள்ளுங்கள்" என்று மேலும் மேலும் என்னை உற்சாகப் படுத்திக் கொண்டே போனார்கள்.

குருவி தலையில் பனங்காயை வைப்பது போலல்லவோ இப்பணி அமையும் என்று மயங்கினேன். மிகவும் தயங்கினேன். ஆனாலும் அடி மனத்தில் ஒரு மகழ்ச்சிக் கீற்று ஒளிவிட்டது. நான் நன்றாக வெண்பா வடிப்பேன் என்று ஐயா மதிப்பிட்டிருக்கிறார்கள் என்று மகிழ்ந்தேன். இவ்வளவு பெரிய பொறுப்பை என்னிடம் ஐயா அவர்கள் ஒப்படைக்கிறார்களே என்று ஒரு புறம் மகிழ்ச்சியும் மறுபுறம் பணியின் மாபெரும் அளவினை எண்ணிக் கவலையும் ஒருசேர உற்றேன்.

இவ்விடத்தில் ஒன்று சொல்ல வேண்டும். சிங்கப்பூரைப் பொறுத்த அளவில், தமிழ் என்றால் திண்ணப்பன் ஐயா. திண்ணப்பன் ஐயா என்றால் தமிழ். அவ்வளவுதான். எனவே, அவர் சொன்ன பிறகு அதற்கு மறு பேச்சு என்பது கிடையாது என்பதுதான் என் எண்ணம். இதை மனங்கொண்டு இம்முயற்சியில் இறங்கினேன்.

“என் சரித்திரம்” புத்தகம் என்னிடம் இருந்தது. ஏறக்குறைய முப்பதாண்டுகளுக்கு முன்னால் அதை ஒருமுறை படித்திருக்கிறேன். இருந்தாலும் அது போதாதென்று மறுமுறை மிகவும் ஆர்வத்தோடும் கவனத்தோடும் படித்தேன். அவர் எழுதிய சுயசரிதை அவருடைய வாழ்நாளில் ஒரு பகுதி வரை தான் எழுதப் பட்டிருந்தது. எனவே அவருடைய வாழ்க்கை வரலாற்றின் பிற்பகுதியாகிய – (என் சரித்திரம் முடிவடைந்த கட்டத்திலிருந்து ஐயரவர்கள் மறையும் வரையிலான கால கட்டத்தை நூல் வடிவில் தந்த) திரு.கி.வா. ஜகந்நாதன் எழுதிய “என் ஆசிரியப் பிரான்” நூலை சென்னை சென்றிருந்த நண்பன் குமாரை வாங்கி வரச்சொன்னேன். அதையும் படித்தேன். உ.வே.சா அவர்கள் எழுதிய “நான் கண்டதும் கேட்டதும்”, “நினைவு மஞ்சரி” இவற்றையும் குமார் வாங்கி வரவே அவற்றையும் படித்தேன்.

இவற்றில் என் சரித்திரமும், என் ஆசிரியப் பிரான் நூலும் நேரடியான வாழ்க்கை வரலாற்று நூல்கள். இவை இரண்டுமே மொத்தமாக ஆயிரம் பக்கங்கள். உ.வே.சா எழுதிய மற்ற இரு நூல்களும் ஏறக்குறைய இதே அளவில் அமையும். இவற்றில் உள்ள அனைத்தையும் கவிதை வடிவில் சொல்ல இயலாது என்று அறிந்து கொண்டேன். உரை நடையில் சுவை குன்றாமல் எத்தனை பக்கங்கள் வேண்டுமானாலும் எழுதிவிட இயலும், இருப்பினும், கவிதையில் அது சாத்தியமன்று என்பது என் எண்ணம். எனவே இந்நூல்களில் கண்ட செய்திகளின் தொகுப்பாக, உ.வே.சா. அவர்களின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கும் முயற்சியாக என் பணியை அமைத்துக் கொண்டேன். வெறும் செய்திக் குறிப்பாக மட்டுமே அமைத்து விடாமல், அச் செய்திகளைப் பற்றி, அந்நிகழ்வுகளைப் பற்றிய என் கருத்துக்கள், அவை என்னுள் ஏற்படுத்திய தாக்கம் இவற்றையும் சொல்லும் படியாகப் பாக்களை வடித்தேன். (என் கருத்துக்கள் என்பது என்போன்ற சராசரி வாசகன் ஒருவனுக்குத் தோன்றுகின்ற எண்ணங்கள்)

ஐயரவர்கள் செய்த பணிகளில், தலையாய பணி பண்டைய காலத்தின் ஏடுகளைக் கண்டெடுத்து, அவற்றை ஆராய்ந்து,

அவற்றைச் செப்பனிட்டு, அவற்றில் காணப்பட்ட பல்வேறு பாடங்களிலிருந்து, சரியான ஒரு பாடத்தைத் தெரிவு செய்து, அதன் பிறகு அவற்றை அச்சேற்றி நூல் வடிவில் பதிப்பித்ததே ஆகும். சீவக சிந்தாமணிக்கு மட்டும் அவரிடம் 28 ஏட்டுச் சுவடிப் பிரதிகள் இருந்தனவாம். அந்த ஏடுகள் இருந்த நிலையில் – அதாவது தொட்டாலே நொறுங்கிப் போய்ப் பொடிப் பொடியாகி விடும் நிலையில் – அவற்றைச் சாமிநாதையர் மிகக் கவனமாகக் கையாண்டிருக்க வேண்டும். ஒரு சுவடியையே கண்ணாடிப் பொருளைக் கையாள்வது போலக் கவனமாகப் பேண வேண்டுமென்றால், 28 சுவடிப் பிரதிகளைப் பேணுகின்ற பணி எவ்வளவு கடினம் என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

அதுமட்டுமின்றி, அவர் வாழ்ந்த காலத்தில் தற்போதுள்ளது போலப் போக்குவரத்து வசதிகள் கிடையாது. பேருந்து வசதிகளோ புகைவண்டிப் பிரயாணமோ பரவாத காலம் அது. பல ஊர்களுக்கும் நடந்துதான் போக வேண்டும். தொலைத்தொடர்பு வசதிகள், வாகன வசதிகள் எதுவுமே இல்லாத ஒரு காலத்தில் ஏடு பற்றிய செய்திகள் கிடைத்தால் உடனே அங்கு சென்று அதைப் படித்துப் பார்க்கவேண்டும் என்ற ஆர்வம், இவ்வசதியின்மையை ஒரே அடியாக வீழ்த்தி அவரைச் செயலாக்கம் கொள்ளத் தூண்டியது. அதேபோல எல்லாப் பயணங்களும் இறுதியில் நன்மை பயப்பனவாக அமைந்துவிட வில்லை ஐயருக்கு. பல பயணங்கள் வெற்றுப் பயணங்களாக முடிந்தன. அப்பயணங்களில் கிட்டிய ஏடுகளால் எந்தவிதப் பயனும் கிட்டவில்லை. பலர் ஏடுகளைத் தர முன்வரவில்லை. இதற்கான முயற்சியில் ஐயர்தம் கைப்பணத்தைக் கொண்டுதான் இறங்கினார்.

இந்தப் பின்னணியை நன்கு உள்வாங்கிக்கொண்டால், அவருடைய சேவை எவ்வளவு பெரியது என்று புலப்படும். அவர் செய்த பணியின் மேன்மையை நம்மால் முற்றிலும் உணரமுடியும். இதனால்தான் அவர் சரிதையை எழுதும்போது, இம்முயற்சி பற்றியும், அக்காலத்தில் ஏடுகளைப் பற்றி மக்கள் கொண்டிருந்த எண்ணங்கள்

பற்றியும் மிக மிக விவரித்து எழுதினேன். எனவே இப்பணி பற்றிய பாடல்கள் அதிக எண்ணிக்கையில் காணப்படலாம் இந்நூலில். கூறியது கூறல் என்ற பிழை இருக்கலாம் ஆனால் ஐயரவர்கள் பணி பற்றி எத்தனை பாடல்கள் யாத்தாலும் போதாது என்பது தானே உண்மை!

கூறியது கூறலெனும் குற்றம் புரிந்தாலும்
ஆறிட வில்லையென் ஆதங்கம் – நேரிலா
அன்னவர் செம்மை அறியாத் தமிழர்கள்
இன்னும் உளரையா இங்கு.

ஐயர் புகழுரைக்க ஆயிரமாம் வெண்பாக்கள்
பெய்வதில் உண்டோ பிழை?

என்றுதான் கூறத்தோன்றுகிறது.

ஐயரவர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை, வரிசையாக ஆண்டு வாரியாக நிகழ்வுகளைத் தொகுத்து வழங்க முயன்றுள்ளேன்.

ஐயரவர் மறைவு குறித்து "இரங்கல் பா" என்பதாக "எற்றைக்குக் காண்போம் இனி" என்ற ஒரே ஈற்றடியில் பத்து வெண்பாக்களும் உள்ளன.

இந்நூலில் ஐயரவர்களின் வாழ்க்கை முக்கிய நிகழ்வுகளின் பட்டியல் ஒன்றும் இணைப்பாக உள்ளது.

இவ்வெண்பாக்களை மட்டும் படித்தால் போதாது. உ.வே.சா எழுதிய "என் சரித்திரம்", கி.வா ஜகந்நாதன் எழுதிய "என் ஆசிரியப் பிரான்" என்ற இரு உரைநடை நூல்களுடன், (அந்த நூல்களைப் படித்த கையோடு) இவ்வெண்பாக்களையும் படித்தால் சுவை கூடும் என்பது என் கணிப்பு.

திண்ணப்பன் ஐயா இந்த எண்ணத்தை முன்வைக்காமல் இருந்தால், நிச்சயமாக இந்த முயற்சியை நான் மேற்கொண்டிருக்க

மாட்டேன். முயற்சி என்பதை விடுங்கள். அவருடைய தூண்டுதல் இல்லாமல், இத்தகைய ஒரு எண்ணக் கீற்றுக் கூட என்னுள் தோன்றியிருக்காது. அந்த வகையில் அவருக்கு என்னுடைய நன்றி. என்னை இந்த நூலை எழுதச் சொன்னதுடன், ஒரு வாழ்த்துரையையும் அவர்கள் வழங்கியுள்ளார்கள். அதற்கும் அவருக்கு நான் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய சொ.சொ.மீ சுந்தரம் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகள் சிங்கப்பூருக்கு வேறு வேலையாக வந்திருந்து ஐந்து நாட்கள் மட்டும் தங்கியிருந்த அவரிடம் இந்த நூலைக் கொடுத்துப் படிக்கச் சொன்னேன். படித்து முடிந்த பின்னர், அவருக்குப் பிடித்திருந்தால் அணிந்துரை ஒன்றையும் தர வேண்டிக் கொண்டேன். அற்புதமான உரை ஒன்றைப் படித்து முடித்த கையோடு எழுதித் தந்தார்கள். அவ்விதம் அணிந்துரை வழங்கிய அவருக்கும் என் நன்றி. அத்துடன் நில்லாமல், தம்முடைய நண்பர் திரு.லோகநாதன் அவர்களைக் கொண்டு இந்நூலை மிகச் சிறப்பாக அச்சிட்டுக் கொடுக்கும் பணியையும் சொ.சொ.மீ.ஐயா அவர்கள் தாமே முன்வந்து ஏற்றுக்கொண்டார்கள். அச்சகத்திலிருந்து வந்த படிகளைப் படித்துப் பார்த்துப் பிழைநீக்கம் செய்து நூலை மிக நேர்த்தியாக வெளிக் கொணர்ந்துள்ளார்கள். பல ஊர்களுக்கும் சொற்பொழிவாற்றச் செல்ல வேண்டிய கட்டாயம். மிக அதிகமான வேலைப்பளு அவர்களுக்கு. இவற்றிற்கிடையே இப்பணியை ஏற்றுக்கொண்டு செவ்வனே முடித்துக் கொடுத்தார்கள். அதற்கும் என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறே இந்நூலுக்கு முன்னுரை எழுதியளித்த அன்புச் சகோதரி சாரதா நம்பி ஆரூரனுக்கும் என் நன்றி. கனடா, மலேசியா என்று கண்டம் விட்டுக் கண்டம் பறந்து கொண்டிருந்த மிகப் பரபரப்பான, நேரமின்மை அவரை மிகவும் வாட்டிய அந்தச் சூழ்நிலையிலும் இதற்கு முன்னுரிமை அளித்து நான்

கேட்டுக்கொண்ட உடனேயே சிறந்த முன்னுரை எழுதித் தந்துள்ளார் அன்புச் சகோதரி சாரதா, அவருக்கும் என்னுடைய நன்றி.

சிங்கப்பூரில் வெண்பா என்ற சொல் உரைக்கப்படும் போதெல்லாம், வெண்பாச் சிற்பி இக்குவனம் அவர்களின் பெயரும் உடனடியாக உச்சரிக்கப்படும். அவருடைய ஆசியைப் பெற்றே, அவரின் சீடனாக, நான் இதனை நூலாக்கம் செய்துள்ளேன். என்னுடைய நலனின் மிகுந்த ஆர்வம் கொண்டு அப்பெரியவர் அளித்துவரும் ஊக்கத்திற்கு என்றென்றும் நான் நன்றிக்கடன் பட்டுள்ளேன். நூல் முழுவதையும் படித்துப்பார்த்துச் செம்மையுறப் பலவழிகளில் அவர்கள் உதவினார்கள்.

இந்த நூல் இவ்விதம் வெளிவருவதற்கு எனக்குப் பலர் உதவி செய்திருக்கிறார்கள். ஆக்ககரமான பல யோசனைகளை அவர்கள் தெரிவித்தார்கள். அவர்களில் நான் கட்டாயம் குறிப்பிட்டே ஆகவேண்டியவர்கள் என் நண்பன் குமார், புதுமைத்தேனீ அன்பழகன், கவிஞர் முருகடியான், என் நண்பர் மகாலிங்கம் ஆறுமுகம் (இவர் மிகச் சிறந்த வெண்பா விரும்பி), நான் உறுப்பினராக இருக்கும் சந்த சந்தம் என்னும் இணையக் குழுவைச் சேர்ந்த, கனடாவில் வசிக்கின்ற பேராசிரியர் கவிஞர் வேட்டை அனந்த நாராயணன் ஆகியவர்கள். இவர்களுக்கு என்னுடைய உளம் கனிந்த நன்றியை இங்குக் கூறிக்கொள்கிறேன்.

அப்படியே இந்நூலை நல்லமுறையில் அச்சடித்து உருவாக்கித் தந்த மதுரை ஐயப்பன் பிரிண்ட் ஹவுஸ் அச்சகத்தாருக்கும், அதன் உரிமையாளர் திரு.லோகநாதன் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரதராசன். அ.கி. சிங்கப்பூர், (girijaraju@hotmail.com)
Blk 7, #04-34, "The Rivervale"
No 7, Rivervale Link,
Singapore - 545125
அக்டோபர் 22, 2012.



உ.வே.சாமிநாதையர் - வாழ்க்கை வரலாறு - ஒரு சிறுகுறிப்பு

தமிழ்த்தாத்தா என்று அன்புடன் போற்றி அழைக்கப்படும் உ.வே.சாமிநாத ஐயர் அவர்கள் 19ம் நூற்றாண்டில் தமது அரும்பெருந் தொண்டைத் தொடங்கி, 20ஆம் நூற்றாண்டின் மத்தியக் காலத்தில் மறைந்தார். அவர் பிறந்த காலத்தில் (1855) இருந்த தமிழின் நிலைக்கும் அவர் காலஞ்சென்ற பொழுது (1942) தமிழ் உயர்ந்து நின்ற நிலைக்கும் மடுவுக்கும் மலைக்கும் உள்ள அளவு வேறுபாடு காணப்படுகிறது.

பிறப்பும் கல்வியும்

ஐயர் அவர்கள் பிறந்தது தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டத்தில் உள்ள உத்தமதானபுரம் என்ற சிறிய ஊரில். பிறந்த தேதி 1855ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 19. பெற்றோர் சங்கீத வித்துவான் ஸ்ரீவேங்கட சுப்பையரும், ஸ்ரீமதி சரஸ்வதி அம்மாளும் ஆவார்கள். ஐயரவர்களின் தந்தையார் பல இடங்களுக்குச் சென்று தம்முடைய இசைத் திறமையைக் காட்டி, கதா காலட்சேபம் செய்து அந்த ஊதியம் மூலம் வாழ்ந்து வந்தார். குறிப்பிட்ட வேலையும் குறிப்பிட்ட சம்பளமும் இல்லை. இருந்தாலும் அக்கால மக்களின் அன்பும் கலைப்பற்றும் அவரைப் போன்ற கலைஞர்களைப் பாதுகாத்து வந்தன. அங்கங்கே பல ஊர்களில் இருந்த செல்வர்களும் ஜமீன்தார்களும் அக்கலைஞர் களுக்குச் சிறப்புச் செய்து, வாழ்க்கையைச் சுவையுடையதாக்கினர். அவ்வழியில் வேங்கட சுப்பையரின் வாழ்க்கையும் ஓடிற்று.

இந்த ஒரு சூழ்நிலையில் தான் சாமிநாதையர் வளர்ந்து வந்தார். தந்தையாரிடமும் சில திண்ணைப் பள்ளிக்கூடத்து ஆசிரியர்களிடமும் அவர் தன்னுடைய தொடக்கக் கல்வியைக் கற்றார். அக்காலத்தில் ஆசிரியர்கள் ஏராளமான நூற்களைப் படித்திராவிட்டாலும், ஒரு சில நூல்களையே கற்றிருந்தபோதிலும், படித்தவற்றைத் திருத்தமாகப் பயின்று மாணவர்களுக்குத் தெளிவாகப் பாடம் சொல்லும் தகுதி பெற்றிருந்தார்கள்.

அத்தகையவர்களில் ஒருவராகிய அரியலூர்ச் சடகோபையங்கார், செங்கணம் விருத்தாசல ரெட்டியார் ஆகியவர் களிடம் ஐயர் சில நூல்களைக் கற்றார். ஐயருடைய தந்தைக்குத் தம் பையனைப் பெரிய சங்கீத வித்துவானாக ஆக்கவேண்டுமென்ற ஆசையே முதலில் எழுந்தது. ஆனால் பையன் கொண்டிருந்த தமிழ்ப் பற்றைக் கண்டு, அவன் வழிக்கே விட்டுவிட்டார். அதுவே தம் கடமை என்பதையும் உணர்ந்தார். அதனால் எங்கெங்கே தமிழ் நூல்களைப் பாடம் சொல்லுவோர் இருக்கிறார்களோ, அந்த அந்த ஊர்களுக்கெல்லாம் குடியேறித் தம்முடைய பையன் தமிழ்க்கல்வி பெறும்படி செய்து வந்தார். அவ்விதம் இவர் குடும்பம் சென்ற ஊர்களில் அரியலூர், குன்னம், செங்கணம் ஆகியவையும் அடங்கும்.

அக்காலத்தில் திடுவாவடுதுறை ஆதீனத்தில் பெருங் கவிஞராகவும் சிறந்த புலவராகவும் திகழ்ந்த மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது. அவரிடம் பல மாணாக்கர்கள் தமிழ் பயின்று வந்தனர். பிள்ளையவர் களும் அவர்களுக்கு ஊக்கமுடன் பாடம் சொல்லிக் கொடுத்து வருகிறார் என்ற செய்தியை ஐயரின் தந்தை அறிந்தார். தம்முடைய பையனையும் அந்த மகாவித்துவானிடம் சேர்த்துவிட வேண்டும் என்ற ஆவல் அவருக்கு உண்டாயிற்று. சாமிநாதையரும் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் தமிழ் கற்பதில் மிகுந்த ஆசை கொண்டிருந்தார்.

1870ம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஐயர் மாயவரத்தில் இருந்த மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களிடம் மாணாக்கராகச் சேர்ந்தார். அது முதல் அந்தத் தமிழ்க் கடலின் மறைவு. வரையில் (1.2.1876) பிள்ளையவர்களின் அருகிலிருந்து பலவகையான தமிழ் நூல்களைக் கற்றார்.

பிள்ளையவர்கள் அவ்வப்போது இயற்றிவந்த நூல்களை எழுதுவது இவருடைய முக்கியமான பணியாக இருந்தது. திருவாவடு துறை மடத்தின் ஆதீன கர்த்தரான ஸ்ரீசுப்பிரமணிய தேசிகருடன் பழக்கமும் ஆசான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்கள் மூலம் ஐயருக்குக் கிடைத்தது. அந்த மடத்துக்கு வரும் தமிழ்ப்

புலவர்களிடமும் சங்கீத வித்துவான்களிடத்தும் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் கிட்டியது. அத்தகைய அனுபவத்தினால் ஐயர் அவர்கள் கண்ட நன்மைகள் கணக்கில் அடங்கா.

பிள்ளையவர்கள் மறைவுக்குப் பின்பும் திருவாவடுதுறை ஆதீனத்தின் தொடர்பு ஐயருக்கு வலுப்பட்டது. அதற்கு முன் பிள்ளையவர்கள் மூலமாக ஆதீனத்தின் தொடர்பு இருந்து வந்தது. அதற்குப்பின் ஆதீனகர்த்தராகிய ஸ்ரீசுப்பிரமணிய தேசிகரிடமே பாடம் கேட்டார் ஐயர். அதோடு அந்த மடத்தில் கற்று வந்த மாணாக்கர் களுக்குப் பாடம் சொல்லும் பணியையும் ஐயர் ஏற்றார். இதனால் இவருடைய தமிழறிவு மேலும் வலுப்பெற்றது.

கும்பகோணம் கல்லூரியில் ஆசிரியராகச் சேர்தல்

அக்காலத்தில் கும்பகோணம் அரசாங்கக் கல்லூரியில் தியாகராசச் செட்டியார் என்ற பெரும்புலவர் தமிழாசிரியராக இருந்தார். அவர் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையவர்களிடம் படித்தவர். தியாகராசச் செட்டியார் ஓய்வு பெறவேண்டிய காலம் வந்தபோது அவர் தம்முடைய இடத்தில் ஐயரை நியமிக்கும்படி கல்லூரி நிர்வாகத் தினரிடம் வேண்டுதல் வைத்து அதனை நிறைவேற்றவும் செய்தார். 1880ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16ம் தேதி முதல் ஐயர் அவர்கள் கல்லூரித் தமிழாசிரியராக வேலை பார்க்கத் தொடங்கினார்.

குடந்தைக் கல்லூரியில் ஆசிரியப் பணி

ஆழ்ந்த தமிழறிவு, கவிகளில் நல்ல புலமை, சுவையாக எதையும் எடுத்து விளக்கிக் கூறும் வல்லமை. இசைப்பயிற்சி, மாணவர்களிடம் வற்றாத அன்பு முதலிய பல நல்லியல்புகளை ஐயர் பெற்றிருந்ததால், மாணாக்கர்கள் உள்ளத்தை அவரால் எளிதில் கவர முடிந்தது. அந்தக் காலம் ஆங்கில மோகம் உச்சநிலையில் இருந்த காலம். ஆங்கிலமும் பிறபாடங்களும் கற்பிக்கும் பேராசிரியர்களிடம் மாணாக்கர்களுக்கும் மற்றவர்களுக்கும் நல்ல மதிப்பு இருந்து வந்தது. ஆங்கிலேயர்கள் பலர் அந்தப் பாடங்களைக் கற்பித்து வந்தார்கள்.

அதனாலும் அவற்றிற்கும் அவற்றைக் கற்பிப்பவர்களுக்கும் மதிப்பு உய்ர்ந்திருந்தது. ஆனால், தமிழாசிரியர்களுக்கு அத்தகைய ம்திப்பு இல்லை. அவர்களுக்குக் கிடைத்த சம்பளமும் மிகக் குறைவு.

இத்தகைய நிலை இருந்த போதிலும் ஐயர் மாணாக்கர்களின் உள்ளத்தில் மிகச் சிறந்த இடத்தை வெகு விரைவில் பெற்றார். அத்தோடு, மற்ற ஆசிரியர்களுக்குச் சமமான மதிப்பையும் பெற்றார். ஆங்கிலம் சிறிதும் அறியாவிட்டாலும், வயதில் மிகச் சிறியவராக இருந்த போதிலும், தம்முடைய புலமையாலும் பண்பாலும் மாணாக்கர்களும் சக ஆசிரியர்களும் பிறரும் போற்றும் வண்ணம் பணி புரிந்தார்.

சீவகசிந்தாமணி

கல்லூரி ஆசிரியராகப் புகுந்த ஆண்டிலேயே ஐயருக்கும் கும்பகோணத்தில் மாவட்ட நீதித்துறைத் தலைவராக ("மாவட்ட முன்சீப்") இருந்த சேலம் இராமசுவாமி முதலியாருக்கும் நெருங்கிய பழக்கம் உண்டாயிற்று. அந்தப் பழக்கம் தான் ஐயர் செய்த மாபெரும் சேவை யினைத் தமிழுலகம் பெற்று உய்யக் காரணமாயிற்று. இராமசுவாமி முதலியார் சிந்தாமணியைப் படிக்கும்படி ஐயரிடம் கேட்டுக்கொண்டார். ஐயர் அதனை முன்பு பாடம் கேட்டறிந்ததில்லை. அந்த நூலைப் பார்த்தது கூட இல்லை. ஆயினும் ஏட்டுச் சுவடியை வைத்துக் கொண்டு பாடம் படிக்கத் தொடங்கினார். சிந்தாமணியில் ஆழ்ந்தார். தாம் அது காறும் படித்த பல்வேறு நூல்களில் காணப்படாத பலவற்றை அதில் கண்டார். அது சமய நூலாதலால் பல செய்திகள் ஐயருக்கு விளங்கவில்லை. அவற்றையெல்லாம் சமண மதத்தாரிடம் சென்று பணிந்து கேட்டு அறிந்தார். சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரையைப் படித்தார். அவருடைய உரைப்போக்கும் அதனிடையே அவர் காட்டியிருக்கும் மேற்கோள்களும் ஏதோ ஒரு புதிய உலகத்தை ஐயருக்கு அறிமுகப்படுத்தின.

தமிழ் மக்கள் செய்த தவத்தின் பயனாக ஐயருக்குச் சீவக சிந்தாமணியைப் பதிப்பிக்கவேண்டும் என்னும் எண்ணம்

உண்டாயிற்று. ஆராய்ச்சி நடைபெற்றது. பல வேதனைகளையும் சோதனைகளையும் அவர் அடைந்தார். ஆனாலும் விடாப் பிடியாக முயன்று 1887ம் ஆண்டு சிந்தாமணியைப் பதிப்பித்து வெளியிட்டார். அந்தப் பதிப்பைக் கண்ட தமிழ் நாட்டினர் மிகவும் மகிழ்ந்து கொண்டாடினர். அதுமுதல் ஐயர் பழைய காப்பியங்களைப் பதிப்பித்து நூலாக வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டார். சிந்தாமணிக்குப்பின் பத்துப்பாட்டு வெளியாயிற்று. அதன்பின் சிலப்பதிகாரம், புறநானூறு, மணிமேகலை என்பவை வந்தன. புறநானூறு கண்ட தமிழ் மக்கள் புதிய ஒரு அனுபவத்தை உணர்ந்தனர். பல தமிழ் ஆராய்ச்சியாளர்களுடைய மூளை வேலைச் செய்யத் தொடங்கியது. பழந்தமிழ் மக்களின் வாழ்க்கையைப் பற்றிப் பல அறிஞர்கள் ஆராய்ந்து எழுதத் தொடங்கினார்கள்.

இவ்வாறு ஐயர் பழந்தமிழ் நூல்களை அச்சிடும் தொண்டை விடாது செய்து வந்தார். ஐம்பெருங்காப்பியங்கள் என்று சேர்த்துச் சொல்லும் நூல்களில் கிடைத்த சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி என்ற மூன்றையும் அவர் வெளியிட்டார். அவருடைய உழைப்பால் பத்துப்பாட்டைத் தமிழுலகம் காண முடிந்தது. எட்டுத் தொகைகளில் ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு என்பன மலர்ந்தன. பெருங்கதை, புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரை என்னும் இலக்கிய இலக்கணங்கள் வெளிவந்தன. இவற்றையன்றித் திருவாலவாயுடையார் திருவிளை யாடற் புராணம், திருக்காளத்திப் புராணம் முதலிய பல புராணங்களும், கோவை, உலா, கலம்பகம், பிள்ளைத்தமிழ், இரட்டை மணி மாலை, அந்தாதி, குறவஞ்சி முதலிய பலவகைப் பிரபந்தங்களும் குறிப்புரை களுடன் வெளிவந்தன.

இவை தவிரத் தம்முடைய ஆசான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை இயற்றிய பிரபந்தங்கள் எல்லாவற்றையும் தொகுத்து ஒரு தொகுதியாக வெளியிட்டார்.

ஏட்டில் இருப்பதை அப்படியே எடுத்துத் தாளில் அச்சிடும் வேலை அன்று ஐயர் செய்தது. ஏட்டுச்சுவடிகளைப் பெயர்த்து

எடுத்து அப்படியே புத்தகமாக்குவது மிகவும் எளிதாக இருந்திருந்தால் ஏராளமான புத்தகங்கள் அத்தருணத்தில் வெளி வந்திருக்க வேண்டும். அப்பணியை ஏற்க எத்தனையோ அறிஞர்கள் முன்வந்திருப்பார்கள். அவ்விதத்தில் அவர்கள் பெரும் புகழ் ஈட்டியிருப்பார்கள். ஏட்டில் உள்ள பாடங்கள் பல வகைகளில் பிழைபட்டிருந்தன. பல இடங்களில் இன்னதென்றே ஊகிக்க முடியாத அளவுக்குச் சிதைந்திருந்தன. அவற்றையெல்லாம் பல நூல் அறிவினாலும் இயற்கையான அறிவுத் திறமையாலும் விடா முயற்சியினாலும் திருவருளின் துணையாலும் ஆராய்ந்து முடிவாக அவை இப்படித்தான் இருக்கவேண்டும் என்று தீர்மானித்தார் ஐயர்.

இவற்றைச் செம்மைப்படுத்த ஐயர் தாமே தமக்கென்று ஒரு நெறியை அமைத்துக்கொண்டார். ஐயருடைய பதிப்பு என்றாலே தமிழ்ப் புலவர்களும் ஆராய்ச்சியாளரும் போற்றிப் புகழும் வண்ணம் ஐயரின் பதிப்பு அமைந்தது. தம்முடைய பதிப்பு ஒவ்வொன்றிலும் சிறப்பாக முகவுரையும், ஆசிரியர் வரலாறும், நூலைப்பற்றிய வரலாறும், குறிப்புகளும், பிற செய்திகளும் மிகமிக அற்புதமாகத் தந்தார் ஐயர். நூலில் ஒவ்வொரு பக்கத்திலும் அடிக்குறிப்பில் பல வகையான விளக்கங்களையும் தந்து, பல நூல்களிலிருந்து எடுத்துக்காட்டுகளையும் விவரித்தார். ஐயர் தம்முடைய சிறந்த புலமையால் இதைச் செம்மையாகச் செய்தார். பதிப்பின் இறுதியில் நூலில் கண்ட சொற்களுக்கும் பொருளுக்கும் அகராதியும் தந்தார். இவ்வகையில், மிகவும் எளிமையாக, தன் முயற்சியாலேயே மாணவர்கள் பயிலும் வகையில் தம் பதிப்புக்களை அமைத்தார் ஐயர்.

இந்தப் பதிப்புகளின் நேர்த்தியினைக் கண்டு மேல் நாட்டார் பலரும் வியந்தனர். ஆங்கிலமே அறியாத ஐயர் இத்துறையில் நிகழ்த்திய சாதனையைப் போற்றினர்.

ஐயர் பதிப்பித்த நூல்களின் ஒரு அங்கமாக மணிமேகலைக் கதைச் சுருக்கம், புத்த தர்மம், உதயணன் கதைச்சுருக்கம் என்பவற்றையும் வெளியிட்டார்.

சென்னைக்குக் குடியேற்றம்

கும்பகோணம் கல்லூரியிலிருந்து ஐயர் சென்னை மாநிலக் கல்லூரிக்கு 1903ஆம் ஆண்டில் பதவி மாற்றம் பெற்றார். சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழாசிரியராக 1919ஆம் ஆண்டுவரை பணி செய்தார். பின்னர் அந்தப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். கல்லூரி வேலையிலிருந்து மட்டும் தான் ஓய்வு பெற்றாரேயன்றி மாணாக்கர் களுக்குப் பாடம் சொல்லும் ஆசிரியத் தொண்டிலிருந்தோ, நூல்களைப் பதிப்பிக்கும் பதிப்பாசிரியத் தொண்டிலிருந்தோ அவர் ஓய்வு பெறவில்லை. சொல்லப்போனால், அப்பணிகள் பின்னும் பன்மடங்கு பெருகின.

1924 முதல் 1927 வரையில் ஐயர் அவர்கள் சிதம்பரத்தில் அண்ணாமலை செட்டியாரவர்கள் நிறுவிய மீனாட்சி தமிழ்க் கல்லூரியின் தலைவராகப் பணியாற்றினார்.

அதிலிருந்தும் ஓய்வு பெற்ற பிறகு, தமிழ் நூல்களைப் பதிப்பிப்பதோடு தம்முடைய வாழ்க்கை அனுவங்களை, தாம் கண்டவற்றைப் பற்றியும் கேட்டவற்றைப் பற்றியும் எளிய இனிய உரைநடையில் எழுதத் தொடங்கினார். இந்தத் துறையிலும் ஐயர் பெரும் புகழ் பெற்றார். தமிழகத்தில் அனைவரும் அவருடைய எழுத்தைப் படித்து இன்புற்றனர். கலைமகள் பத்திரிக்கையில் ஐயர் அவர்களின் கட்டுரைகள் வெளிவரத் தொடங்கின. பின்னர், பல பத்திரிகைகளிலும் இவருடைய கட்டுரைகள் வெளியாயின.

ஆசான் வரலாற்றை வெளியிட்டது

தம்முடைய ஆசான் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் வரலாற்றை வெளியிடவேண்டும் என்பது ஐயரின் பல்லாண்டு ஆசை. மிகுந்த ஆர்வமுடன், பல செய்திகளைத் தொகுத்துக் குறித்து வைத்திருந்தார் ஐயர். அவற்றைக் கொண்டு 1934–ல் மிக விரிவாக அச்சரித்திரத்தை இரண்டு பாகங்களாக எழுதி வெளியிட்டார்.

இவைதவிரப் பல பண்டிதர்கள் சரித்திரங்களையும் அவர்களைப் பற்றிய வரலாறுகளையும், நிகழ்ச்சிகளையும் சுவை ததும்ப எழுதினார். தியாகராாசச் செட்டியார் சரித்திரம், கோபாலகிருஷ்ண பாரதியார் சரித்திரம், மகா வைத்தியநாத ஐயர் சரித்திரம், கனம் கிருஷ்ணையர் வரலாறு என்பன ஐயர் எழுதி வெளியிட்டவை. மேலும் சிலருடைய வரலாற்றைச் சுருக்கமாக எழுதினார். இவை பூண்டி அரங்கநாத முதலியார், மணி ஐயர், வ.கிருஷ்ணசாமி ஐயர், திவான் சேஷையா சாஸ்திரிகள் முதலியவர்களைப் பற்றிய கட்டுரைகள் ஆகும்.

ஐயர் பெற்ற பட்டங்கள்

ஐயருடைய பெருமையைத் தமிழுலகம் மெல்ல மெல்ல உணரலாயிற்று. ஆங்கில அரசினரால், 1906ம் ஆண்டு, "மகா மகோபாத்தியாயர்" என்ற பட்டத்தையும், 1917ம் ஆண்டில் பாரத தர்ம மண்டலத்தார் வழங்கிய, "திராவிட வித்தியா பூஷணம்" என்ற பட்டத்தையும் பெற்றார். 1925ம் ஆண்டு காமகோடி பீடாதிபதி சங்கராசார்ய ஸ்வாமிகள், "தாக்ஷிணாத்திய கலா நிதி" என்ற பட்டத்தை வழங்கினார். ஐயர் சென்னை, மைசூர், ஆந்திரா, காசி முதலிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் பல பதவிகளை வகித்துத் தொண்டாற்றினார். 1932ல் சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்து இவரைப் பெருமைப்படுத்தியது.

1935ம் ஆண்டு மார்ச் மாதம் 6ம் தேதி ஐயர் அவர்கள் 80 ஆண்டுகள் நிறைந்து விளங்கினார். அவருடைய எண்பதாம் ஆண்டு நிறைவைத் தமிழகம் மிக மகிழ்ச்சியுடன் கொண்டாடியது. மிகச்சிறப்பாக இவ்விழா சென்னையில் பல்கலைக் கழக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தத் தருணத்தில் ஐயரைத் "தமிழ்த்தாத்தா" என்று விளித்து, ஒரு கடிதத்தைக் கல்கி அவர்கள் தம் பத்திரிகையில் எழுத, அதுவே ஐயருக்குப் பொருத்தமான பட்டமாக அமைந்து, பிற்காலத்தில் அப்பட்டம் நிரந்தரமாகி நிலைத்தது.

இறுதிக்காலம்

பழுத்த வயதிலும் ஐயருடைய தமிழ்த்தொண்டு வீறுகொண்டு நடைபெற்றது. குறுந்தொகையை விரிவான உரையுடன் பதிப்பித்தார்கள். சிவக்கொழுந்து தேசிகர், குமரகுருபரர் என்னும் புலவர்களின் பிரபந்தத் திரட்டுகள் குறிப்புரையுடன் வெளியாயின. தமிழன்பர்களின் விருப்பப்படி ஆனந்த விகடனில் வாரந்தோறும் தம்முடைய வரலாற்றை "என் சரித்திரம்" என்ற தலைப்பில் எழுதினார். அது 1940ம் ஆண்டு ஜனவரியில் தொடங்கி 122 அத்தியாயங்களோடு சுய சரித்திரமாக வெளிவந்தது.

1942ம் ஆண்டு இரண்டாம் உலகப்போர் நிகழ்ந்தபோது ஐயர் சென்னையில் இருப்பது அவ்வளவு பாதுகாப்பானது அன்று எனவெண்ணி, தம் குடும்பத்துடன் திருக்கழுக்குன்றம் சென்று தங்கினார். அங்கே ஏப்ரல் மாதம் 28ம் தேதி இறைவன் திருவடியை அடைந்தார்.

மூவாயிரத்துக்கும் மேற்பட்ட சுவடிகளையும், கையெழுத்துப் பிரதிகளையும் ஐயர் சேகரித்துத் தொகுத்து வைத்திருந்தார். அவர் காலமான பிறகு, அவர் விட்டுச் சென்ற ஏடுகளையும் நூல்களையும் சென்னை அடையாறு கலாக்ஷேத்திரத்தின் தலைவராகிய ஸ்ரீமதி ருக்மணி தேவி ஒரு நூல் நிலையமாக அமைக்க ஏற்பாடு செய்தார். அவர் குடும்பத்தினர் ஐயர் சேகரித்து வைத்த ஏடுகளையும் நூல்களையும், அந்நூல் நிலையத்திற்கு நன்கொடையாக வழங்கினர். அவை அங்கு பாதுகாக்கப்பெற்று வருகின்றன.

அவர் காலஞ்சென்ற பிறகு அவருடைய தலைமை மாணாக்கர் கி.வா.ஜகந்நாதன் "என் ஆசிரியப் பிரான்" என்னும் தலைப்பில், ஒரு நூல் வெளியிட்டு உ.வே.சாவின் சரித்திரத்தை நிறைவு பெற வைத்தார்.

சாமிநாத வெண்பா

காப்புச் செய்யுள்

தோப்புக் கரணம் துதிசெய்(து) உனக்கிடுவேன்,
காப்பென்(று) இருப்பாய் கணபதியே! - கூப்பும்
கரத்தனாம் என்னைக் கவிமழை கொட்டும்
திறத்தனா(ய்) ஆக்குநீ தேர்ந்து. 1

பழுது சிறிதளவும் பற்றாமல் பாக்க(ள்)
எழுதும் திறனெனக்(கு) ஈவாய்! - தொழுதுன்னை,
வேண்டிப் பணிவேன் விநாயகா நீயென்னைத்
தாண்டிடச் செய்வாய் தடை 2

சக்திதான் என்றும் சரண்

சாமிநா தன்வெண்பா சாற்றப் புகுமுன்னர்,
வாமியின் தாளை வணங்கிடுவேன். - பூமிதனில்
ஏற்ற பெரும்பணியா(ல்) எல்லோரு(ம்) இன்பமுற
நோற்றே(ன்) அவள்தாளில் நோன்பு. 3

வாணிக்கு வணக்கம்

என்றன் கவியென்று(ம்) ஏற்றமுற வாணியே!
உன்றன் கழல்வீழ்ந்தே(ன்) உய்விப்பாய். -
நன்றொன்றே
நான்பாடும் வண்ணம்நீ நல்லபல சொற்களைத்
தேன்வார்த்(து) அளிப்பாய் தெரிந்து. 4

முருகனை வேண்டுதல்

செந்தூர் முருகனைச் சேவித்து வேண்டுகிறேன்;
"வந்தெனக்குக் காட்டு வழிதன்னைச் - சந்தமிகு
பாக்கள் சுவைநிரம்பிப் பாரை மகிழ்விக்கும்
நோக்கம் நிறைவேற்று நீ." 5

தமிழன்னைக்கு வணக்கம்

அன்னைத் தமிழே! அடிதன்னில் வீழ்ந்திருப்பே(ன்);
என்னை மறந்திடுவே(ன்) இச்செயலி(ல்) - உன்னையே
போற்றித் தொழுது புகழ்ந்து கவிபாடும்
ஆற்றல் மறவா(து) அளி. 6



நன்றுபணி செய்வேன் நலமொன்றே நீகாண,
என்றும் மறவே(ன்) இதுவாற்ற - மன்றெல்லா(ம்)
ஏறியுன் சீர்தன்னை எந்நாளும் போற்றுதல்,
மாறின்றிச் செய்வேன் மகிழ்ந்து. 7

ஒப்பரிய செம்மை உனக்குண்டு மாறாமல்
எப்பொழுதும் காப்பாய் இளமைநீ - தப்பாமல்
சேவை உனக்குச் சிறப்பாக ஆற்றுவேன்
பாவை உனையே பணிந்து. 8

மாற்ற(ம்) அறியா மனத்தால் பணிசெய்வேன்;
ஏற்றமே நீகாண என்றென்றும் - தோற்றுநான்
போகா(து) இருந்திந்தப் போர்தன்னில் வென்றவனா(ய்)
ஆகும் வலிநீ அருள். 9

அவையடக்கம்

என்பால் சிறிதளவும் இல்லை திறனெனினும்
வெண்பா வடிக்க விழைகின்றேன் - அன்பா(ல்)
அடியேன் பிழைதன்னை ஆன்றோர் பொறுத்துக்
கடியா(து) இருப்பீர் கனிந்து. 10

உ.வே.சாவின் பெற்றோர்கள்
(தந்தை வேங்கட சுப்பையர்; தாயார் சரஸ்வதி அம்மையார்)

வேதிய(ர்) என்றமைந்த வேங்கட சுப்பையர்
நீதி வழுவா நெறியாளர் - மாதொரு
பாகன் கழல்கள் பணிந்து தொழுவதில்
தாகம் மிகவுடையார் தாம். 11

சற்றும் பிணங்காச் சரஸ்வதி யாம் இல்லாளால்
எற்றைக்கும் கண்டா(ர்) இணக்கமிகப் - பற்றுள்ள
அக்குடும்பம் வந்துதித்த ஆண்மகவின் காதையினைத்
தக்கபடி கூறிடுவேன் தாழ்ந்து. 12

பிறந்த ஆண்டு - 1855

ஆயிரத்தெண் ணூற்றைம்பத் தைந்தென்னும் ஆண்டுதனில்
மாயிரு ஞாலத்து மண்ணுதித்தார் - தூயநல்
அந்தணப் பெற்றோர்க்(கு) அவர்மகனா(ய்) அந்நாளில்
வந்தது(ம்) எங்கள் வரம். 13

பிறந்த ஊர் : (சூரிய மூலை)

சூரிய மூலையெனச் சொல்கின்ற அந்தந(ல்)
ஊரிலே வந்துதித்தா(ர்) உத்தமர் - பாரிலே
அவ்வூ(ர்) அடைந்த அளப்பரும் பேற்றினை
எவ்விதம் கூறுவே(ன்) இங்கு? 14

காரிருள் தன்னைக் களைந்து தமிழ்மொழிக்குப்
பேரொளி தந்தார் பிறந்தவூர் - நேரின்றிப்
பின்னாளில் வையத்தில் பீடுற வாழ்ந்தாரை
அந்நாளில் ஈன்ற(து) அது. 15

கொஞ்சும் தமிழால் குவலயத்தின் மற்றோரை
விஞ்சுகிறா(ர்) என்று விளம்பிடுவார் - தஞ்சையுறை
மக்களின் சீர்தன்னை மாநிலத்தோ(ர்) அவ்வண்ண(ம்)
ஒக்கப் புகழ்வா(ர்) உவந்து. 16

அந்தப் பகுதியி(ல்) அந்தண(ர்) இல்லொன்றில்
வந்து பிறந்தார் வளங்கூட்ட - விந்தையுறு
வேகமொடு தாய்மொழிக்கு வெற்றிபல சேர்க்கின்ற
தாகமொடு வந்துதித் தார். 17

சொந்த ஊர் : உத்தமதானபுரம்

உத்தம அந்தணர்க்(கு) ஊரொன்றை ஓர்மன்னன்
சத்திய தானமெனச் சாற்றினா(ன்) - இத்தரணி
ஒன்றிப் பொருத்தமா(ய்) உத்தம தானபுரம்
என்றிட் டதுபேர் இசைந்து. 18

பெயர் சூட்டல்

"வேங்கட ராமன்" விளித்தார் பெயர்சூட்டி,
தாங்கொணா அன்புடன் தம்மகவை - நீங்கிடும்
பின்னாளி(ல்) அப்பெயரும்; பெற்றிடுவார் வேறுபெயர்
அந்நாளில் கண்டவ(ர்) ஆர்? 19

தகப்பனாரின் வேலையும் குடும்ப வருமானமும்

வேங்கடசுப் பையருக்கு வேலையென் றேதுமில்லை;
பாங்கா(ய்) உரைப்பார் பலபுராணம் - தேங்கிடாக்
காட்டாறு போலக் கதைகூறிக் காசுபணம்
ஈட்டியே வாழ்ந்தா(ர்) இனித்து. 20



ஊரூராய்ச் செல்வா(ர்) உபன்யாசம் செய்திடவே
பேரதில் பெற்றார் பிழையின்றிப் - பாரிலுறை
செல்வர் பலர்மகிழ்ந்து செய்த உதவியால்
பல்வகையில் பெற்றார் பலன். 21

கேட்டோர் களித்துக் கிளர்ச்சி உறும்வண்ணம்
பாட்டோடு காதை பகர்ந்திடுவார் - வீட்டுச்
செலவைச் சரிக்கட்ட சேர்த்தா ரதுபோல்
பலவழியில் கொஞ்சம் பணம். 22

சிறு வயதுக் கல்வி

அமிழ்தெனக் கண்டதனா(ல்) அப்பையன் கொள்ளான்
தமிழ்மொழி கற்கத் தளர்ச்சி - சிமிழ்நிகர்த்த
சின்னவாய்ப் பாலன் சிறப்பாகப் பாடலெலாம்
பன்னினான் நன்கு பயின்று 23

ஆறுவய(து) என்றாலு(ம்) அர்த்தமுட(ன்) அப்பையன்
கூறுவான் கற்ற குறள்பலவும் - ஏறுபுகழ்
பின்னாளில் காணும் பெருமைக்(கு) அடித்தளமாய்
அந்நாளில் கற்றா(ன்) அவை. 24

மூதுரை நாலடியார் முற்றுமே பாராம(ல்)
ஓதுவா(ன்) எப்பொழுது(ம்) ஓய்வின்றிப் - போதுமெனக்
கூறாமல் கற்றான் குவிந்த உளத்தனாய்
மாறா விருப்பம் மலர்ந்து. 25

"சிந்தையி(ல்) என்றும் சிவனை இருத்திடுவாய்"
தந்தையின் சொல்லேற்றான் தப்பாமல் - அந்தநெறி
நின்று மறவா நியமத்தால் தன்வாழ்வில்
என்றுமவன் கண்டா(ன்) இனிப்பு. 26

காலைமணி ஐந்திற்குக் கற்றிடப் பிள்ளைகள்
ஓலையுடன் வந்திடுவா(ர்) ஓடோடி - மாலைமணி
ஏழுவரை கற்பதை ஏற்றார் அனைவரும்
வாழுமுறை என்றே வகுத்து. 27

அரியலூர்ச் சடகோப ஐயங்காரிடம் கல்வி (1861)

அரியலூர் தன்னி(ல்) அடிப்படைகள் கற்றான்;
அரியதோ(ர்) ஆசா(ன்) அருளால் - பெரியதோர்
சாதனைக்குச் சாலை சடகோப ஐயங்கார்
காதலுட(ன்) அன்றமைத்தார் காண். 28

ஆசா(ன்) அமைந்தா(ர்) அவன்பா(ல்) அளப்பில்லா
நேசம் மிகவுடைய நெஞ்சத்தர் - பாசமொடு
பாக்கள் பயில்வித்துப் பையன் நிலைஉயர
ஊக்க(ம்) அளித்தா(ர்) உவந்து. 29

முதலாசா(ன்) ஆனார்; மொழியார்வ(ம்) என்னும்
விதையை அவனுள் விதைத்துச் - சதுரராய்ப்
பாடல் பயில்வித்துப் பண்பும் புகட்டினார்
தேட(ல்) உடையான் தெரிந்து 30

பின்னாளில் பையன் பெறவிருக்கும் நற்பெயரை
அந்நாளில் உய்த்துணர்ந்தார் ஐயங்கார் - எந்நாளும்
உள்ளம் முழுது(ம்) உணர்ந்தா(ன்) அவர்பெருமை,
கள்ள(ம்) அதிலில்லை காண். 31

சடகோப ஐயங்கார் சாற்றுகையில் பாக்கள்
புடமிட்ட பொன்போற் பொலியும் - கடனறிந்து
பையனுக்குப் பாடம் பகன்றா(ர்) அவன்கொண்ட
ஐயமெலாம் முற்று(ம்) அழித்து. 32

"கற்பிக்கும் போழ்து கணமும் சலிப்புறேன்
உற்பத்தி ஆகு(ம்) உவப்பினால்" - பொற்புநிறை
அவ்வுரை ஆற்றியே ஆசான் பணிதரும்
செவ்வியில் நின்றார் சிறந்து. 33

சடகோப ஐயங்கார் சங்கீதம் கற்று,
கடலெனப் பாடிடுவார் கானம் - உடனவரைப்
பையன் அணைந்து பயின்றான் இசைக்கலை;
பொய்யில்லா ஆசை புகன்று 34

கற்றா(ன்) அவர்பால் களிப்பூட்டும் பண்முதலாய்
மற்றுப் பலவும் மகிழ்வுடன் - நற்றுணையாய்ப்
பாட்டையுளம் வைத்துப் பருகினா(ன்) அச்சுவையைத்
தேட்டையுட(ன்) இன்பம் தெரிந்து 35

எவர் ஊர்வந்தாலும் அவரையடைந்து கற்றல்

சிறுபைய(ன்) ஆனாலும் செந்தமிழ்க் கல்வி
உறுதுணை என்றே உணர்ந்தான் - வருகின்ற
பண்டிதரைப் பார்த்ததும் பாடம் பயின்றிட
அண்டியவன் வீழ்வா(ன்) அடி 36

குன்னத்தில் குடியேற்றம் : (1863)

குன்னமெனும் ஊரில் குடும்பம் குடியேறப்
பின்னுமவன் கற்றான் பிழையின்றி - மன்னுலகில்
கற்றலே என்றன் கடனாகும் என்றுணர்ந்து,
வெற்றியதில் கண்டான் விரைந்து 37

நன்னூல் முழுவதையும் நாவினிக்க, பாராமல்
பன்னும் வகையில் படித்தறிந்தா(ன்) - அன்னதோ(ர்)
ஆர்வமுட(ன்) அப்பைய(ன்) ஆசா(ன்) அரவணைப்பால்
நேர்வழியில் நின்றான் நிலைத்து. 38

விலைசொல்லிக் கல்வியை விற்காம(ல்) அன்று
கலையென்றே ஈந்து களித்தா(ர்) - அலைந்திவனும்
நாடிப் பலர்பாலும் நன்மை தருநூலைத்
தேடிப் படித்தான் தெரிந்து. 39

ஆங்கிலத்தை மறுத்து அழகுதமிழ் படித்தல்

“ஆங்கிலம் கற்பா(ய்) அவனியை நீஆள,
ஓங்குபுகழ் சேர்ந்திடு(ம்) உன்றன்பால் - தீங்கின்றி
என்றும் களிப்புட(ன்) ஏற்ற(ம்) உறுவகையில்
நன்றுநீ வாழஅதை நாடு”. 40

“ஏனப்பா கற்கின்றாய் ஏங்கித் தமிழ்மொழியை?
வீணப்பா செய்கை விளம்பிடுவார் - மானமிலா
வஞ்சகர் சொல்லையுள் வாங்காமல் வீசினான்
அஞ்சாத நெஞ்சத்(து) அவன். 41

தாய்மொழி கற்காத் தவறிழையேன் என்றுதன்
ஆய்ந்த முடிவை அறிவித்தான் - "மாய்கின்ற
நாள்வரை கற்றிருப்பேன் நற்றமிழை"என்றொரு
சூள்தன்னை உள்வைத்தான் சூழ்ந்து. 42

திருமணம் : (1868)

பதின்மூன்று கண்டதும் பையனின் பெற்றோர்
விதிமுறை செய்தார் விவாகம் - பதியென்னும்
பட்டம் பெறவைத்த பாவை வயதுமே
எட்டெனப(து) அந்நா(ள்) இயல்பு. 43

மதுரம் மிகச்சொட்டும் மங்கை உரைத்தா(ல்);
அதிரவோர் சொல்லு(ம்) அறியாள் - மதுராம்பாள்
என்னும் பெயருக்கு இசையவே சொற்களைப்
பன்னு(ம்) அவள்நா பரிந்து. 44

முதற் பா எழுதிப் பெருமாளையரிடம் தந்தது

பாட்டெழுதி உள்ளூரின் பண்டிதர் பார்வைக்கு
நீட்டினான் பையன் நிறைவுடன் - காட்டியதை
அப்பெரு மாளைய(ர்) அன்புற்று நோக்கியுடன்
தப்புள(து) என்றுரைத் தார். 45

"ஆசைமிகக் கொண்டா(ய்) அழகுதமிழ்ப் பாவெழுத,
ஓசைநயம் குன்ற(ல்) ஒழுங்காமோ? - வாசிப்போ(ர்)
ஏற்றுகின்ற வண்ண(ம்) இயற்றுவா(ய்) உன்பாவை
ஆற்றொழுக்கு என்றே அமைத்து". 46

அந்தவுரை தன்னை அணுவும் மறக்காமல்,
தந்தவரைப் போற்றினான் தன்னுள்ளில் - விந்தையுறக்
கட்டுரைகள் பின்னாள் கணத்தில் வடித்திட
இட்டாரவ் வித்தை இனித்து. 47

செங்கணம் சென்றது : (1869)

செங்கணம் ஊருக்குச் சென்றுறைந்தா(ன்) அப்பையன்
தங்குதடை இன்றித் தமிழ்கற்க - அங்கு
விருத்தாச் சலரெட்டி விண்டாங்(கு) உரைத்தார்;
"பொருத்தமிகும் ஆசான்பால் போ" 48

"கோனாட்சி செய்வார் குவலயம் மீதிலிவர்
தேனாய்த் தமிழுரைப்பார் தித்திக்க - மீனாட்சி
சுந்தரம் பிள்ளையவர் சொல்லும் தமிழ்கேட்க
எந்தவித(ம்) ஆயினும் ஏகு" 49

பிள்ளைவாளை ஆசானாய்ப் பெறும் ஆசை

"எவரைநா(ன்) ஆசானா(ய்) எண்ணியிருந் தேனோ
அவரையே சொன்னா(ர்) அறிந்து - தவறாது
கற்பேன் அவரிடத்துக் காலமெல்லாம்; கற்றவற்றில்
நிற்பேன்நா(ன்) என்றும் நிலைத்து". 50

என்றோ(ர்) உறுதியை ஏற்றந்தப் பையனும்
நின்றான் அதுவே நினைப்பாக - ஒன்றியே
"ஆசானா(ய்) அன்னா(ர்) அமைகின்ற வாய்ப்பினை
ஈசா எனக்கீவா(ய்)" என்று. 51

அரும்பாவூர் நாட்டார் அறிவுரை

"தேடி அலைகின்றாய் தேர்ந்ததோ(ர்) ஆசானை
நாடி அணைவா(ய்)அந் நல்லவரைக் - கூடி
அவரோ(டு) இருப்பா(ய்) அணுக்கமாய்ப் பாடம்
தவறாமல் கற்றிடுவாய் தாழ்ந்து". 52

அரும்பாவூர் நாட்டார் அறிவுரை தந்தார்
கரும்பான நல்வழியைக் காட்டி - விரும்பும்
ஒருவர் பெயரையே உச்சரிக்கக் கேட்டு
மருவின்றிக் கொண்டான் மகிழ்வு. 53

"எல்லோரும் போற்று(ம்) இவரெனக்குப் பாடங்கள்
சொல்லும் நலமென்னைச் சூழுமோ?" - அல்லல்
தருகின்ற ஐயமது தாக்கிடப் பையன்
மருகினான் நாளும் மனம். 54

"சேர்வே(ன்) அவரையே செந்தமிழ் கற்றிடத்"
தீர்வதைக் கொண்டான் தெளிந்தவனாய் - "நேரவர்பால்
சென்று கழல்வீழ்ந்து செப்புவேன் என்னாசை
நன்றது செய்திடுவேன் நான்". 55

மாயவரம் போய்ப் பிள்ளைவாளைக் கண்டது : (1871).

நல்லதோ(ர்) ஆசானை நாடி அவருறைந்த
இல்ல(ம்) அடைந்தா(ன்) இனிமையுற - வல்லவரின்
தாள்பற்றி வீழ்ந்தான் தமிழ்மொழியை நன்றாக
ஆள்பவர் என்ப(து) அறிந்து. 56

பதினாறே ஆனசிறு பையனங்கு சென்றான்,
கதியென்(று) அவரைக் கருதி - மதிநிறைந்த
அன்னாரை அன்றியவ(ன்) ஆசானாய் வேற்றாளை
உன்னாமல் வந்தா(ன்) உணர்ந்து. 57

போயவன் பார்த்தான் புகழுச்சம் கண்டவரை,
மாயவரம் தன்னில் மகிழ்வோடு - தாயன்பை
விஞ்சும் கனிவுநிறை வித்துவான் தன்னையே
தஞ்ச(ம்) அவனடைந் தான். 58

காசினியில் நன்றாகக் கற்றுத் தருகின்ற
ஆசிரியர் தேடி அலைந்துபின் - பூசித்துக்
கொள்ளையாய்ப் பூச்சொரிந்து கும்பிடத் தக்கவராம்
பிள்ளையைக் கண்டுற்றான் பேறு. 59

பிள்ளையிடம் தமிழ்கற்றுத் தருமாறு விண்ணப்பித்தல்

பையனின் தந்தை பகர்ந்தார் பணிந்தபின்
“உய்யவழி நாடுகிறோம் உம்மிடத்தில் - ஐயனே;
சீடனெனப் பையனையும் சேர்த்திடுவீர் உம்குழுவில்
பாடமெலாம் சொல்வீர் பரிந்து” 60

“என்னென்ன கற்றாய் இதுகாறும்? என்னிடத்துப்
பன்னுவாய் முன்னம் பயின்றவை - அன்னவிதம்
உன்றன் நிலையை உணர்ந்தபின் சொல்லிடுவேன்
என்றன் முடிவை இசைந்து”. 61

சொன்னா(ர்) அதுதன்னைச் சுந்தரம் பிள்ளையுட(ன்),
அன்னான் நிலைமை அறிந்திட - முன்னாளில்
கற்ற பலவற்றைக் கச்சிதமாய் அப்பையன்
முற்று(ம்) உரைத்தான் முனைந்து. 62

நன்றவன் கூறினான் நைடதப் பாக்களை;
ஒன்றியவை கேட்டார் உவப்புடன் - இன்றெனக்கு
நன்னாளே என்றுமிக நம்பிக்கை கொண்டவனாய்ச்
சொன்னான் பலவற்றைச் சூழ்ந்து. 63

அருமைமிகும் ஆசானை அன்பின் தொழுதான்
கருமமது தன்னைக் கருதி - ஒருமையுடன்
அன்னவர் கேள்வியினை ஆர்வமுடன் உள்வாங்கிப்
பன்னினான் தக்க பதில். 64

பிள்ளையவர்கள் அவனைச் சீடனாய் ஏற்றுக் கொள்ளல்

அறிந்தார் அவன்கொண்ட ஆர்வத்தை ஆசான்;
தெரிந்தே உடனவரும் தேர்ந்தார் - செறிந்தநற்
பண்புடைய பையன் பகர்ந்தவை கேட்டதும்
அன்புட(ன்) ஏற்றா(ர்) அணைத்து. 65

படித்த பலவற்றைப் பையன் உரைத்து
முடித்ததும் சொன்னார் முடிவை - “விடுத்தவுன்
விண்ணப்ப(ம்) ஏற்றேன்” விளம்பினார் பையனுக்கு
வண்ணமுறத் தம்முடைய வாழ்த்து. 66

உய்யவழி காட்டுகின்ற ஒப்பற்ற ஆசானைத்
தெய்வமெனக் கொண்டான் தெளிந்தவனாய் - வையமதில்
ஏற்றமவன் காண இயம்பினார் பாடங்கள்;
ஆற்றலுடன் கற்றா(ன்) அவை. 67

“பிறவிப் பயன்பெற்றேன்; பிள்ளையிடம் வந்தேன்;
அறிவுப் பசியிங்(கு) அடங்கும் - குறைவின்றிச்
சித்திக்க வைத்தான் சிதம்பர நாதனென
அத்திக்கில் வீழ்ந்தா(ன்) அவன். 68

சாமிநாதன் என்ற பெயர் அடைதல்
(பிள்ளைவாள் அப்பெயரால் அழைத்தல்)

“என்னபெயர் வைத்தனர் இல்லமதில் உன்பெற்றோர்?
பன்னுவாய்” என்றார் பரிவுடன் - அன்னவிதம்
ஆசான் வினவ அடுத்தகணம் தன்பதிலை,
கூசாமல் சொன்னான் குனிந்து. 69

வேங்கட ராமனென வீட்டோர் விளிப்பதைப்
பாங்கிலவன் சொன்னான் பணிந்தவர்க்குத் - "தாங்கும்
பெயரேதும் உண்டோ பிறிதுனக்(கு)?" என்றே
அயிர்ப்புடன் கேட்டார் அவர். 70

"சாற்றுவதும் உண்டென்னைச் சாமிநா தன்னென்றே"
மாற்ற(ம்) உரைத்தான் மறைக்காமல் - ஏற்றமுற
அப்பெயரால் உன்னை அழைப்பே(ன்) எனஆசான்
ஒப்புதலும் பெற்றார் உடன். 71

பெயரதனைச் சூட்டினார்; பின்னாளில் பையன்
வயிரமென ஆவான் வகுத்தார் - அயராமல்
கற்றுணர்ந்தான் பையனக் கல்விக் கடலிடம்;
முற்றுமதில் வைத்தான் முனைப்பு. 72

பிள்ளைவா(ள்) இட்டபெயர் பின்னா(ள்) அவனுக்குக்
கொள்ளையாய் நற்பெயரைக் கூட்டிய(து) - அள்ளுபுகழ்
சேர்த்தான் வருநாளில் செய்ததமிழ்ச் சேவையினால்;
பார்த்ததைப் போற்றியதிப் பார். 73

பிள்ளையவர்களிடம் கற்றது (ஆறு ஆண்டுகள்)

சிலம்பாட்டம் சொற்கொண்டு செய்கின்ற ஆசான்,
நலம்பலவும் கூட்டினார் நாளும் - அலம்பா
நிறைகுட(ம்) என்றுறைந்து நித்திலமாம் பாக்கள்
குறைவின்றிச் சொன்னார் குளிர்ந்து. 74

பிள்ளைத் தமிழூட்டும் பேருவகை முற்றுமாய்ப்
பிள்ளையிடம் பெற்றான் பிழையின்றி - அள்ளிநிதம்
ஈந்தார் பருகிடவே; இன்னமும் வேண்டுமென
மாந்தினான் பையன் மகிழ்ந்து. 75

தும்பியென நாளுமவன் துய்த்தா(ன்) அவர்கொடுக்கக்
கம்பன் கவித்தேன் கசடின்றி - உம்ப(ர்)
உலகத்(து) உவப்பெல்லாம் ஊட்டி அவன்பால்
நலம்பல சேர்த்தார் நயந்து. 76

தரத்தி(ல்) உயர்ந்த தமிழ்ப்பா விளக்கம்
பொருத்தமா(ய்) ஆசான் புகன்றார் - மறக்காம(ல்)
ஆசிரியர் சொன்ன அனைத்தையும் உள்வாங்கி
மாசின்றி வைத்தான் மனம். 77

தேடல் மிகக்கொண்டு தேன்சொட்டும் நற்றமிழ்ப்
பாடல் பலகற்றான் பண்புடன் - கூடல்
இறையவன் பேர்கொண்ட இன்முகத்(து) ஆசான்
நிறையவே ஈந்தார் நினைந்து 78

ஆதிமுதல் பையன்மேல் அன்பொன்றே காட்டியவர்
ஓதினார் நூல்பலவும் உய்த்துணரப் - பாதியிலே
நீங்காமல் கற்றறிந்தான் நித்தம் புதுவகைகள்;
பாங்கினில் செய்தான் பணி. 79

உம்பரே தாமென்(று) உணர்வார் செவிமடுப்போர்
கம்பனைப் பிள்ளைவாள் கற்பித்தால் - வம்புசெறி
இப்புவியில் கம்பனுக்(கு) ஈடில்லை என்றாசான்
செப்பினா(ர்) அக்கவியின் சீர். 80

கூசாமல் சேவை குறைவின்றி ஆற்றினான்
ஆசான் அடியுறைந்(து) அன்புடனே - பேசான்
மறுத்தொரு வார்த்தை; மனமொப்பி முற்றும்
கருத்துடன் செய்தான் களித்து. 81

வீட்டோ(டு) உறைந்தான் விருப்பம் மிகுந்தவனாய்,
பாட்டோடு கற்றான்நற் பண்பெல்லாம் - நாட்டோர்
வியந்து துதிக்கின்ற வித்தகர்க்குச் செய்தான்
பயன்சற்று(ம்) எண்ணாப் பணி. 82

சிந்தை மகிழ்விக்கும் சீரெல்லாம் சொல்லியவர்
அந்தாதி கற்பித்தா(ர்) அன்போடு; - தந்தையினும்
பாசம் மிகுந்தவராய்ப் பையனுக்குப் பாடங்கள்
நேசமுடன் சொன்னார் நினைந்து. 83

அந்தாதி கூட்டு(ம்) அளப்பிலா இன்பத்தை
“இந்தா! எடுத்துக்கொள்” என்றீந்தார் - சிந்தாமல்
சித்த(ம்) உறையச் சிறப்பாகச் சேமித்தான்
உத்தமப் பைய(ன்) உணர்ந்து. 84

பைந்தமிழ் நூல்பலவும் பாடம் பயில்வித்தார்
மைந்தனென ஏற்றுத்தம் மாணவனை - ஐந்தரை
ஆண்டு முழுவது(ம்) அன்புட(ன்) அப்பையன்
வேண்டுவன ஈந்தார் விழைந்து. 85

கலம்பகம் கல்லாடம் கற்றுக் களித்தான்
நலங்கூட்டும் அன்னாரை நண்ணி - "நிலந்தன்னில்
ஒப்புரைக்கக் காணே(ன்) ஒருவரையும் பிள்ளைக்குச்"
செப்பினான் ஆசானின் சீர்; 86

"தேனடை ஈவார் தினமும் திகட்டாமல்
நானடைந்தேன் கேட்கின்ற நற்பேறு - கானடைந்தான்
காதை உரைத்தயெம் கம்பன் கவிஊட்டும்
போதை எனக்குள் புக" 87

மாயவரம் கோபால கிருஷ்ண பாரதியிடம் சங்கீதம் கற்றல்

மாயவரம் வாழ்ந்திருந்த மன்னுபுகழ்ப் பாரதியும்
தூயநற் காதை தொகுத்தளித்தார் - போயடைந்து
நானிலத்தோர் நாதன்னில் நாளும் உறைந்தது;
தேனினும் தித்திக்கத் தேர்ந்து. 88

சிந்தையி(ல்) என்றும் சிவனையே வைத்திருந்த
நந்தன் கதைசொன்னார் நன்றாகச் - சொந்தமுடன்
அன்னாரைத் தந்தை அணுகி அடிவீழ்ந்து
சொன்னார் விருப்பமது சூழ்ந்து. 89

"நாட்போர் புகழ்ந்திட நந்தன் சரித்திரத்தைப்
பாட்டில் வடித்தயெம் பாரதியே! - வாட்டமற
என்னுடைய பையனுக்(கு) இன்னிசைப் பாடம்நீர்
பன்னிட வேண்டும் பரிந்து" 90

பாட்டுப் பயின்றான் பணிந்தவரைப் பண்போடு,
தேட்டை மிகக்கொண்டு தீவிரமாய் - நாட்டமுடன்,
நற்றமிழ் பிள்ளைபால், நல்லிசை பாரதிபால்
கற்றறிந்தான் பையன் கனிந்து. 91

இசைவகுப்(பு) ஏகினா(ன்) இன்பமுடன் பையன்
நசைமிகுந்து ஓதினான் நன்று - விசையுடன்
கற்றான் கலையைக் கவனமுடன்; கற்றதால்
உற்றான் உளத்தில் உவப்பு. 92



சந்தத் தமிழா? சங்கீதமா?

ஆசா(ன்) அறியாம(ல்) அச்செய்கை ஆற்றினான்
நேச(ம்) இசையில் நிறைந்திடவே - மாசறக்
கற்றா(ன்) இருவரும் கற்பிக்க; அவ்வகையில்
பெற்றான் சிறந்தநற் பேறு. 93

அச்செயலை ஒப்பாம(ல்) ஆசா(ன்) அறிந்தபின்
நிச்சயித்துச் சொன்னார் நெறிதன்னை. - "இச்சையுட(ன்)
என்னிடத்துக் கற்க இசைபயிலல் கைவிடு நீ
உன்னித் தெரிவுசெய் ஒன்று" 94

"தேர்ந்தெடுப்பா(ய்) ஒன்றை"த் தெளிவாகச் சொன்னதற்(கு)
ஓர்ந்துபதில் சொன்னா(ன்) ஒருநொடியில் - "சார்ந்தென்றும்
நிற்பேன் நான் உம்மை, நிலைத்துத் தமிழ்தன்னைக்
கற்பேன் அதன்பெருமை கண்டு" 95

அரண்டவன் போகாம(ல்) அக்கணமே சொன்னான்,
"இரண்டில் தமிழையே ஏற்பேன் - திரண்டபல
சொத்துள்ள செந்தமிழைச் செம்மையுறக் கற்றிடுவேன்
வித்தகர் உம்தாளில் வீழ்ந்து" 96

பைய(ன்) அதுகூறப் பாசமிகும் ஆசானும்
மெய்யான அப்பதிலை மெச்சினா(ர்) - ஐயமறப்
பாடம் படிப்பித்தார் பையனுக்(கு) அன்புடன்
ஆடகப் பொன்னா(ம்) அவர். 97

பிள்ளையின் வறுமை நிலை

"பண்டிதர்தான் பிள்ளைவாள்" பாரது கூறிடினும்
உண்டிக்கு நெய்யில்லை உண்மையிது. - மண்டிய
ஆதங்கம் தன்னை அவன்பதிந்தான் தன்நூலில்
பாதக(ம்) என்றதைப் பார்த்து. 98

நெய்யுடன் உண்டியது நித்தம் கிடைக்காது,
பைய(ன்) உணர்ந்தான் பரிதவித்து - மெய்யாக
மாசில்லா(ர்) இல்லத்தில் மண்டிக் கிடந்தவக்
காசில்லாப் புன்மையைக் கண்டு. 99

பொருமினான் பையன் புலவரவர் கண்ட
வறுமையா(ல்) உள்ளமிக வாடி - அருமையாய்க்
கற்பிக்கு(ம்) ஆசான்தன் கையில் பணமின்றி
நிற்பதை உள்ளில் நினைந்து. 100

புலமையுடன் கைகோர்த்துப் போகும் வறுமை
உலகி(ன்) இயல்பென்றே ஓர்ந்தான் - நலமழிக்கும்
அக்கொடுமை கண்டே அரற்றி அவன்நினைந்தான்,
"எக்கணம் தீரு(ம்) இது?" 101

திருவாவடுதுறை ஆதீனம் சுப்பிரமணிய தேசிகரைக் கண்டது: (1872)

காசினியில் பாவெல்லாம் கற்றுணர்ந்த பண்டிதர்
நேசம் மிகவுடைய நெஞ்சத்தர் - தேசிகர்
சுப்பி ரமணியன் சொல்வன்மைக்(கு) ஈடுசொல
ஒப்புலகி(ல்) இல்லை உரை. 102

ஆசிரிய(ர்) கூப்பிட அன்பால் உடனேகித்
தேசிகரைச் சென்று தெரிசித்தான் - பாசமொடு
பற்றும் உடையவராய் பையனுக்கு நல்லாசி
முற்றுமவர் கூறினார் முன். 103

மடத்தின் தலைவர் மனமுவந்து சொன்னார்,
"இடத்திற்குப் பஞ்சமென்ப(து) இல்லை - அடுத்துறைவீர்;
நன்றாய்த் தமிழ்ப்பணிகள் நாடோறு(ம்) ஆற்றுவதை
ஒன்றாகச் செய்வோ(ம்) உவந்து". 104

அன்னா(ர்) அழைப்பிலுறும் அன்பினைக் கண்டுணர்ந்து
சொன்னார் பதிலுடனே சுந்தரனார். - "எந்நாளும்
ஏற்பேன் பணியென்(று) இதுதன்னை வாழ்நாளில்
நோற்பேன் மறவாதிந் நோன்பு" 105

கம்பராமாயணப் புத்தகம் வாங்கியது

காசினியோர் மெச்சும் கவிஞானம் கம்பன்மேல்
ஆசையவன் வைத்தா(ன்) அளப்பின்றி - தேசுமிகும்
அக்கவிநூல் வாங்க அரைக்காசு(ம்) இல்லாமல்
துக்கமிக உற்றான் துடித்து. 106

ஆதிமுதல் ஆசையுற்ற அந்நூலை ஓர்முறை
வீதிதனில் கண்ணுற்றான் விற்பனைக்குப் - போதிய
காசில்லை என்று கலங்கியே அப்பையன்
கூசினா(ன்) உள்ளம் குமைந்து. 107

விலையதற்(கு) ஏழு விளம்பிடக் கேட்டு,
நிலைகுலைந்(து) அங்கேயே நின்றான். - மலையளவாம்
அக்கா(சு) அளிப்பவ(ர்) ஆருளா(ர்) என்றாய்ந்து,
தக்காரைச் சென்றடைந் தான். 108

மாயவரம் நீங்கி மறுநொடியி(ல்) ஆடுதுறை
போயடைந்து செய்தி புகன்றுறைந்தான். - நேயமுறு
தந்தையின் தம்பிபால் தன்னாசை கூறினான்,
"தந்திடுவீர் காசிதற்குத் தான்" 109

சித்தப்பா தாள்பணிந்து செப்பினான் தேவைதனை,
"புத்தகம் வாங்கப் பொருள்தருவீர்" - மொத்தமாய்ச்
சம்பளக் காசெல்லாம் சட்டென்(று) அவர்தந்தார்
கம்பன்நூல் வாங்கக் கனிந்து 110

முதல் நூல் இயற்றல் (1874)

நீலியம்மன் பேர்சூட்டி நித்தம் படித்துவக்க
நூலொன்றை யாத்தான் நொடிதன்னில். - கோலமிகு
சொன்னயம் முற்றும் சொரிந்து பலபாக்கள்
அன்னவன் தந்தான் அறிந்து. 111

உருவாக்கித் தந்தான் உலகோர் புகழும்
இருபா வகைநூல் இனித்து. - மறுவின்றி
அம்மையின் பெற்றி அழகுறக் கூறிநற்
செம்மையுடன் சேர்த்தளித்தான் சீர். 112

இத்தரணி என்றென்று(ம்) ஏத்திப் புகழ்ந்துரைக்க,
முத்தெனவே யாத்தான் முதல்நூலை. - "வித்தகராய்ப்
பின்னா(ள்) இதையாத்தான் பேறுபல பெற்றிடுவான்"
அந்நா(ள்) உரைத்த(து) அது. 113

பிள்ளைவாள் உடல்நலம் குன்றல் : (1876)

கடல்மடை போலக் கவிபாடு(ம்) ஆசான்
உடல்நல(ம்) குன்றிய(து) ஓர்நாள் - திடமுடனே
ஏற்றா(ர்) அவரதை இன்முகம் காட்டியே
மாற்ற(ம்) அறியா மனத்து. 114

அக்கறை மிக்கவனாய் அன்றாடம் பிள்ளைக்குத்
தக்கபணி செய்தான் தவறாம(ல்) - எக்கணமும்
பக்க(ம்) உறைந்தவனாய்ப் பையனும் சேவைபல
ஒக்கப் புரிந்தா(ன்) உணர்ந்து. 115

பிள்ளைவாள் உயிர் போகும் நிலையில் திருவாசகம் சொன்னது

நோய்மிக முற்றியதால் நொந்தஅம் மேனியின்
வாயினில் பேச்சு வரவில்லை - காயமதை
நிச்சயமா(ய்) ஆவி நொடிப்பொழுதில் நீங்குமெனும்
அச்ச(ம்) உணர்ந்தான் அவன். 116

புவிநீங்கி ஆசிரியர் போனால் தமிழுக்(கு)
எவருள்ளா(ர்) என்றுள்ள(ம்) ஏங்கிக் - கவலையுடன்
பாதம் வருடிப் பணிந்து மிகநொந்தான்
"ஏதுநான் செய்திடுவே(ன்)?" என்று 117

தீர்ந்தான் தயக்கம்; திடமாகச் தன்செய்கை
ஓர்ந்தா(ன்) அவனு(ம்) ஒருநொடியில் - தேர்ந்தே
படித்தே(ன்) அவர்செவியில் பாய்கின்ற வண்ணம்
படித்தா(ன்) அடைக்கலப் பத்து. 118

"அன்னவ(ர்) ஆவி அடுத்தநொடி போய்விடும்"
தன்னளவி(ல்) ஓர்ந்து தவிப்புற்றான். - பின்னர்
ஒருவாறு தேறி உரைத்தான் செவியில்
திருவா சகமென்னும் தேன். 119

அவலம் மிகக்கொண்டா(ன்) ஆசா(ன்) உயிர்போம்
கவலையா(ல்) உள்ளம் கலங்கித் - தவசீலர்
காது குளிர்ந்திடக் கற்றதிரு வாசகம்
ஓதினான் கண்ணீ(ர்) உகுத்து. 120

"அடைக்கலம் தந்தா(ர்); அறிவுக்கண் ஈந்தார்"
அடைக்கல(ம்) ஈவாய் அவர்பால்." - அடைக்கலப்
பத்தும் படித்துப் பணிவுடன் வேண்டினான்,
பித்தன் கழலைப் பிடித்து. 121

வீடவர் காணும் விருப்பு மிகக்கொண்டு
பாடினான் வாசகரின் பாதன்னைப் - பீடுடன்
வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்தவர் மாய்வதைப்
பையன் கதறினான் பார்த்து. 122

பிள்ளைவாள் சிவலோகம் சென்றது

தேனாம் தமிழ்மேலும் தித்திக்கச் செய்திடுவார்
மீனாட்சி சுந்தரத்தின் மேன்மையது - வானோரு(ம்)
அச்சுவை பெற்றுவக்கு(ம்) ஆசைமிகக் கொண்டவரா(ய்)
இச்சையுடன் சென்றா(ர்) எடுத்து. 123

மண்ணுறைவா(ர்) உற்ற மகிழ்வினைத் தாமடைய
விண்ணுறைவார் கொண்டார் விழைவதனை-எண்ணியதைச்
செய்கையென ஆக்கவழி சீக்கிரமே கண்டவர்க்கு
வையத்தில் நீக்கினார் வாழ்வு. 124

மாரியாய்ப் பாவடித்த மாண்புமிகு பிள்ளையை
வாரி அவர்சென்றார் வானுலகு - காரியத்தை
ஓர்கணத்தி(ல்) ஆக்கி உலகோரைத் துன்பமெனும்
காரிருளி(ல்) ஆழ்த்தினார் காண். 125

அழுதான், புரண்டா(ன்), அதன்பின் அவர்தாள்
தொழுதான் முடிவும் துணிந்தான் - "பழுதின்றி
அன்னார் வழிதன்னி(ல்) ஆற்றுவேன் சேவைபல
எந்நாளு(ம்) என்மொழிக்(கு)" என்று. 126

பிள்ளைவாள் வாழ்வைப் பிழையின்றிப் பின்னாளில்
கொள்ளை அழகோடு கூறினான் - உள்ளதை
உள்ளபடி என்றும் உரைக்கின்ற சீடனாய்க்
கள்ளமறச் சொன்னான் கனிந்து; 127

"அன்னவரே பாதம் அணைந்து பயின்றிட,
என்னதவம் செய்தேன்நான் இப்புவியில்? - தன்னலம்
இல்லாம(ல்) என்றன்பால் ஈடில்லா அன்புடன்
எல்லாமே தந்தா(ர்) இசைந்து" 128

"பேறு மிகப்பெற்றேன் பிள்ளையவர் சீடனெனக்
கூறுவதில் உள்ளம் குளிர்ந்தவனாய், - யாரெனக்கு
அன்னாரைப் போல அருள்செய்தா(ர்)?"என்றுதினம்
உன்னுவா(ன்) உண்மை உரைத்து. 129

சாமிநாதையர்

பைய(ன்) எனச்சொன்னேன் பாவி(ல்) இதுகாறும்,
பையன் வளர்ச்சி பகர்ந்திடவே. - ஐயரெனக்
கூறுவேன் நானினிக் கொள்ளுதற்(கு) ஏற்றநல்
ஆறதுதான் என்ப(து) அறிந்து. 130

ஒருமையில் மேலு(ம்) உரையேன்நா(ன்); அன்னார்
பெருமைக்(கு) அதுவோர் பிழையாம். - அருமையாய்
ஆசா(ன்) எனச்சொல்லி அன்போ(டு) அவர்புகழைப்
பேசியே நானடைவேன் பேறு. 131

மாயவரத்தில் ஆதீன மடத்தில் வாசம் (1877)

கட்டளைத் தம்பிரான் கண்டிப்பாய்க் கூறினார்
"விட்டகன்று போதல் விழையாதீர்" - தட்டாமல்
சாதிக்கும் உள்ளமுடன் சன்னிதா னம்பரிந்(து)
ஓதியதில் கண்டா(ர்) உவப்பு. 132

ஐயருக்குச் சன்னிதானம் வீடு கட்டிக் கொடுத்தது

வடிவமைத்துக் கட்டி வழங்கினா(ர்) இல்லம்
குடியிருப்பீ(ர்) என்று கொடுத்தா(ர்) - அடிமனத்தில்
மாசில்லா ஆதீன மாண்புமிகு தம்பிரான்
நேசமே உள்ளில் நிறைத்து. 133

தந்தையுடன் தாயும் தகவுமிகு தாரமும்
வந்தன(ர்) இல்லில் வசித்திட - எந்தவித
அல்லலு(ம்) இன்றி அனைவரும் கண்டனர்
இல்லறம் முற்று(ம்) இனித்து 134

பாண்டிநாட்டுப் பயணம் : (1878)

பாண்டியர் நாடுசென்று பல்லிடங்கள் பார்த்துவர
மூண்டெழுந்த ஆசையை முன்வைத்தா(ர்)–ஆண்டவனின்
தாள்பணியு(ம்) ஆதீனத் தம்பிரான் போவதற்கு
நாள்குறித்தார் "நீவா" நவின்று 135

தேசிகர் கூப்பிடத் தென்பாண்டி ஊர்பலவும்
ஆசையுடன் கண்டா(ர்) அவர்தயவால் – நேசமிகு
கூட்டமுடன் ஐயரும் கும்பிட்டார் கோவிலில்
பாட்டுக்கள் பாடிப் பணிந்து. 136

அந்தக் குழுவு(ம்) அலைவா(ய்) அடைந்திடக்
கந்தர் கலிவெண்பாக் கற்றறிந்தார் – செந்தில்
முருகனின் தாளில் முறையாக வேண்டி
அருமையாய்ச் சொன்னா(ர்) அது. 137

திருவுடை ஆசான் தெரிந்துரை கூறக்
கருவையூர் அந்தாதி கற்றார் – பெருமையுடன்
அன்னாரை எண்ணி அழகுக் கருவையூர்
பின்னாளில் கண்டுற்றார் பீடு. 138

தியாகராசச் செட்டியார், தான் பார்த்து வந்த குடந்தைக் கல்லூரி வேலையை ஐயருக்குத் தருவேன் என்னல்: (1880)

தேசிகரின் நண்பர் தியாகரா சர்பெயரார்,
மாசில்லா அன்பு மனத்தவர் – தேசுமிகும்
ஐயருக்(கு) ஆக்க(ம்) அளப்பின்றிச் சேர்த்திடப்
பொய்யறக் கண்டார் புகல். 139

திண்ணமுற உள்ளம் திறந்தா(ர்) ஒருநாளில்,
எண்ணமதை வைத்தா(ர்) எடுத்துரைத்து – "வண்ணமிகு
கல்லூரி வேலையினைக் கட்டாயம் நான்தருவேன்
ஒல்லையிது செய்வே(ன்) உமக்கு". 140

செட்டியார் சொன்னவச் செய்தி அளித்தது
மட்டில்லா உள்ள மகிழ்வதனை – துட்டில்லை
என்றகுறை போயொழிந்(து) இன்பமெனும் குன்றேறி
நின்றார் மகிழ்வில் நிலைத்து. 141



வேலையினை ஏற்க விரைந்துநீ வாவென்ற
ஓலை வருமென்(று) உரைத்திடவே - பாலை
வனந்தன்னில் தென்பட்ட வற்றாச் சுனையாய்
மனந்தன்னில் கொண்டார் மகிழ்வு. 142

சன்னிதா னத்தைச் சரிக்கட்டச் செட்டியார்
பன்னினார் வாதம் பலவழியி(ல்) - அன்னதோர்
ஆசை மிகக்கொண்(டு) அவர்சொன்னா(ர்) அன்போடு,
தேசிக(ர்) எண்ணம் தெரிந்து. 143

செட்டியார் மேன்மேலும் செப்பினா(ர்) எந்தவித
அட்டியையும் கேளார் அவராங்கு - முட்டியவர்
வென்றார் மனத்துற்ற வேட்கை நிறைவேற,
நின்றார் விழைவில் நிலைத்து. 144

"நல்லூ(ழ்) இவருக்கு நாடி அளிக்கிறது
கல்லூரி வேலையிதைக் கண்டிடுவீர் - பல்லோரும்
சாற்றுவார் பின்னாளில் சாமிநா தன்பெருமை
போற்றுவா(ர்) என்றும் புகழ்ந்து". 145

"நன்மை இவர்க்குண்டு; நான்காட்டும் பாதையினால்
உண்மை இதுவென்(று) உணரீரோ? - திண்மை
உடையவர் நீரு(ம்) உரைத்ததை உன்னி
விடையது தாரும் விரைந்து". 146

ஆசிபல கூறி அனுப்பினா(ர்) அன்போடு
தேசிக(ர்) உள்ளம் தெளிந்தவராய் - "ஆசிரிய(ர்)
என்னும் பணிதன்னி(ல்) ஏற்றம்நீ கண்டுறையப்,
பன்னு(ம்)உன் சீரையிப் பார். 147

சென்றார் குடந்தைக்குச் செட்டியார் ஐயருக்கு
நன்று விருந்தளித்தார் நாவினிக்க. - ஒன்றியே
பேசிக் களித்தார் புலவ(ர்) இருவருமாய்
நேசம் மிகுந்தவராய் நின்று. 148



கும்பகோணம் கல்லூரி வேலைக்கு நேர்முகத் தேர்வு

“தேர்வொன்று வைத்துத் தெரிவோ(ம்) இவர்திறத்தை
ஆர்வமுடன் கூறினா(ர்) ஆசான்மா(ர்)”.- ஊர்வந்த
ஐயருடன் செட்டியா(ர்) அங்குற்றா(ர்) எல்லையிலா
மெய்யன்(பு) உளத்தில் மிகுத்து. 149

நூல்பல கொண்டு நொடிதன்னி(ல்) ஏகினார்
பால்போல் உளங்கொண்ட பண்பாளர். - கால்பதித்துப்
பிள்ளையிடம் கற்றவற்றைப் பீடுடன் கூறினார்
வெள்ளமென வேகம் விழைந்து. 150

பிரபுலிங்க லீலை பெருமையுறச் சொன்னார்
தரங்காண வந்தோர்முன் தாழ்ந்து. - திறங்கொண்ட
ஆசான்மார் கேள்வி அனைத்திற்கும் நல்லபதில்
கூசாமல் சொன்னார் குளிர்ந்து. 151

நன்னூலில் கேட்டதற்கும் நாவன்மை குன்றாமல்
உன்னியவர் சொன்னா(ர்) உடன்பதிலைப் - பன்னினார்
தேக்கம் சிறிதுமின்றித் தேன்சொட்டும் நற்றமிழின்
பாக்களின் செம்மை பகிர்ந்து. 152

“பொய்யுரை அன்று புகல்வது(ம்) உண்மையே
செய்யுளிவர் யாத்திடுவார் செம்மையுற”. - ஐயர்சீர்
செட்டியார் கூறிடவே செப்பினா(ர்) ஆசான்மார்.
“பட்டென்று தாருமொரு பா” 153

செட்டியார் மீதே சிறப்பான பாவொன்றைக்
கட்டினார் ஐயர் கணந்தன்னில் - மட்டின்றி
உள்ளம் களிப்புற ஒப்பினா(ர்) எல்லோரும்
கள்ளமிலா ஆசானாய்க் கண்டு. 154

கல்லூரிக் கேற்றவராய்க் கண்டவுடன் தம்முடிவை
ஒல்லை உரைத்தா(ர்) ஒருமனதாய். - “நல்லதோர்
ஆசானாய் மாணவர்க்(கு) அன்போடு கற்பித்து
மாசின்றிச் சேர்ப்பீர் மகிழ்வு”. 155

அத்தனை பேரு(ம்) அணுக்கமாய்ச் சோதித்து
வித்தகர் என்றே விளம்பினர். - "இத்தகைய
நல்லாசான் வேண்டுமென நாளும் தவமிருந்தோம்"
எல்லோரும் சொன்னா(ர்) இசைந்து. 156

கும்பகோணம் கல்லூரியில் வேலை தொடக்கம் (1880)

ஆலெனைப் பாட(ம்) அடர்ந்து தழைத்திட
நாலடியில் கண்டது நற்றுவக்கம் - கோலமுடன்
பாடம் துவக்கிப் பயிற்றுவித்தார் அந்நூலின்
பாடலை முன்னர் பகர்ந்து. 157

நாலடியி(ல்) அவ்வாறு நன்கு துவக்கிப்பின்
சீலமுடன் மங்காச் சிறப்புற்றார். - "ஞாலமதில்
கண்டதில்லை வேறொருவர் கற்பிக்க இவ்வண்ணம்"
விண்டுரைத்தார் கற்றோர் விரைந்து. 158

காசினியோர் மெச்சிடக் கற்பிக்கும் நல்லதோர்
ஆசிரிய(ர்) என்றா(ர்) அறிஞரெலாம் - பேசிடுவார்
அன்றாடம் தாய்மொழிக்(கு) ஆற்றும் பணிகண்டு
நன்றாய் உலகோர் நயந்து. 159

பாடமிவர் சொன்னால் பசியும் பறந்தோடும்
கூடுவார் கேட்டிடக் கும்பலாய். - நாடுபுகழ்
ஐயரடி நீங்கா(து) அருமைத் தமிழ்கற்றுப்
பையன்கள் கண்டார் பலன். 160

பஞ்சாய்ப் பறக்கும் பயில்வோரின் ஐயமெலாம்
நெஞ்சாரக் கற்பித்தார் நேசமொடு - கொஞ்சுதமிழ்
பாக்கள் நயங்கேட்கப் பல்லோரும் ஐயர்பால்
ஈக்களென மொய்ப்பா(ர்) இனித்து. 161

கல்லூரி சென்றேதும் கற்றதிலை என்றாலும்,
கல்லூரி ஏகினார் கற்பிக்கச் - சொல்லருவி
என்று செவிமடுத்தோ(ர்) ஏத்தும் வகைதன்னில்
நன்று பகருமவர் நா. 162



குடந்தைக் கல்லூரியில் கற்பித்தது : (1880 - 1903)

கும்பகோ ணத்தில் குடித்தனம் வைத்தவர்க்குச்
சம்பளம் பாதிச் சதமாகும் - நம்பகத்
தன்மைவழி நின்று தமிழ்மொழி கற்பிக்க
உண்மையி(ல்) ஈந்தார் உழைப்பு. 163

ஏற்றார் பணிதன்னை எல்லோரும் போற்றிட
நோற்றா(ர்) அதுதன்னை நோன்பெனவே - சாற்றினார்
நூல்களில் கண்ட நுணுக்கம் பலவற்றை
ஆல்போலக் காட்டினா(ர்) அன்பு. 164

பாட்டுடன் ஐயர் பதவுரையும் கூறுவதைக்
கேட்டதும் உள்ளம் கிறுகிறுக்கும் - நாட்டமெலாம்
கற்போர் நலமே; கருதார் பிறவற்றை
அற்பமவை என்றே அறிந்து. 165

நல்லூழ் நமக்கென்றே நாளும் நவின்றுறைவார்
கல்லூரி மாணவர்கள் கண்டுணர்ந்து. - பல்லூரும்
சென்றுதம் ஆசான் சிறப்பனைத்தும் செப்புவார்
ஒன்றியதை உள்ள(ம்) உவந்து. 166

பாடுவார் பண்ணோடு பைந்தமிழ் பாப்பலவும்,
கூடுவார் மாணவர் கேட்டுவக்க - நாடுவார்
நற்றமிழ்க் காப்பியங்கள் நாளு(ம்) இசையோடு
கற்றிட உள்ளம் களித்து. 167

சொற்றிறம் கைக்கொண்டு சொக்கிடும் வண்ணமவர்
கற்றிட வைப்பார் கவியெல்லாம் - முற்றிலும்
மாணவரின் நன்மை மனம்வைத்துக் கற்பிப்பார்
ஆணவம் இல்லா(து) அவர். 168

நம்பரும் ஆற்றலொடு நாவன்மை மிக்கவராய்க்
கம்பன் கவிபலவும் கற்பிப்பார் - கும்பலாய்க்
கூடுவார் கேட்டுவக்கக் கோதில்லா மாணவர்கள்
ஆடுவார் கேட்டபின் ஆங்கு. 169

நகையுடன் கூறிடுவார் நற்றமிழ்ப் பாக்க(ள்)
இசையுடன் கூட்டிடுவா(ர்) இன்ப(ம்) - அசைவற்றுத்
தீட்டிய காதுடன் தித்திக்க மாணவர்கள்
பாட்டினைக் கேட்டுவப்பார் பார். 170

பல்லோரும் ஏத்தப் பணிந்துயர்ந்தார் மேன்மேலும்
எல்லையே இல்லா எளிமையால். - அல்ல(ல்)அளி
தற்பெருமை பேசார், தலைக்கனம் கொள்ளாமல்
பொறுப்புடன் பெற்றார் புகழ். 171

ஆசிரிய(ர்) என்றமைந்(து) அன்பினால் பிள்ளைகளை
நேசித்த(ல்) ஏற்றார் நெறியென்று - மாசின்றி
எல்லா(ர்) இடத்து(ம்) இனிக்க உரைத்தென்றும்
அல்லல் களைந்தார் அவர். 172

எற்றைக்கும் மாணவ(ர்) ஏற்றமே எண்ணிடுவார்
உற்றதுணை என்றே உறைந்திடுவார் - பற்றுவைத்துப்
பாடமுடன் நல்லபல பண்பு விதைப்பதையும்
தேடலுடன் செய்தார் தெரிந்து. 173

கவியிவர் கூறினால் கன்னலும் கைக்கும்
செவிதனில் தேன்மிகச் சேரும் - புவியுறைவோர்
போற்றிடும் வண்ணம் புகலு(ம்) அரியதோர்
ஆற்றலவர் கொண்டார் அறி. 174

ஆர்வமிக ஊட்டுவார் அன்னைத் தமிழ்மீது
நேர்வழியே எந்நாளும் நில்லென்பார் - கார்முகில்
கொட்டுவது போலிவர் கோலமிகு பாக்களைக்
கட்டுவா(ர்) ஓர்நொடியில் காண். 175

கற்பித்தார் பாடம் கலையென்(று) அதைப்போற்றி
விற்பன்ன(ர்) ஆனார் விரைந்தவரும் - அற்புதமாய்ப்
பாக்களைக் கூறிப் பயில்கின்ற மாணவர்பால்
ஆக்கமுறக் காட்டினார் அன்பு. 176

கற்றறியும் மாணவர்க்குக் கன்னலாய்த் தித்திக்கும்
நற்றமிழ்ப் பாவுரைப்பார் நாடோறும் - வெற்றிபெறக்
கல்லூரி நாட்கள் கழிந்து(ம்) அவரிருந்தார்
எல்லோர்க்கு(ம்) ஆசான் நான் என்று. 177

சேலம் இராம சுவாமி முதலியார் மூலம்
சீவக சிந்தாமணி கற்றது : 1880

“காலத்தால் முற்பட்ட காப்பியங்கள் கற்றிடுவீர்”
சேலத்துக் காரரது செப்பினார் - “ஞாலத்தில்
இந்தநூல் போலபிற ஏராளம் உண்டெ”ன்று
தந்தா(ர்) ஒருநூலைத் தான் 178

“அந்தாதி ஒப்ப அழகு மிகக்கொண்ட
சிந்தா மணிகற்பீர் சீருறவே - தந்தயிந்
நூலைப் படிப்பீர் நுகர்வீ(ர்) அதன்சிறப்பு;
வேலை துவக்கும் விரைந்து”. 179

ஒப்பரிய அன்பொன்றே உள்ளம் நிறைத்தவராய்ச்
செப்பினார் நூலின் சிறப்பெல்லாம். - “தப்பாமல்
சீவகன் காதைதரு செம்மை உணர்ந்திட
ஏவலிதை ஏற்பீ(ர்) இனிது” 180

“பிற்கால நூல்கள் பிழையறக் கற்றிட
உற்சாகம் நீர்கொண்டீ(ர்) உண்மையில் - முற்காலப்
பாக்களளி இன்பம் பருகவே நூல்தந்தேன்
ஊக்கமுடன் கற்பீ(ர்) உடன்”. 181

“சிந்தா மணியில் சிறப்புப் பலவுண்டாம்
இந்தாரும் கைக்கொள்வீர்”என்றளித்தார் - தந்தார்க்கு
நன்றி உரைத்ததை நன்றாகக் கற்றிட,
ஒன்றியே தேர்ந்தார் உளம். 182

சீவகசிந் தாமணியின் செவ்வி உணர்ந்தவரா(ய்)
ஆவலுடன் கற்றா(ர்) அதனையே - பாவதுபோல்
இல்லை பிறிதென்(று) இயம்பும் நிலைதன்னை
ஒல்லை அவரடைந்தா(ர்) ஓர்ந்து. 183

சமண நூலின் நுணுக்கங்களை அறிய,
சமணக் குடும்பங்களைச் சந்தித்தல்

சமணத்தின் கோட்பாடு சாற்றுகின்ற நூலை
அமைதியுடன் கற்றா(ர்) அவரும் - சுமையென்றே
ஏராள(ம்) ஐய(ம்) எழுந்ததால் மேற்கொண்டார்
நேராக்கும் செய்கை நினைந்து. 184

சமணக் குடும்பத்தைச் சந்தித்தார் உள்ளம்
குமைகின்ற செய்தியினைக் கூறி – "அமர்ந்திடுவீர்,
பக்கமெ"னச் சொன்னார் பரிவுமிகும் அக்குடும்பம்,
தக்கபல செய்திகள் தந்து. 185

சமணநூல் கூறுகின்ற சாத்திரங்கள் கற்க
அமர்வு பலகண்டா(ர்) அங்கு – தமதுளத்(து)
ஐயமறக் கற்றறிந்தா(ர்) அந்நாள் சமணர்கள்
வையத்தில் வாழ்ந்த வகை. 186

சிந்தாமணி நூலுக்கு மட்டுமே 28 சுவடிப் படிகள்

இருபது(ம்) எட்டுமா(ய்) ஏடுகள் சேர
அருமையாய்ச் செய்தார்நல் ஆய்வு – கருமமே
கண்ணாய் இருந்து கடமை வழுவாது
பண்ணினார் சேவை பணிந்து. 187

ஏடுகள் பற்றி அன்றைய மக்களின் அறியாமை

ஏட்டின் பெருமையை எள்ளளவும் எண்ணாமல்
போட்டார் நெருப்பில் பொசுங்கிடவே – பாட்டி(ன்)
அருமை தெரியாம(ல்) அப்பாவி மக்கள்
சிறுமை பலவகையில் செய்து. 188

சிக்கிய ஏடுகளைச் சீராக்கி வைக்காமல்
அக்கினிக்(கு) ஈந்தா(ர்) அறியாதார் – தக்கவைக்கும்
நல்லறி(வு) இல்லாமல் நாட்டோர் பலவற்றைச்
செல்லரிக்க வைத்தார் சிதைத்து. 189

எத்தனை ஏடுக்ளை இட்டா(ர்) எரிதழலில்!
பித்தனைய செய்கை புரிந்தாரே! – முத்தனைய
செந்தமிழ்ப் பாவெல்லாம் செந்தழலில் வீழ்கின்ற
விந்தையினால் கண்டோம் விழல். 190

ஏட்டி(ல்) இருந்தபல ஈடில்லாச் செல்வத்தில்
நாட்டம் சிறிதுமிலை நாட்டோர்க்கு. – வீட்டி(ல்)
இடமில்லை என்றே எடுத்தெறிந்தார் வீதி
புடமிட்ட நல்லதோர் பொன். 191

முந்தையோர் தந்தநல் முத்துக்கள் கைநீங்கிச்
சிந்தியதால் போனதம்மா சீர்பலவும் - அந்தவொரு
சீர்கேட்டால் செந்தமிழ்ச் செல்வம் சிதைந்திடப்
பார்தன்னைச் சூழ்ந்தது பாழ். 192

எரிபொரு(ள்) என்பதாய் ஏட்டினை எண்ணிச்
சரிவுற்று வீழ்ந்தார் சகதி - அறிவுதரும்
இச்சை மிகுந்தவரா(ய்) ஏட்டினைக் காக்காத
அச்செயலால் வீழ்ந்தோ(ம்) அறி. 193

பண்டைநாள் சான்றோர் பரிவுடன் பாவமுதம்
உண்டிடத் தந்தா(ர்) உவப்புடன் - கண்டெடுத்த
ஏட்டினைக் கற்றறிந்(து) இன்னமுதம் துய்க்காத
கேட்டினால் நாம்சென்றோம் கீழ். 194

ஒப்பரிய செல்வமென ஓரா(து) அவைதன்னைத்
தப்பிதமா(ய்) இட்டார் தழல்தன்னி(ல்). - அப்படியோர்
ஆக்கமிலாச் செய்கையால் அன்னைத் தமிழ்மொழியின்
பாக்க(ள்) அடைந்தன பாழ் 195

கட்டுக்கட் டாகக் கணக்கின்றி நூல்களை
இட்டார்நம் முன்னோ(ர்) எரியூட்ட - அட்டியின்றித்
தீக்கிரை ஆக்கியதால் தீராமல் நின்றது
பாக்களைச் செற்ற பழி. 196

ஏடுவழி தந்தா(ர்) எமக்கென முன்னோர்கள்
தேடுவழி கண்ட திரவியங்கள் - பாடுபட்டுக்
காக்கா(து) அவற்றைக் கனல்தனில் இட்டதனால்
ஆக்கம்போய்க் கண்டோ(ம்) அழிவு. 197

ஏடுகளைக் காக்க இவர் ஏற்ற சூள்

ஆற்றிலே போட்டா(ர்) அரிய பலவற்றைக்
கூற்று மகிழ்வுடன் கொண்டேகப் - போற்றிய
நூலெல்லாம் போயழிய நொந்தாள் தமிழ்த்தாய்தன்
கோலம் அழியக் குமைந்து. 198

"இந்தச் செயலை இறுதியுறச் செய்திடுவேன்"
வந்து வழங்கினார் வாக்குறுதி – "செந்தமிழின்
சீர்மிகு காப்பியங்கள் சீரழிந்து போகாமல்
நேர்பட வைப்பேன் நினைந்து" 199

பொல்லாச் செயலால் புழுங்கியதா(ல்) ஏடுறை
எல்லா இடத்திற்கு(ம்) ஏகினார் – "வல்லோனாய்ப்
போர்புரிந்(து) இக்கொடுமை போக்குவேன் நிச்சயமாய்"
மார்தட்டிச் சொன்னார் மகிழ்ந்து. 200

ஏடுகள் சேகரித்த தமிழ்ப்பணி

நாடிப் பணிசெய்தார், நாட்டமதில் குன்றாமல்
ஓடிப் பயணித்தா(ர்) ஊர்பலவும் – தேடியவர்
திக்குப் பலசென்றார் தேன்சொட்டும் ஏடுகை
சிக்கும் வரையில் சிறந்து. 201

ஏறிப் பரணெல்லா(ம்) ஏடுகளைத் தேடினார்;
ஆறி அணையாத ஆர்வமுடன் – மாறின்றிப்
பார்வையைச் செய்யும் பணியில் முடக்குதலே
தீர்வென்று கண்டார் தெளிந்து. 202

நாடு முழுதும் நலிவேதும் காணாமல்
ஏடு மறைந்த இடம் ஏகினார் – நாடி
இருக்கு(ம்) இடத்தை இமைக்குமுன் சேர
உறக்கமுடன் போக்கினா(ர்) ஊண். 203

ஏடிங்(கு) உளதென்(று) எவர்சொன்ன போதினும்
ஓடி அடைந்தார் உடனாங்கு – தேடியே
எந்தவித மாயினு(ம்) ஏடுகைக் கொள்ளவே
தந்திடுவார் தம்முயிரும் தான். 204

தேடினார் முற்றிலும் தேரோடும் வீதியெலாம்
ஓடினார் எச்சிறிய ஊரெனினும் – நாடினார்
செந்தமிழுக்(கு) ஏற்றம் சிறப்புறச் சேர்த்திட
அந்தவிதம் சேவைதனில் ஆழ்ந்து. 205

மூச்சொன்றி(ல்) ஏகியிவர் முன்னிற்பா(ர்) ஏடென்னும்
பேச்சொன்று கேட்டால் பெயர்ந்தங்கு – வீச்சொன்றில்
அவ்விடம் செல்கின்ற ஆர்வம் உளமுறையும்
செவ்வியில் நின்றார் சிறந்து. 206

வேலை எனக்கிங்கு வேறுளதோ என்றுரைத்(து)
ஓலை ஒளிந்தயிட(ம்) ஓடிடுவார் - ஏலுமோ?
என்றவோர் ஐயம் எழும்பாமல் அந்தவிடம்
சென்றடைதல் ஐயர்தம் சீர். 207

கறையான் துணைகொண்டு காலன் புசித்தான்
நிறையவே ஏடுகளை நித்தம் - குறையிதனைப்
போக்கத் தொடுத்தார் புனிதமிகு போர்தன்னை;
ஆக்கமுற வென்றா(ர்) அதில். 208

அரும்பிய(து) உள்ளில் அளப்பிலா ஆர்வம்,
விரும்பியே ஏற்றாரவ் வேலை - கரும்பொக்கும்
கன்னித் தமிழ்ப்பாக்கள் கண்டெடுக்கும் சேவைதனை
உன்னிடு(ம்) என்றுமவ(ர்) உள். 209

காவிய நூல்பலவும் காலன்கை சேராமல்
ஆவி அளித்தே அவர்காத்தார் - தாவியவர்
ஓர்கணத்தில் சென்றடைந்தா(ர்) ஓலை இருக்குமிடம்
யார்தகவ(ல்) என்றாலு(ம்) ஏற்று. 210

காலைமுதல் மாலைவரை கால்வலியைப் பாராது
சாலை நடப்பார் சளைக்காம(ல்) - ஓலை
இருக்குமிடம் செல்ல எதுவுமிவர் செய்வார்;
செருக்கின்றிப் பல்லூரும் சென்று. 211

சேரா இடமில்லை; செல்லாத ஊரில்லை;
ஏறாப் பரணென்(று) எதுவுமில்லை - மாறாத்
திறமுடன் ஏடுகளைத் தித்திக்கும் நூலாய்
உரமுடன் தந்தார் உவந்து. 212

துன்பமென எண்ணாமல் துய்த்தடைந்த தேடலில்
இன்பமென ஏற்பா(ர்) எதுவரினும் - மன்பதைக்கு
நற்றமிழ் நூல்களை நாடோறும் கண்டெடுத்தா(ர்)
உற்றபணி தன்னி(ல்) உவந்து. 213

தூசியுடன் தும்மலளி துன்பத்தை எண்ணாமல்,
வீசி நடந்திடுவார் வீதியெலாம் - காசினியில்
ஏடுதனைத் தேடிநித(ம்) எந்தவொரு மூலைக்கும்
ஓடுவதில் கண்டா(ர்) உவப்பு. 214

அல்லும் பகலுமாய் ஐயர் உழைத்ததைச்
சொல்லும் திறனுண்டோ சொற்களுக்கு - வில்லதனை
நீங்கிடும் அம்பாய் நிலைகொள்ளா வேகமுடன்
பாங்கினில் செய்தார் பணி. 215

படைபதைக்கும் வெப்பத்தைப் பார்த்து மருளார்;
தடைகண்டு காலமவர் தாழ்த்தார் - அடைந்திடுவார்
ஏடுள்ள ஊரை இமைப்பொழுதி(ல்) ஏகிடுவார்;
பாடு பலவகையிற் பட்டு. 216

ஆசை புகழ்மீது அணுவளவும் வைத்திடார்;
நேசம் தமிழ்மேல் நிலைத்ததால் - காசினியில்
தேட்டையுடன் ஏடுகளைத் தேடித் திரிகின்ற
வேட்டையில் கொண்டார் விருப்பு. 217

பண்டைத் தமிழ்மொழியின் பாக்களை ஏடுகளில்
கண்டதும் ஐயர் களிப்புறுவார் - அண்டி
உரிமை உடையார்பா(ல்) உள்ளன்பின் வேண்டித்
தருவீ(ர்) எனப்பணிவார் தாழ்ந்து. 218

இடையூ(று) எனவே எதையும் கருதார்.
தடையேது கண்டும் தளரார் - விடையேறும்
எம்பிரான் தாளொன்றே ஏற்ற துணையென்று
நம்பியவர் கண்டார் நலம். 219

மூலைமுடுக் கெல்லாம் முனைப்புடன் சென்றிடுவார்,
ஓலையுண்(டு) என்னு(ம்) உரைகேட்டால் - வேலையதைப்
போற்றினார் மிக்க பொறுமையுடன் அப்பணியை
ஆற்றினார் நாளு(ம்) அவர். 220

ஆர்வமுடன் சேவைநித(ம்) ஆற்றும் முயற்சியில்,
சோர்வு களைவார் சொடுக்கொன்றில் - பார்வைதனை
ஏற்ற பணியன்றி இன்னொன்றில் வைக்காமல்
போற்றியதால் கொண்டார் புகழ் 221

பட்டிதொட்டி என்றவர் பாராரெப் பேதமும்,
அட்டியென ஏதுமிலை ஐயருக்கு - "விட்டிடேன்
ஓரேடு கூட" உரைத்திவ(ர்) ஆற்றினார்
பாரேற்றும் வண்ணம் பணி. 222

பலன்கருதிச் செய்யார் பணிதன்னை என்றும்
நலமொன்றே கூட்டிடுவார் நாளும் - நிலந்தன்னில்
எம்மூலை யாகினும் ஏடிருக்(கு) என்றறிந்தால்
அம்மூலை செல்வா(ர்) அடுத்து. 223

ஏடு புவிதன்னி(ல்) எங்கே இருந்தாலும்
தேடுவார் சற்றும் திறம்பாமல் - ஓடுவார்
போய்க்கண்டு சீராக்கிப் பொன்னான நூலென்று
தாய்க்கவர் ஈந்தார் தழைத்து. 224

போதுமென்(று) எண்ணார் புரிகின்ற சேவையினை
ஏதுதடை கண்டு(ம்) எதிர்கொண்டார் - கோதகற்றித்
தேடுவா(ர்) எவ்விடத்தும்; தேன்றமிழ் ஏடுகளை
நாடுவதில் கொள்ளார் நலிவு. 225

நடந்திடுவார் காதங்கள் நற்றமிழுக்(கு) ஆக்கம்
திடங்கொண்டே ஊரெல்லாம் தேடி - அடம்பிடித்துக்
குன்றாத ஆர்வம் கொடுத்தநல் ஊக்கத்தால்
ஒன்றியது செய்தா(ர்) உவந்து. 226

காதவழி எண்ணார்; கதிரவன் சூடெண்ணார்;
மாதம் பொழியும் மழையெண்ணார்; - காதலுடன்
கன்னித் தமிழுக்குக் காலமெல்லாம் செய்பணியை
உன்னி நடந்தார்பல் ஊர். 227

காசுபணம் எல்லாம் கரைந்தாலும் தேடுகிற
ஆசையில் நின்றா(ர்) அயராமல் - காசினியில்
ஏட்டுச் சுவடிதனை எங்கெங்கும் தேடுவதில்
நாட்ட(ம்) அவர்வைத்தார் நன்கு. 228

அன்று தொடங்கிய அப்பணியில் வேரூன்றி
நின்றுபுகழ் பெற்றார் நிலையாக - ஒன்றிநிதம்
அன்னைத் தமிழ்மொழிக்(கு) ஆற்றுகிற சேவையில்
தன்னையே அர்ப்பணித் தார். 229

சேகரித்த ஏடுகளை ஆராய்தல்

பலவங்(கு) இருந்தன பாவின் படிக(ள்)
அலமந்து போகா(ர்) அதனால் - நலஞ்சேரக்
கச்சிதமாய்க் கண்டு களைகளை நீக்குதல்
இச்சையுடன் செய்தா(ர்) இவர். 230

ஒவ்வோர் படியையு(ம்) உன்னிப்பா(ய்) ஆய்ந்ததன்
செவ்வி அறிந்தார் சிறப்பாக - அவ்விதமாய்
முன்னோர் அளித்த முழுநூல் பலவற்றை
அன்னவரே மீட்டார் அறி. 231

கலையென்று கற்றுக் களையகற்றும் ஆக்க(ம்)
உலைவின்றிச் செய்தா(ர்) உணர்ந்து. - நிலைபெற்று
நின்றிடும் வண்ணமவர் நித்திலமாம் காப்பியங்கள்
மன்றேற வைத்தார் மகிழ்ந்து. 232

சிற்றஞ் சிறுகாலை செய்யத் தொடங்கினால்,
முற்றும் தனைமறந்து மூழ்கிடுவா(ர்) - எற்றைக்கும்
பாட்டுப் பிழையிருப்பின் பார்த்தெடுத்து நீக்குகின்ற
ஏட்டுப் பணியில் இசைந்து. 233

ஏராளம் பேதங்க(ள்) ஏட்டிலே கண்டாலும்,
நேராக்கி வைத்தார் நிலைபெறவே. - ஆராய்ந்து
தக்கதோர் பாடம் தமிழ்மீது கொண்டந(ல்)
அக்கறையால் தந்தா(ர்) அவர். 234

சிந்தாமணி பதிப்பித்தது : (1887)

மன்னுபுகழ்ச் சிந்தா மணியைப் பதிப்பித்தார்;
இன்னமுத(ம்) ஈந்தார் இணையின்றித் - தன்னிகர்
இல்லாத் தரமுடைத்(து) ஈதென்(று) அவனியோர்
எல்லோரும் சொன்னா(ர்) இசைந்து. 235

வகுத்த நெறியில் வழுவாது நின்று
தொகுத்தார் கவிகளைத் துய்த்தே - பகுத்துணர்ந்து
தக்கதைக் கொண்டு தரமற் றவைதள்ளிச்
சிக்கலைத் தீர்த்தார் சிறந்து. 236

சீராட்டிச் செய்தார் சிறந்த தமிழ்ப்பணியைப்
பாராட்டில் வையார்தம் பார்வையைப் - போராடித்
தந்தார் கரத்தில், "தமிழா படி"யென்று
சிந்தா மணியென்னுஞ் சீர். 238



சிந்தாமணி கண்ட சிறப்பு

தவமென்று செய்த தமிழ்ச்சேவை தன்னை
அவனியில் பல்லோ(ர்) அறிந்தா(ர்) - இவர்செயலை
நாற்றிசையும் வாழ்கின்ற நற்றமிழ்ப் பண்டிதர்கள்
போற்றி உரைத்தார் புகழ். 238

"ஒப்பில்லா ஓர்பதிப்(பு)" உள்ளார்ந்(து) உரைத்தனர்
இப்பாரில் கற்றோ(ர்) இசைவுடன் - செப்பரிய
சிந்தா மணிப்பதிப்பின் செம்மை உகந்தவராய்த்
தந்தார்நற் சான்றிதழைத் தான். 239

வேலைத் திறன்செய்த வித்தை தனைக்கண்டு,
மேலைப் புவிவாழ்வோர் மெச்சினார் - ஓலைதனில்
செப்பி அவர்புகழ்ந்தார் சிந்தா மணிநூலின் .
ஒப்பரிய தன்மையினை ஓர்ந்து. 240

உள்ளூரைப் போல உலகத்தில் பல்லோரும்
அள்ளிப் பருகினார் அவ்வமுதம் - தெள்ளுதமிழ்ச்
சீர்முழுதும் கண்டோமிச் சிந்தா மணியிலெனப்
பார்முழுதும் போற்றியது பார். 241

யாப்புடன் பாவின்சீர் யாவும் அறிந்தவப்
போப்பும் பகர்ந்தார் புகழுரையைக் - காப்பியம்
நன்றாய்ப் பதிப்பித்த நற்பணியைக் கண்டவுட(ன்)
ஒன்றிப் புகழ்ந்தா(ர்) உணர்ந்து. 242

ஆங்கில நாட்டவர் அன்பு மிகக்கொண்டு
வீங்குபுகழ் தன்னை விளம்பினார் - ஓங்கி
வளமுறும் உம்பணி வற்றாதென் றான்றோர்
உளமாறச் சொன்னா(ர்) உவந்து. 243

"செம்மைப் பதிப்பாகும் சிந்தா மணிநூலும்
உம்மைப் புகழ்கின்றோம் உண்மையிலே - அம்மம்மா;
ஏற்றம் தமிழுக்(கு) இனிதே அளித்தநும்
ஆற்றலுக் குண்டோ அளவு?" 244

பாரிஸ் நகருறைந்த பண்டிதர் வின்ஸோனும்
ஜுறினார் உள்ளம் குளிர்ந்தவராய்ச் - சீரிய
சிந்தா மணியின் சிறப்பினைக் கண்டபின்
தந்தார் தமிழ்வாழ்த்தும் தான். 245

ஏனைய நூல்களைப் பதிப்பித்தது

சுவர்த்தமதி கொண்டு குறைவின்றி ஏடுகளைப்
பார்த்தபின் ஐயர் பதிப்பித்தார். - கீர்த்திமிகு
பண்டைய நூல்கள் பலவும் மகிழ்ந்தன
உண்டெமக்கு வாழ்வென்(று) உகந்து. 246

ஏட்டிலே கண்டபிழை ஏராள(ம்) என்றாலும்,
பாட்டைப் பதம்பிரிப்பார் பக்குவமாய். - வீட்டி(ல்)
இறைந்து கிடக்கின்ற ஏட்டுப் பணியில்
நிறைந்திருக்கும் என்றுமவர் நெஞ்சு. 247

மீட்டார் தமிழ்மொழியின் மேன்மைமிகு காவியங்கள்
நாட்டார் படித்து நலம்பெறவே - காட்டார்
கடுகளவும் சோர்வு களமிறங்கி விட்டால்,
முடுகிப் பணிமுடிப்பார் முன். 248

ஏடுகளைக் கண்டெடுத்தே ஏற்றமிகு நூலாக்கல்
நாடு(ம்) இவர்மனம் நாளெல்லாம் - தேடுதலின்
அல்லலை எண்ணா(து) அருமைத் தமிழ்ப்பணி
ஒல்லையில் செய்வார் உவந்து. 249

ஏடுகளில் .பேதங்கள் ஏராளம் கண்டதனால்
பாடுமிகப் பட்டார் பகுத்துணரத் - தேடுதலில்
பின்னடை(வு) இன்றிப் பிழைதனை நீக்குவதில்
அன்னவர்க்கு நேர்தான் அவர். 250

சுவடி சரிபார்த்துச் சொற்க(ள்) அறித(ல்)
அவனியில் யார்க்கு(ம்) அரிதாம் - கவனமாய்ப்
பார்த்துப் படியெடுத்தார் பாக்கள் முழுவதையும்
நேர்த்தியதில் முற்றும் நிறைத்து. 251

ஏட்டி(ல்) இருந்தன எண்ணிலாப் பேதங்கள்;
பாட்டில் பிழைகளும் பல்வகையாம் - வாட்டிய
துன்பத்தால் சற்றும் துவளா(து) உழைத்தவராய்
மன்பதைக் கீந்தார் மகிழ்வு. 252

கடந்துவந்த காலத்தின் காப்பியங்கள் தேடி
நடந்துபல ஊர்சென்றார் நாளும் - குடந்தைநகர்க்
கல்லூரி ஆசான் கவனமுடன் செய்தமையால்
நல்லூழ் மிகக்கண்டோம் நாம். 253

இறந்துபோ காம(ல்) இனியதமிழ் நூலைச்
சிறந்து பதிப்பித்த சீரோன் - பிறந்ததன்
நோக்கமாய் ஏற்றதனை நோன்பென்று போற்றினார்
ஆக்கமோ(டு) என்று(ம்) அவர். 254

வரிவரியா(ய்) ஒப்பிட்டு வக்கணையாய் ஏட்டைச்
சரிபார்க்கக் கொள்ளார் சலிப்பு - குறிதன்னை
நீங்காமல் நின்று நிலைத்த மகிழ்வுடன்
ஆங்கவர் செய்தா(ர்) அது. 255

கன்னலாம் நூல்களைக் கச்சிதமா(ய்) அச்சேற்ற
மின்னலாய்த் திட்டங்கள் மேற்கொண்டார் - தன்னளவில்
திண்ணமிகக் கொண்டவராய்த் தீர்மானம் செய்துதம்
எண்ணமெனச் சொன்னார் இவை. 256

"பண்டைய நூலைப் பதிப்பிக்கும் நல்லதோர்
தொண்டை மறந்தும் துறந்திடேன் - உண்டுடலில்
மூச்சென்னும் நாள்வரையில் மூர்க்கமாய்ச் செய்வேனிப்
பேச்சினி(ல்) இல்லை பிழை" 257

"ஆயு(ள்) அளித்தவனே ஆணை எனக்கிட்டான்,
போய்மொழிக்குச் சேவை புரியென்றே! - மாய்ந்துநான்
மண்ணுக்குள் போகும்நாள் மட்டும் பணியிதைப்
பண்ணுவதில் பின்வாங்கேன் பார்" 258

"ஏற்றம் தமிழ்மொழி என்றென்றும் கண்டிடவே
ஆற்றலுடன் சேவைபல ஆற்றிடுவேன் - மாற்றறியாத்
தேட்டையுட(ன்) இப்பாதை தேர்ந்தே பயணிப்பேன்
நாட்டம் பிறகொள்ளேன் நான்". 259

"ஆற்றுப் படுத்தியே அன்றாடம் செய்துவப்பேன்;
தோற்றென்றும் போகேன்; தொடர்ந்திடுவேன்; - கூற்றென்னைக்
கொண்டேகும் நாள்வரை கோதின்றிச் சேவைபல
உண்டென்று செய்வேன் உணர்ந்து". 260

அன்னைத் தமிழுக்(கு) அணிகலனாய் நூல்பலவும்
பொன்னை நிகர்த்தவர் பூட்டினார் - தன்னளவில்
கூறுவார் வாழ்வின் குறிக்கோ(ள்) இதுவன்றி
வேறுண்டோ மேலாம் விழைவு? 261

இறுதிவரை அப்பணியை ஏற்றமுடன் செய்தார்
உறுதியில் குன்றா(து) உறைந்தார் - பெரிதென்றே
எந்தத் தடையையும் ஏற்காமல் தன்னுயிரைத்
தந்தார் தமிழுக்கே தான். 262

வசதிகள் வேண்டார்; வருத்தமிவர் கொள்ளார்;
அசதியால் கொள்ளா(ர்) அலுப்பு - கசடற
நூலை மிகுந்தநல் நேர்த்தியுடன் அச்சேற்றும்
வேலை முனைந்தார் விழைந்து. 263

சாமிநா தன்பதிப்பே சாலச் சிறந்ததெனப்
பூமியில் கற்றோர் புகழ்ந்துரைத்தார் - "ஆமிதுபோல்
இல்லை தமிழ்மொழியில் இன்னொன்(று)" எனப்புலவர்
சொல்லிக் களிப்புற்றார் சூழ்ந்து. 264

பாடபே தம்முழுதும் பக்கத்தின் கீழ்தருவா(ர்)
ஏடு பலவு(ம்) இயம்பியதைத் - தேடலுடன்
நல்லபல நூற்களை நாட்டோர் நுகர்ந்திடக்
கல்லிப் பதிப்பித்தார் காண். 265

"எனக்கு விளங்கவில்லை" என்றே உரைத்தார்
தனக்குள்ள ஐயத்தைத் தந்து - மனத்துக்குப்
பட்டதைச் சொல்லிப் பதிப்பினில் உண்மையை
இட்டவர்க்(கு) இல்லை இணை. 266

எல்லோரும் கற்க எளிய முறைதன்னில்
பல்வேறு நூல்கள் பதிப்பித்தார் - நல்லதொரு
திட்டம் வகுத்துத் தெளிந்த உரையுடன்
அட்டியறத் தந்தா(ர்) அவை. 267

உறவாடி நாமெல்லா(ம்) உள்ளுணர்ந்து கற்க
இறவாமல் காப்பாற்றி ஈந்தார் - கரவாமல்
கண்டெடுத்த நூல்களைக் காசினியோர் நன்மையுற
விண்டுபதிப் பித்தார் விரைந்து. 268

செத்தழிந்து போகாமல் சீராக நூலுக்குப்
புத்துயிர் ஊட்டிய புண்ணியர் - இத்தரணி
வாழ்தமிழர் என்றும் வளங்காண ஆற்றினார்
பாழ்பலவும் போக்கும் பணி. 269

அச்சென்னும் வாகனத்தி(ல்) அக்கால நூல்களை,
இச்சையுடன் ஏற்றி இவர்வைத்தா(ர்) - உச்சத்தில்
எம்மொழி என்று(ம்) இருக்கும் நிலையுறச்
செம்மையின் சேர்த்தார் சிறப்பு. 270

செல்லரித்துப் போகாமல் சீராக ஏடுகளை
நல்லவிதம் ஆய்ந்து நகலெடுத்தார் - சொல்லழகுப்
புத்தகமாய் நம்கை புழங்கிடச் செய்தநல்
வித்தகர் காலில் விழு. 271

தாய்மொழிக்(கு) ஆக்கம் தவறாமல் தேடுதலை
ஓய்வகற்றிச் செய்தா(ர்) உவப்புட(ன்) - ஆய்வுபல
கண்டபின் ஏடுகளைக் காசினியோர் கைதந்தார்,
வண்டமிழ் நூலாய் வகுத்து. 272

அன்று தமிழ்ப்புலவோ(ர்) ஆக்கிய காப்பியம்
பொன்றாமற் காத்தநற் புண்ணியர் - என்றுமவை
நின்று நிலைக்கும் நெடுநூல் பலவற்றை
நன்றவர் தந்தார் நமக்கு. 273

இறும்பூது முற்றாக எம்மொழி எய்த
அரும்பாடு பட்டா(ர்) அவரும் - கரும்பெனத்
தித்திக்கும் ஏடுகளைத் தேன்வார்த்த நூலாகச்
சித்திக்க வைத்தார் சிறந்து. 274

ஒப்பரும் நூல்க(ள்) உயிர்பெற்(று) உலவிடத்
தப்பாமல் செய்தார் தமிழ்ப்பணி - எப்பொழுது(ம்)
ஏடுகளைப் பற்றியே எண்ணி இவரவற்றைத்
தேடுதல் செய்தார் தினம். 275

திருத்தங்கள் செய்வதற்குத் தேவை இருப்பின்,
பொருத்தமாய் மாற்றம் புரிந்தார்– கருத்துமிக
ஊன்றிக் கவனமுட(ன்) ஒவ்வொன்றும் செய்தநற்
சான்றோர் இவரென்றே சாற்று. 276

தொடர்ந்து பிறநூல்களைப் பதிப்பித்தது

சிந்தா மணிதொடங்கிச் செம்மைமிகு நூல்பலவும்
தந்தார் மிகுந்த தரமுடன் - பந்தாக்கள்
காட்டாமல் ஆற்றினார் காலமெலாம் நற்பணிகள்
நாட்டோர் நலமெண்ணி நன்று. 277

வளையாது நின்றார் வகுத்த நெறியில்;
உளையாது நாளு(ம்) உழைத்தார் - இளையாத
ஏற்றம் தமிழ்மொழி எய்திப் பெருமையுற
ஆற்றினார் சேவை அறிந்து. 278

அலம்பாமல் சேவைபல ஆற்றும் நெறியில்
சிலம்பும் அளித்தார் சிறக்க - நலம்பலவும்
கோடிக் கணக்கில் குவியத் தமிழ்மொழிக்கு
நாடிப் பணிசெய்தார் நன்று. 279

புறநானூற் றுக்குப் புதுவுயிர் ஊட்டல்
மறவாது வைத்தார் மனத்தில் - கரவாமல்
அச்சேற்றித் தந்தா(ர்) அருமைமிகு நூலாக
இச்சகம் பெற்ற(து) இனிப்பு. 280

எட்டோடு பத்தென்னும் ஏட்டின் கணக்காக
அட்டியின்றி ஐயர் அகழ்ந்தெடுத்தார் - திட்டமிட்டு,
ஒன்றையும் அன்னார் ஒதுக்கா(து) அளித்திட்டார்,
கன்றினுக்கு ஆப்போல் கனிந்து. 281

மிச்சமுள்ள நூல்பலவும் மேதினியோர் மெச்சிட
அச்சேற்றம் பெற்றன அன்னாரால் - விச்சைமிகு
சாமிநா தன்பணியால் சாகாமல் கண்டன
பூமியில் நல்ல புகல். 282

தந்தார் நமக்கென்று, தங்கத் தமிழ்நூல்கள்
அந்தநல் ஏடுகளை ஆய்ந்தபின் - முந்துகிற,
தன்னலம் இன்றித் தமிழ்ச்சேவை ஆற்றுவதில்
அன்னவரை விஞ்சுபவர் ஆர்? 283

ஐயர் பதிப்பென்னும் அற்புதம்

மூலமுடன் சேர்த்தளித்தார் முற்றும் உரைதன்னை,
நூலதில் சொல்வார் நுணுக்கங்கள் - சாலச்
சிறந்த பதிப்பென்றே செப்பினார் கற்றோர்
திறந்த மனத்தால் தெரிந்து. 284

இதுவரையி(ல்) எம்மொழியி(ல்) இவ்வண்ண நூல்கள்
எதுவுமே வந்ததில்லை என்றார் - புதுமையுற
ஆய்வினால் வந்தவோ(ர்) அற்புதம் என்றது
மாயிரு ஞாலம் மகிழ்ந்து. 285

பதவுரை தந்தார் படிப்போர்க்(கு) அதுதான்
உதவிடும் என்ப(து) உணர்ந்து - சிதைவுறாச்
சிந்தையதில் வைத்துச் சிறப்புடன் நூலாக்கும்
விந்தை உறுமோ விழல்? 286

நூலுக்குச் சீராய் நுவன்றபல முன்னுரையைச்
சாலப் புகழ்கின்றார் சான்றோர்கள் - ஞாலமிதில்
நித்திலம் போலவொளி நித்தமும் சிந்துகிற
சொத்தென்(று) அவைதம்மைச் சூழ்ந்து. 287

முன்னுரைக் கீடில்லை மூவுலகு(ம்) என்றிங்குப்
பன்னுவார் கற்றறிந்த பல்லோரு(ம்) - அன்னதொரு
சீரிய நூலாக்கம் செய்த பிறிதொருவர்
பாரினில் உண்டோ பகர். 288

தரத்தி(ல்) இதுபோல் தமிழ்நூல்கள் இல்லை,
உரத்த குரலி(ல்) உரைத்தார்; - கருத்துடன்
ஐயர்தம் நூல்களை ஆய்ந்த பெருமக்கள்
ஐயமறச் சொன்னார் அது. 289

சேதுபதி மன்னர் ஓர் ஊரைத் தானமாக அளித்தது : (1898)

மன்னராம் சேதுபதி மாசில்லா நேசமுடன்
பன்னினார் தம்மாசை பண்புடன். - "என்னருமை
ஐயரே! ஓரூ(ர்) அளிப்பே(ன்) உமக்கென்றே"
மெய்யதனைச் சொல்லில் மிகுத்து. 290

ஐயர் அதனைப் பண்போடு மறுத்தது

"தார்வேந்தே! அன்பின் தலைமகனே! மன்னிப்பீர்
ஊர்வேண்டேன்; என்மறுப்பை ஒப்பிடுவீர். - சீர்கொண்ட
நெஞ்சகம் முற்றும் நிறைந்திடும் உம்மன்பைப்
பஞ்சமற வேட்பேன் பணிந்து" 291

பொருளாசை கொள்ளார்; புகழாசை வேண்டார்;
அருளாசை வேண்டு(ம்) அகமும் - மருளாது
மன்னரின் தானம் மறுத்திதைக் கூறினார்
அன்னதிவர் பெற்றி அறி. 292

சென்னை மாநிலக் கல்லூரியில் வேலை (1903)

மன்னுபுகழ் கண்டநல் மாநிலக் கல்லூரி,
"தன்னிகர் இல்லாத் தமிழ்வேந்தே! - என்னகத்து
வந்திடுவீர், மாணவர்க்கு வற்றாத் தமிழின்பம்
தந்திடுவீர் இங்குறைந்து தான்" 293

என்றே இறைஞ்சிட ஏற்றா(ர்) அழைப்பினை;
சென்றார் குடும்பமாய்ச் சென்னைக்கு - நன்றாகக்
கற்பித்தார் பாடம் கனிவுடன் கல்விக்குப்
பொற்புடன் சேவை புரிந்து. 294

தன்னலம் பேணார்; தமிழ்நலமே பேணியவ(ர்)
உன்னதமாய்ப் பாட(ம்) உரைத்திடுவார் - கன்னலெனத்
தித்திக்கப் பாக்கள் திகட்டா(து) உரைக்குஞ்சீர்
சித்திக்கப் பெற்றார் சிறந்து. 295

குடந்தையில் பெற்றார் குறையில்லா நற்பேர்;
அடைந்தார் அதுபோல ஆங்கும் - கடைந்தெடுத்த
சொல்லாட்சி கண்டதில் சொக்கியே போனதால்
"நல்லாசான்" என்றதிந் நாடு. 296

அன்புடன் மாணவர்க்(கு) ஆன்ற குணமெல்லாம்
பண்புடன் போதித்தார் பக்குவமாய் - மன்பதையும்
ஏற்றமிகும் ஆசானை ஈச(ன்) எனக்கண்டு
போற்று(ம்) அவர்தம் பொறை. 297

மகோ மகோபாத்தியாய பட்டம் பெற்றது (1906)

"பெரிதின் மிகப்பெரிய பேராசான்" என்னும்
அரிதான பட்டம் அடைந்தார் - பரிதியென
ஓங்குபுகழ்ச் சீலர் உவேசா தன்பெருமை
வீங்கியது பாரில் விரிந்து. 298

ஆசான் பெருமைதனை அன்றாட(ம்) அன்போடு
பேசிக் களித்தார் புவியுறைந்தோர் - ஈசனருள்;
அன்றியிதி(ல்) இல்லை அடியேன் திறனேதும்
என்றியம்பி ஏற்றா(ர்) இவர். 299

மகாகவி பாரதியின் பாராட்டு

ஊரறிந்த சீலரெலா(ம்) ஒன்றாகக் கூடியே
பாரறியக் கொண்டாடிப் பாடினார் - பாரதியும்
சாற்றினான் முற்றாகச் சாமிதா தன்புகழைப்
போற்றிப்பா மாரி பொழிந்து. 300

"காசுபணம் இல்லை, கணமனைத்தும் இன்பமுறும்
ஆசைநிறை வேறுமோர் ஆறுமில்லை - காசினியில்
இக்கவலை கொள்ளாதீர்; ஈடிலாப் பேருடனே
எக்கணமும் வாழ்வீர் இனித்து" 301

"புலவர்தம் நாவில் புகழுடனே நீரென்றும்
பலவருடம் வாழ்ந்திருப்பீர் பாரில் - திலகமெனும்
எம்மொழி ஒப்ப இறவாப் புகழுடனே
செம்மையுற வாழ்வீர் சிறந்து". 302

கூட்டத்தில் பங்கேற்றுக் "கும்பமுனி" என்றழைத்துப்
பாட்டி(ல்) அவர்புகழைப் பாடினான் - காட்டினான்
ஆசிரியர் பால்மதிப்(பு) அற்புதமாய்ப் பாரதியும்
நேசமே உள்ளில் நிறைத்து. 303

வ.உ.சியுடன் தொடர்பு : (1908)

சிறையிருந்த செம்மல் சிதம்பரம் பிள்ளை
குறையில்லா நல்ல குணவான் - நிறைகுடமாய்
ஐயம் பலவற்றை ஐயர்பால் கூறியவர்
உய்யவழி நேர்ந்தா(ர்) உணர்ந்து. 304

வள்ளுவன் வாக்குதனில் வந்தசில ஐயத்தை
உள்ளுணர்ந்து பிள்ளை உரைத்திட்டார்- கொள்ளும்
நெறிநின்ற ஆசான் நிறைந்த மதியால்
அறிந்(து)ஐயம் நீக்கினார் ஆங்கு. 305

"தியாகராச விலாசம்" வீடு கட்டியது : (1909)

இல்லொன்று கட்டினா(ர்) இன்பமுட(ன்) ஓர்பெயரைச்
சொல்லொணா நன்றியுடன் சூட்டினார் - எல்லையறத்
தித்திக்கு(ம்) ஆசான் தியாகரா சர்பெயரைப்
பத்தியுடன் வைத்தார் பணிந்து. 306

ஐயர் நடத்தும் தமிழ் வகுப்பில் சென்னை மாநிலத்தின் (தமிழறியா) ஆளுநர் ஒன்றரை மணிநேரம் உட்கார்ந்து பாடம் கேட்டது : (24-01-1912)

கொள்ளை அழகுடன் கூறுவது கேட்டிட
வெள்ளைத் துரையும் விரும்பினார் - உள்ளமதில்
ஆசை நிறைந்தவரை ஆட்டிடவே ஓர்நாளில்
வீசினார் வெட்கம் விரைந்து. 307

சொல்லருவி கேட்டுச் சுகம்பெறும் நோக்கமொடு
கல்லூரி வந்தார் களிப்புற - வல்லவரின்
பேச்சில் மனமொன்றிப் பேரின்பம் கண்டுறைந்தார்
ஆச்சரியம் மேலிட் டவர். 308

ஒருமணிக்கும் மேலாக உட்கார்ந்து கேட்டார்
பெருமைமிகும் ஆசிரியர் பேச்சைக் - கருமமாய்
ஆங்கில நாட்டார் அழகுத் தமிழ்கேட்கும்
தாங்கொணா வேட்கை தழைத்து. 309

கற்றதில்லை ஆளுநர் கன்னல் தமிழ்மொழியை,
உற்றநல் ஆசையதும் உந்தியது - முற்றிலுமாய்த்
தம்மை மறந்து தமிழுரை தந்தவரின்
செம்மை உணர்ந்தார் சிறிது. 310

திலகருடன் சந்திப்பு (1918)

சீலத்தி(ன்) உச்சம்; சிறைவாசம் செய்தவர்
பாலகங் காதரரைப் பாரறியும் - ஞாலத்தில்
ஓங்குபுகழ் பெற்றவரை ஒப்பில்லா எம்மாசான்
பாங்குடன் கண்டார் பரிந்து. 311

தென்னகம் வந்த திலகரைப் போய்ப்பார்க்க
உன்னினா(ர்) ஐய(ர்) உளமகிழ்ந்து - சென்னைநகர
தன்னி(ல்) அவரைத் தரிசித்து வாயாரப்
பன்னினார் வாழ்த்துப் பணிந்து. 312

ஆசான் பணியை அறிந்த திலகரும்
பேசினார் சேவையின் பீடுதனை - மாசில்லா
அத்தலைவர் சொன்ன அனைத்தையு(ம்) ஐயர்தம்
சித்தத்தில் வைத்தார் சிறந்து. 313

ரவிந்திரநாத் தாகூருடன் சந்திப்பு (1919)

வங்கக் கவிதாகூர் வந்திருந்தார் சென்னைக்கு
பொங்கும் மகிழ்வோடு போய்ப்பார்த்தார். - சங்கமித்த
அவ்விருவர் கொண்டநல் ஆனந்தம் கூறிட
எவ்வித(ம்) ஏலு(ம்) எனக்கு. 314

ஆசிரியர் இல்காண அன்புடன் ஏகினார்
மாசில்லாத் தாகூரும் மாலையில் - பேசிடப்
பின்னுமோர் வாய்ப்புப் பிழையின்றிப் பெற்றிட
அன்னவர் செய்தா(ர்) அது. 315

வேலையிலிருந்து ஓய்வு பெறுதல் : (1919)

வரம்பென்று கண்ட வயதை அடைந்தார்,
நிரம்பிய செம்மையில் நின்று - கரங்குவித்துப்
“போய்வாரும்” என்று புகன்றது கல்லூரி,
“ஓய்வினில் தோய்வீர் உகந்து”. 316

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழக வேலையேற்றல் (1924)

சென்னை நகர்நீங்கிச் சேர்ந்தார் சிதம்பரம்
பின்னும் பயில்விக்கும் பேறுற்றா(ர்) - அன்னைத்
தமிழ்மொழிக்குச் சேவை தவறாம(ல்) ஆற்றல்
அமிழ்தினும் நன்றென்(று) அறிந்து. 317

அண்ணா மலையரசர் அன்பினைக் கண்டுபிற
எண்ணாமல் ஏகினார் இன்புற்றுக் - கண்ணார
நாதன் தரிசனம் நாளும் கிடைக்குமது
போதுமெனக் கென்றே புகன்று. 318

அர்ப்பணிக்கும் எண்ணமோ(டு) அன்புநிறைப் பெட்டகமாய்க்
கற்பித்தார் மிக்க கனிவுடன் - வெற்பெனவே
ஓங்கியவர் செய்தபல ஒப்பில்லாச் சேவையினால்
வீங்கியெம் தோள்முட்டும் விண். 319

மாணவர் நன்மை மறவாமல் எண்ணியதைப்
பேணுவார் சற்றும் பிழையின்றி - நாணுவார்
தன்னருமை கூறின்; தலையும் கவிழ்ந்திருப்பார்
அன்னதவர் சீலம் அறி. 320

கி.வா.ஜகந்நாதன் மாணவராய் இணைதல் (1927)

சீடன் ஜகந்நாதன் சேர்ந்தார் அவரிடம்
தேடல் முடிந்து தெளிந்துரைத்தார் - "பாடல்
பலவும் படிக்கப் பணிந்திடுவேன் உம்மை,
நலமெனக் கீவீர் நயந்து" 321

மாசில்லா மாணவரைக் கண்டு மகிழ்வுடன்
தேசுறக் கற்பித்தார் தீந்தமிழைப் - பாசமிகும்
ஐயரிடம் பெற்ற அறிவால் ஜகந்நாதன்
வையத்தில் கண்டார்நல் வாழ்வு. 322

சாற்றினார் பின்னர் சரிதை முழுவதுமே
போற்றினா(ர்) ஐயர் புகழெல்லாம் - ஏற்றமே
காணும் நெறிதன்னில் காதல் மிகுந்தவராய்ப்
பேணினா(ர்) ஆசிரியர் பீடு. 323

ஆசான் வரலாற்றை ஐயரொரு நூலாக்கிக்
காசினிக் கீந்தார் கடனறிந்து - நேசமிகும்
அச்செய்கை போலவே ஐயர் சரிதையை
இச்சையுடன் தந்தார் இவர். 324

சகந்நாதன் தந்தார் சரிதைத் தொடர்ச்சி
அகந்தனில் கொண்டந(ல்) அன்பா(ல்) - உகந்தவரின்
சீலமிகு வாழ்நெறியின் செம்மைபல கூறிடும்
நூலின் பகுதி நுவன்று. 325

சென்னைப் பல்கலைக்கழகம் டாக்டர் பட்டம் அளித்தது (1932)

நல்லபணி செய்தவரை நாவாரப் போற்றிய,
பல்கலையும் தந்தது பட்டத்தைக் - கல்விக்
கடலென வாழ்ந்தார்க்குக் காட்டுகின்ற நன்றிக்
கடனென உள்ளம் களித்து. 326

சாலச் சிறந்தயெம் சாமிநா தையருக்குக்
கோலஞ்செய் பட்டம் கொடுத்துவந்தார் - ஆலெனவே
நின்றவரின் பீடு நிலைத்திட "டாக்டர்"என
ஒன்றியே தந்தார் உவந்து. 327

பிள்ளைவாள் சரிதை பதிப்பித்தது (1933)

ஆசானைத் தெய்வமென அன்புடன் போற்றியதால்
வாசமுறச் சொன்னார் வரலாற்றைக் - காசினியில்
அப்பெரியார் செம்மை அழியாமல் நின்றிடவே
ஒப்பருநூல் தந்தா(ர்) உவந்து. 328

முழுவதும் சேகரித்தார் முன்னின்று செய்தி
வழுவின்றிக் கூறும் வகையில் - எழுதினா(ர்)
ஏராளம் பக்கம் இரவுபக(ல்) ஆராய்ந்தார்
தீராத அன்பில் திளைத்து. 329

மூண்டெழுந்த காதல் முனைப்பி(ல்) எழுதியதால்,
ஆண்டுபல சென்றன ஆய்வுகளில் - தூண்டுகின்ற
ஆர்வம் துணைநிற்க அச்சரிதை மன்பதையின்
பார்வைக்கு வைத்தார் பதிந்து. 330

"ஆறு வருட(ம்) அவரிடம் கற்றுவக்கும்
பேறு முழுமையாய்ப் பெற்றேன்யான் - கூறுவேன்
ஆசான் வழங்கிய அன்பில்லை என்றால்நான்
தூசாவே(ன்) என்று துணிந்து". 331

"மிக்கநலன் கூட்டுவித்த மேலான ஆசானை
எக்கணமு(ம்) ஏத்துவே(ன்) ஈடின்றித் - தக்கபடி
அன்னார் வரலாற்றை ஆய்ந்துநல் நூலாக்கப்
பன்னாளும் செய்வேன் பணி." 332

"பூசை தினம் செய்து போற்றத் தகுந்தயென்
ஆசானுக்(கு) உற்றகடன் ஆற்றிடுவேன் - காசினிக்(கு)
அன்னார் சரிதை அளிக்காமல் நானிரேன்"
சொன்னா(ர்) உளங்கொண்ட சூள். 333

விளம்பரம் செய்தார் விவரம் அறிய,
உளந்தனி(ல்) உண்மை உறைந்து - களந்தன்னில்
முற்று(ம்) இறங்கி முழுமூச்சில் சேகரிக்கச்
சற்றுமவர் கொள்ளார் சலிப்பு. 334

வானளவு சீர்கொண்ட வள்ளல் புகழுரைக்க,
ஆனதெலாம் செய்தா(ர்) அயராமல் - தேனாக
ஆசான் சரிதையை ஆக்கி அளித்திட்டார்
வாசமிகக் கொண்ட வகை. 335

போனார் புவிநீங்கிப் புண்ணியம் செய்துவந்த
மீனாட்சி சுந்தரனார் மேலுலகு - வானோங்கப்
போற்றி அவர்சரிதை பூமியில் நின்றுலவ
ஆற்றலுடன் தந்தார் அவர். 336

ஆசான் வரலாற்றை அற்புதமாய்க் கூறியதைப்
பேசிக் களிக்கின்றோம் பீடுடனே - காசினியில்
நன்றிக்(கு) இலக்கணமாய் நம்சாமி நாதனையே
ஒன்றிப் புகழும் உலகு. 337

எண்பத்தோராம் ஆண்டு நிறைவு தமிழ்த்தாத்தா பட்டம் (1936)

ஆண்டுகள் எண்பதும் ஆயின; பின்னுமதைத்
தாண்டியவர் செய்தார் தமிழ்ப்பணிகள் - மூண்டெழுந்த
காதலுடன் கல்கிமிகக் கச்சிதமாய் அத்தருணம்
ஓதினார் பட்டம் உவந்து. 338

பல்கிப் பெருகியிப் பாரோர் புகழ்ந்துரைக்க
நல்கினார் பட்டத்தை நாட்டமுடன் - கல்கி
"தமிழ்த்தாத்தா" என்றழைக்கத் தப்பா ததுவே
அமைந்த(து) அதுதொட்(டு) அவர்க்கு. 339

"அமிழ்தினும் தித்திக்கும் ஆன்ற மொழியான
தமிழுக்கு நீர்தானே தாத்தா - உமையென்றும்
போற்றிடுவோம்" என்று புனைந்ததம் பட்டத்தைச்
சாற்றினார் மெய்ம்முழுதும் சார்ந்து. 340

ஆசிரியர் கல்கியதை ஆழ்ந்தபே(ர்) அன்புடன்
மாசின்றிச் சொன்னார் மனமுவந்து - தேசுமிகு
தாத்தா எனவழைத்தார் தாய்மொழிக்கே அன்னாரை
ஏத்தினார் பட்டம் இசைத்து. 341

சென்னையில் காந்தியைச் சந்தித்தது (1937)

நாட்டில் புழங்குகின்ற நன்மொழிகள் பற்றியதோர்
கூட்டத்தை ஆன்றோர் குறித்திட்டார் - நாட்டமுடன்
அண்ணல்நம் காந்தியும் ஆர்வமுடன் பங்கேற்று
வண்ணமுறத் தந்தார்தம் வாழ்த்து. 342

கூட்டமாய்ச் சென்னையில் கூடும் பலரையும்
வாட்டமற அன்பின் வரவேற்கக் - காட்டுகிற
பண்பினா(ல்) எல்லோரும் பாராட்டு(ம்) ஆசானை
அன்பர்கள் வாவென்றா(ர்) ஆங்கு. 343

அங்குசென் றேகும்மு(ன்) ஆசையுடன் காந்தியார்
தங்குமிடம் வந்தார் தமிழ்த்தாத்தா. - பொங்கிவரு(ம்)
அன்புட(ன்) அண்ணல் அவரை வரவேற்றார்
பண்புடன் நன்றாய்ப் பணிந்து. 344

எண்ணுதற்கு(ம்) ஒண்ணாத ஏற்றம் மிகக்கண்ட
அண்ணலைக் கண்டார்ந(ம்) ஆசானும் - நண்ணியே
அன்னாரைக் கண்ட அளப்பிலா ஆனந்தம்
பன்னினார் முற்றும் பணிந்து. 345

வந்தவரைக் காந்தி வரவேற்றார் நற்றமிழில்
தந்தா(ர்) இருக்கையும் தன்னருகில் - சிந்தையுற
ஆசான் பணிபற்றி ஆர்வமுடன் கேட்டறிந்தார்
பாசமே உள்ளில் படிந்து. 346

கவடில்லா அன்புடன் காந்தியார் கேட்கச்
சுவடிப் பணியுரைத்தார் சோரா(து) - அவனிபுகழ்
அண்ணலைக் கண்டவ(ர்) ஆசி பெறுகின்ற
எண்ணம் முடித்தா(ர்) இனிது. 347

உத்தமராம் காந்தியுட(ன்) ஓர்மேடை தன்னிலவர்
தித்திக்கப் பேசினார் தீந்தமிழில் - சத்தியனை
நேரிலே கண்ட நினைப்பினால் வற்றாத
மாரியாய்க் கொண்டார் மகிழ்வு. 348

"ஆசானா(ய்) ஏற்றிவரி(ன்) அன்பில் தமிழ்கற்கும்
ஆசைநான் கொண்டே(ன்) அளப்பின்றி" - தேசத்தின்
தந்தையாம் காந்தி தமிழ்ப்பற்று நெஞ்சத்தை
உந்திடச் சொன்னா(ர்) உணர்ந்து. 349

உத்தமதானபுரம் பள்ளிக்குத் தன்னுடைய நிலத்தைக் கொடுத்தது

உத்தம தானபுர(ம்) ஊரிலுறை மாணவர்க்கு
வித்தை அளிக்கும் விதமாகச் - சொத்தான
தன்நிலம் பள்ளிக்குத் தான(ம்) எனத்தந்தார்
தன்னலம் பேணா தவர். 350

என் சரித்திரம் நூல் எழுதியது (1942)

வாசனின் பத்திரிகை வாய்ப்பன்று தந்திடவே
வாசமுறச் சொன்னார் வரலாற்றைக் - காசினியோர்
ஏத்திப் புகழ எழுதினார் தம்சரிதை
தாத்தா தொடர்கதையாய்த் தான். 351

தன்சரிதை தந்தார் தமிழக மக்களுக்கே,
"என்சரிதை நூலை" எழுதியிவர் - "பொன்சரிதை"
என்று புவிவாழ்வோர் ஏத்தும் வகையிலது
நின்று தழைக்கும் நிலைத்து. 352

எழுத்தாளர் உ.வே.சா

பட்டறிவால் தாம்கற்ற பாடம் பலவற்றைக்
கட்டுரையாய்த் தந்தார் கலைமகளில் - விட்டகலா
ஆர்வமுடன் சொன்னா(ர்) அவர்வாழ்வின் பல்நிகழ்வைப்
பார்முழுதும் கற்கப் பணிந்து. 353

சான்றோர் பலரின் சரிதை இவர்தந்தார்
ஆன்ற தமிழி(ல்) அழகாகத் - தோன்றுபல
எண்ணங்கள் தம்மை எழுதிக் குறிப்பென்று
வண்ணமுற வைத்தார் வகுத்து. 354

அக்குறிப்பின் எண்ணிக்கை ஆயிரத்தைத் தொட்டாலும்
சிக்கலதில் காணார் சிறிதளவும் - பக்குவமாய்
நூலென்(று) அதனை நொடியில் பதிப்பித்தார்
ஆலென்று நிற்கு(ம்) அது. 355

மற்ற இதழ்களிலும் மன்னு தமிழ்நயங்க(ள்)
உற்றவகை தந்தா(ர்) உலகிற்குக் - கற்ற
பலவு(ம்) பகர்ந்தார் படிப்போ(ர்) அடையும்
நலமொன்றே வேட்டார் நயந்து. 356

உரைநடையின் வீச்சை உணர்ந்தவரா(ய்) ஐயர்
வரையின்றித் தந்தார் வகுத்துக் - கரையில்லா
இன்பமக் கட்டுரைகள் ஈந்திடக் கண்டது
மன்பதை நல்ல மகிழ்வு. 357

"கண்டதும் கேட்டதும்"கட்டுரை நூல்தந்தார்,
உண்டதில் முற்றுமாய் உண்மையே - விண்டுரைத்தார்
தேன்வார்த்த சொற்கொண்டு தேர்ந்த நிகழ்வெல்லாம்
தான்பார்த்த வண்ணமவை தந்து. 358

நினைவுகளின் மஞ்சரியாய் நூலொன்றில் ஐயர்
புனைவேதும் இன்றிப் புகன்றார். - அனைவரும்
கொண்டாடும் வண்ணம் குறித்த நிகழ்வுகளை;
விண்டாங்கு வைத்தார் விரித்து. 359

இரண்டாம் உலகப்போரால் சென்னை நீங்குதல் : (1942)

பாரிலுறை நாட்டோர் பலரும் தமக்குள்ளே
போர்செய்வோம் என்று புறப்பட்டார் - "சீரியநற்
சென்னையில் வாழ்தலினிச் செய்யோம்" எனமுடிவைப்
பன்னியே சென்றார் பலர். 360

போர்நிமித்த(ம்) அங்கிருந்து போவதே நன்றென
ஊர்நீங்கிச் சென்றா(ர்) உடனிவரும் - சேருமிடம்
தேர்ந்தா(ர்) அருகில் திருக்கழுக் குன்றமென,
ஓர்ந்தாங் கடைந்தா(ர்) உவந்து. 361

மண்ணுலகை நீத்து விண்ணுலகெய்தல் (28-04-1942)

பொய்யின்றிச் சேவை புரிந்தார்; புகழேணி
மெய்யுறவே ஏறினார் மேதினியில்.-ஐயரவர்
போற்றிநன் காற்றிய பொன்னார் பணிகட்குக்
கூற்றுவன் வைத்தான் குறி. 362

கருமத்தில் மட்டுமே கண்வைத்து வேலை
ஒருமுகத்துச் செய்வா(ன்) உணர்ந்து - தருமத்துச்
சீல(ர்) உடல்விட்டுச் சீவனை நீக்கியக்
காலன் புரிந்தான் கடன். 363

கழுகுவரும் குன்றினைக் கால(ன்) அடைந்து
பழுதின்றிச் செய்தான் பணியை - எழுதக்
கரமும் மறுக்கிறது; கண்ணீரும் முட்ட,
உரமுமெனக்(கு) இல்லை உணர். 364

"ஆளினி இல்லை அருந்தமிழுக் கென்றாலும்
மீளவழி செய்யேன்மா மேதையே! - வேளையது
வந்ததா(ல்) வந்திடுவீர் வானுல(கு) என்னுடனே"
அந்தகன் சொன்னா(ன்) அவர்க்கு. 365

காவிய நூலெல்லாம் கண்டெடுத்துத் தந்தவரி(ன்)
ஆவியைப் போக்கினா(ன்) அக்கணமே - பாவியலை
அற்புதமாய்க் கற்பித்(து) அழியாப் புகழ்பெற்ற
விற்பன்னர் ஏகினார் விண். 366

மண்ணில் பலவேடு மாண்புறக் கண்டபின்
விண்ணிலும் தேடி விரைந்தாரோ? - எண்ணிறந்த
சீலமொடு வாழ்ந்தநற் சிங்கத்தை ஓர்கணத்தில்
காலனெடுத் தேகினான் கண்டு. 367

எட்டுமுறை பத்துடன் ஏழும் அவரெய்தி
விட்டார் புவிவாழ்க்கை விண்ணுற - மட்டில்லாத்
துக்கத்தில் பூமி துவண்டு கதறிய(து),
ஒக்கப் பெருந்துய(ர்) உற்று. 368

சோக(ம்) உலகோரைச் சூழ்ந்திடக் காலனவ(ர்)
ஆகத்தில் நீக்கினா(ன்) ஆவிதனை. - சாகும்வரை
மண்ணுலகி(ல்) எம்மொழிக்கு மாட்சிமை தேடியவர்
விண்ணுலகு சென்றார் விரைந்து. 369

ஆசானி(ன்) ஆவி அடங்கிற்(று) எனக்கேட்ட
காசினியோர் கண்ணீர்க் கடல்வீழ்ந்தார் - பேசுகிறார்
இன்றளவு(ம்) அன்னாரின் ஈடில்லாச் சேவையை
மன்றங்கள் தோறும் மகிழ்ந்து. 370

ஐயர் மறைந்ததா(ய்) அத்தனை பேருமே
பொய்யுரை அன்றோ புகல்கின்றார்; - வையத்தில்
எந்நாள் வரையில் இனியதமிழ் வாழுமோ
அந்நாளும் வாழ்வா(ர்) அவர். 371

என்றுமுள் செந்தமிழ்போல் எம்மிதயம் வாழ்கின்றார்
பொன்றுத(ல்) இல்லாப் புகழுடனே - நன்றுபல
காப்பியம் எம்மொழிக்குக் காத்தளித் தாரைநான்
கூப்புவேன் கைகள் குவித்து. 372

எற்றைக்குக் காண்போம் இனி?

பட்டம் பலதந்தார் பாரோர் பணிந்திவரை;
எட்டிய உச்ச(ம்) இமயமாம் - அட்டியறச்
சற்றும் சலிப்பின்றிச் சாதித்து வென்றவரை
எற்றைக்குக் காண்போ(ம்) இனி? 373

"ஒப்பரிய உச்சத்தி(ல்) உட்காரச் செய்திடுவேன்
தப்பாமல் நானும் தமிழ்மொழியை – அப்பணியை
நற்றவம் என்றேற்பேன் நாளுமெ"னச் சொன்னவரை
எற்றைக்குக் காண்போ(ம்) இனி? 374

மனங்கொண்டா(ர்) ஆவலொன்று; "மங்காத் தமிழர்
இனமென்றும் கண்டிடணு(ம்) ஏற்றம்" – தினமந்தப்
பெற்றியில் நின்ற பெருமைக் குரியவரை,
எற்றைக்குக் காண்போ(ம்) இனி? 375

தஞ்ச(ம்) அடைந்து தமிழன்னை தாள்வீழ்ந்து,
கொஞ்சமோ செய்தபணி கூறுதற்கு? – நெஞ்சகம்
முற்றும் தமிழ்ப்பணியை முன்னிறுத்திச் செய்தாரை,
எற்றைக்குக் காண்போ(ம்) இனி? 376

வேறொன்றில் வையார் விருப்பம் சிறிதளவும்
ஆறுத(ல்) கண்டார் அருந்தமிழில் – மாறின்றி
உற்ற தமிழ்ப்பணியில் உள்ளம் களித்தாரை,
எற்றைக்குக் காண்போ(ம்) இனி? 377

காட்டுவார் செய்கையில் கண்ணிய(ம்) எப்பொழுதும்
நீட்டுவார் தம்கரத்தை நேசமுடன் – வாட்டமற
மற்றவர் நன்மை மனங்கொண்டு வாழ்ந்தாரை
எற்றைக்குக் காண்போ(ம்) இனி? 378

ஏலாத(து) இல்லையென என்றும் பகர்ந்திடுவார்
ஆலாலம் உண்ட அரன்துணையால் – நூலோரின்
சொற்றிறம் எல்லாம் சுவைபடச் சொன்னாரை,
எற்றைக்குக் காண்போ(ம்) இனி? 379

பாட்டும் பொருளும் பகுத்திவர் கூறுவதைக்
கேட்டதும் உள்ளம் கிறுகிறுக்கும் – நாட்டமுடன்
நற்றமிழ் வேள்வி நடத்திக் களித்தாரை,
எற்றைக்குக் காண்போ(ம்) இனி? 380

கனிவொன்றே காட்டிநிதம் கற்பிக்கக் கற்போர்
இனிமையே கண்டா(ர்) இவர்பால் – முனிவகற்றி,
நற்றமிழ்ப் பாடம் நலம்கூட்டிச் சொன்னாரை,
எற்றைக்குக் காண்போ(ம்) இனி? 381

அச்சேற்றி நூலென்(று) அளித்தார் கரந்தன்னில்,
இச்சையுடன் கற்க இலக்கியங்கள் - நிச்சயித்த
ஒற்றைப் பணியை உளத்திருத்தி வைத்தாரை,
எற்றைக்குக் காண்போம் இனி? 382

ஒப்பில்லாக் குணக்குன்று உ.வே.சா

தோன்றியதே தாய்மொழிக்குத் தொண்டாற்ற என்றுறைந்தார்,
"சான்றோ(ன்)" எனவுலகம் சாற்றிடவே - ஆன்றதமிழ்
நூல்கள் மறையாமல் நின்று புவிதன்னில்
கால்கொள்ள வைத்தார் களித்து. 383

எள்ளாமை கைக்கொண்டா(ர்) ஏற்றமிகு கொள்கையெனத்
தள்ளா(ர்) அதையென்றும் தம்வாழ்வில் - உள்ளார்ந்த
அன்புநெறி தன்னி(ல்) அனைவரையும் தம்செயலால்
இன்புறச் செய்தார் இனித்து. 384

தாய்மொழியின் செம்மை தரணி உறைமக்கட்கு
ஆய்வுகள் மூல(ம்) அறிவித்தார் - மாய்கின்ற
நேரம் வருமளவும் நித்தம் உழைத்திட்ட
வேறொருவர் உண்டோ விளம்பு. 385

ஆங்கிலக் கல்வி அடியோ(டு) அவர்க்கில்லை;
தாங்கினார் என்றும் தமிழையே. - ஓங்குபுகழ்
நற்றா(ய்) அவளும் நலங்கூட்டும் சேய்பணியால்
உற்றாள் கடல்போ(ல்) உவப்பு. 386

பலருக்(கு) உதவி பகராமல் செய்யும்
உலகிற் சிறந்த உளத்தர் - நலமொன்றே
எண்ணிப் பிறர்க்குதவி ஏற்ற(ம்) அவர்காணப்
பண்ணியிவர் என்றும் பணிந்து. 387

குளுமை முகத்தினில் கொஞ்சிட வாழ்ந்தார்,
எளிமைக்(கு) இலக்கணம் என்று - களிதரும்
பாக்க(ள்) உரைப்பார் பழந்தமிழ் நூல்கூட்டு(ம்)
ஆக்கம் முழுது(ம்) அறிந்து. 388

உறுதியுடன் சேவை உளமாரச் செய்தார்
இறுதிநாள் மட்டு(ம்) இசைந்தே - அரிதாகும்
கோள்சற்று(ம்) இல்லாக் குணக்குன்று இவரொப்ப
ஆளொன்று காண(ல்) அறி. 389

தொண்டுகிழ(ம்) ஆனாலும் தொண்ணூறைத் தொட்டாலும்
உண்டுபணி என்றே உழைத்திட்டார். - பண்டுநம்
தாய்மொழி கண்ட தரமான நூற்கெல்லாம்
மாய்வழி தன்னை மறுத்து. 390

உத்தம தானபுர(ம்) ஊரின் நினைப்பதுவும்
நித்த(ம்) இவரால் நிலைபெறும் - முத்தனைய
நூல்கள் தமிழில் நிலைபெறத் தந்ததால்
ஆலொப்ப வாழ்ந்தா(ர்) அவர். 391

சோதனை என்றெதையும் சொல்லாது வாழ்நாளில்
சாதனைகள் செய்தார் சளைக்காம(ல்) - காதலுடன்,
சென்னியவர் தாள்வைத்துச் செப்பிடுவே(ன்) ஐயர்தம்
மன்னுபுகழ்ச் செம்மை மகிழ்ந்து 392

பிணியுற்ற போதும் பிழையின்றிச் செய்தார்;
பணியங் குறுமோ பழுது? - மணியாக
அன்னைக்குச் சூட்ட அணிகலன் தேடினார்;
முன்னிலும் வேகம் முனைந்து. 393

“இன்னும் படிதாத்தா; இன்னும் படிதாத்தா”
பன்னினான் பையன் பரிவுடன் - உன்னியதைக்
கூட்டத்தில் வண்ணமுறக் கூறும் நகைச்சுவையால்
வாட்டமறக் கண்டார்நல் வாழ்வு. 394

ஐயரின் திருவுருவம்

பஞ்சகச்ச(ம்) என்னுமோர் பாரம் பரியவுடை,
நெஞ்சகம் முற்றிலும் நேர்மையென - வஞ்சகம்
சற்றுமே இல்லாத சாமிநா தன்புகழை
முற்றும் உரைத்தேன் முனைந்து. 395

நெடிய உருவத்தின் நெற்றியில் நீறு,
வடிவமோ ஒப்பில்லா வண்ணம் - கடியாமல்
அன்புநிறை சொல்லா(ல்) அனைவரையு(ம்) ஈர்த்திடுவார்
இன்ப(ம்) குறைவின்றி ஈந்து. 396

உள்ளத்தின் தூய்மை உணர்த்தும் அவரணிந்த
வெள்ளை நிறங்கொண்ட வேட்டியும் - எள்ளளவும்
பொய்யின்றிக் கண்டார் புகழேணி ஏறியவர்
வையத்தார் போற்றும்நல் வாழ்வு. 397

ஐயரின் ஆளுமை

தூக்கம் மறந்திடுவார், துன்பம் எதுவரினும்
ஊக்கம் தளரார் ஒருபொழுதும். - நோக்கமதில்
நின்று நிலைத்திருக்கும் நிச்சயித்த செய்கைதனில்
ஒன்றிடும் மாறாத உள். 398

செந்தமிழ் நூல்கள் சிதையாமல் காத்தவற்றைத்
தந்தவ(ர்) அன்றோ தமிழ்த்தாத்தா - முந்தையர்தம்
பாடல் பலவற்றைப் பாழின்றிக் கண்டெடுக்கும்
தேடலில் வாழந்தார் தினம். 399

உத்தம தானபுரம் ஊரில் உதித்தவரை
இத்தரணி வாழ்த்து(ம்) இணையின்றிச் - சத்தியனாம்
சாமிநா தன்பேர் சலிப்பேதும் கொள்ளாமல்
பூமிநிதம் போற்றும் புகழ்ந்து. 400

புதுப்பித்தா(ர்) ஏடுகளைப் புத்துயி(ர்) ஊட்டிப்
பதிப்பித்தார் பல்வகைப் பாக்கள் - மதிப்புடன்
தூயதமிழ் நூலைத் துலக்கும் தனியொரு
நாயகனாய் வாழ்ந்திருந்தார் நன்கு. 401

தள்ளா வயதிலும் தாய்மொழிக்குச் சேவைபல
தள்ளா(து) அளித்தார் தமிழ்த்தாத்தா - கொள்ளார்
ஒருநாளும் ஓய்வை. உழைப்பைத் தமிழுக்குத்
தருவார் மறவாமல் தான். 402

தன்புகழ் நாடார்; தமிழ்நலமே நாடிடுவார்;
என்புகழ்வே(ன்) ஐயா இவரையான்? - மன்பதையில்
உண்டோ இவர்போல ஒன்றிப் பணிசெய்தார்?
கண்டா(ல்) அவரைநீ காட்டு. 403

அரிதிவ(ர்) ஒப்பவே ஆளொருவர் காணல்
கருதுவார் என்றும் கடமை - பெரிதென்றே
எண்ணத்தில் வைத்தார் இனியதமிழ்ச் சேவையைத்
திண்ணமாய் அச்செய்கை தேர்ந்து. 404

எத்தனை காப்பிய(ம்) இன்று படிக்கின்றோம்!
அத்தனைக்கும் பின்புல(ம்) ஐயரன்றோ! - சொத்தென்று
தேடித் தமிழில் திரவியங்கள் சேர்த்தவரைப்
பாடிப் பணிதலே பண்பு. 405

ஐயருக்குப் பாமாலை

சாத்துவேன் பாமாலை சாமிநா தன்தாளில்,
பூத்துக் குலுங்கும் புதுப்பாவால். - தோத்திரம்
அன்றாடம் சொல்லி அவர்புகழ் பாடுவேன்
குன்றாநல் அன்பில் குளிர்ந்து. 406

ஏத்திப் புகழ்ந்திருப்பே(ன்) எந்நாளு(ம்) எம்தமிழ்த்
தாத்தாவின் பாதம் தலைவைத்துக் - கூத்தாடி
இன்றுநாம் கொண்டாடு(ம்) ஏராளக் காப்பியங்கள்
அன்றவர் தந்தவை ஆம். 407

ஐயரைப் போல்சேவை ஆற்றியவ(ர்) இல்லையிது
பொய்யுரை அன்று புகழுரையே - வையமிதில்
சின்னோர(ம்) கிட்டினும் சீர்மொழிக்குத் தேடுவதில்
தன்னோரில் லாதவரே தான். 408

செல்லரித்து முற்றும் சிதில(ம்) அடையுமுன்
நல்லபல நூல்மீட்டார் நாட்டினிலே - எல்லையிலா
ஆர்வம் மிகக்கொண்டே அந்நூ(ல்) அனைத்தையும்
நேர்பெற வைத்தார் நிலைத்து. 409

மறைந்தென்றும் போகாமல் மன்னுபுகழ் நூல்கள்
உறைந்திடத் தந்தா(ர்) உயிரை - நிறைந்தமனம்
கொண்டதனால் வாழ்வில் குறைகள் எனவேதும்
கண்டிடா(து) உற்றார் களிப்பு. 410

களம்புகுந்து சேவை கணக்கின்றிச் செய்தார்
விளம்பரத்தை முற்றும் வெறுத்தார் - உளமுணர்ந்து
சீரியநற் செம்மையெலாம் செந்தமிழில் சேர்க்கின்ற
காரியத்தில் வைத்தார்தம் கண். 411

போயடையும் நாள்வரையில் பொய்யில்லாச் சேவைபல
தாய்மொழிக்(கு) ஆற்றினார் தாத்தாவும் - ஓய்வொழித்துச்
சித்தத்தி(ல்) எப்பொழுதும் செந்தமிழின் சீரெண்ணி
நித்தமவர் வாழ்ந்தார் நிறைந்து. 412

யாத்தபழம் பாக்கள் யமன்கரம் ஏகாமல்
பூத்திட வைத்தார் புதுநூலாய் - மூத்தவராம்
நஞ்சாமி நாதனின் நற்சரிதை நாட்டோர்க்குப்
பஞ்சாமிர் தம்தான் பகர். 413

இவரொப்பச் சேவை இனிதாய்த் தமிழுக்(கு)
எவரிங்கு செய்தா(ர்) இயம்பு - தவமென்றே
ஏற்றா(ர்) அதனை இறுதிநாள் மட்டிலும்
நோற்றா(ர்) அவர்அந்த நோன்பு. 414

அற்பம் பதவி அவர்கொள்ளா(ர்) ஆசையதில்;
தற்பெருமை இல்லாத் தகவுடையார் - கற்றறிந்த
செய்யுளில் கண்ட சிறப்பெல்லாம் சொல்லியவர்
வையத்துக்(கு) ஈந்தார் வளம். 415

காலன் கரம்படுமுன் கைப்பற்றிக் காப்பியங்கள்
கோலமுற நம்கை கொணர்ந்தளித்தார். - ஞாலத்தில்
அன்னார்போல் சேவை அளப்பின்றிச் செய்தவ(ர்)
இன்னொருவ(ர்) உண்டோ இயம்பு. 416

காத்தளித்தார் நூல்பலவும் காலன்கொண் டேகாமல்
மூத்தவய தென்றாலும் முன்னின்றார் - ஏத்துவேன்
எஞ்சாமி நாதனின் ஈடில்லாத் தொண்டுதனை
நெஞ்சார என்றும் நினைந்து. 417

எத்திக்கும் ஏகினார் ஏட்டிற்(கு) இறவாத
நித்திய(ம்) ஊட்டும் நினைப்புடனே. - சத்தியமாய்
நஞ்சாமி நாதன்போல் நானிலத்தி(ல்) இல்லையென
அஞ்சாமற் சொல்வே(ன்) அறிந்து. 418

ஐயருக்கு நாமாற்றும் கடன்

ஐயரைப் போற்பணிகள் ஆற்றமுடி யாதெனினும்
செய்யபணி உண்டுனக்குச் செப்பிடுவேன் - மெய்யாய்
உரக்கக் குரலெழுப்பி ஓயாமல் என்றும்
சிறக்கத் தமிழ்ப்பெருமை செப்பு. 419

ஐயர் நமக்களித்த அத்தனையும் கற்றுணர்ந்து,
வையத்தில் வாழ்ந்திருப்போம் வாழ்வாங்கு - செய்கடனாய்,
எப்பொழுதும் உள்ளி(ல்) இருத்துவோ(ம்) ஏற்றமுடன்
செப்பரிய நம்மொழியின் சீர். 420

ஐயர் வழிதன்னில் அன்னைத் தமிழ்மொழிக்குப்
பொய்யில்லாச் சேவை புரிந்திடுவோம் - கையடித்துச்
சத்தியம் செய்தே சகலரும் இவ்வுறுதி
புத்தியில் வைப்போம் பொதிந்து. 421

இன்று தமிழ்மொழியி(ல்) ஈடில்லாக் காப்பியங்கள்
நன்று படிக்கின்றோம் நாடோறும் - அன்றெமது
சாமிநா தையர் சளைக்காமற் செய்தமையால்
நாமிங்கு பெற்றோம் நலம். 422

அருமைத் தமிழ்ப்பணி ஆர்வமுடன் செய்த
பெருமகன் தந்ததிப் பேறு - கருமமென
நம்மொழிக்குச் சேவைபல நாடோறும் ஆற்றுவதை,
இம்மியும் குன்றா தியற்று. 423



ஐயர் பெயரில் நூல் நிலையம் அமைத்தது (1943)

ஐயர் பெயரிவ் வவனி நிலைத்திடப்
பையன் வழிசெய்தான் பண்புடன் - மெய்யுணர்வால்
சீலமிகும் ஐயர் சிறப்பாகச் சேர்த்தவற்றை
ஞாலத்துக் கீந்தான் நயந்து. 424

ஏடோடு புத்தகங்கள் ஈந்து நிறுவினார்
நாடுறை மக்கள் நலமெண்ணிப் - பீடுமிகும்
ஐயர் குடும்பத்தார் அந்நூல் நிலையத்தை
வையகம் காணா வகை. 425

அடையாற்றில் வைத்தார் அருள்நூல் நிலையம்
குடைநிழலில் அன்னை குளிரத் - தடையின்றித்
தாய்மொழிக்குச் சேவைபல தந்து மிளிர்ந்ததுவே
ஆய்வு பலவும் அளித்து. 426

பாடுபட்(டு) ஐயர் பலவழியில் சேகரித்த
ஏடுகளைத் தந்தார் இசைவுடன் - தேடுகிற
மக்களுக்குச் சேவையென மாசகற்றும் நூல்களை
அக்கணமே ஈந்தா(ர்) அவர். 427

ஐயருக்குச் சிலை வைத்தது (1948)

தக்கவர்க்கே அன்றுசிலை தப்பின்றி வைத்திட்டார்
மிக்கபணி செய்தாரை மெச்சிடவே - எக்கணமும்
தன்னலம் போற்றாத் தமிழ்த்தாத்தா சீர்செப்பச்
சென்னையில் வைத்தார் சிலை. 428

இந்நாள்போ(ல்) அல்லாம(ல்) ஏற்ற(ம்) உடையவர்க்கே
அந்நா(ள்) அளித்துவந்தா(ர்) அச்சிறப்பைப் - பன்னாளும்
உன்னதம் தாய்மொழிக்கே உன்னி உழைத்தவர்க்குச்
சென்னையில் வைத்தார் சிலை. 429

அலைகட(ல்) ஓர(ம்) அழியாப் புகழில்
நிலைபெற்(று) உறைகின்றார் நித்தம் - கலைமலிந்த
அன்னவர் செம்மை அவனியோர் கண்டுணரச்
சென்னையில் வைத்தார் சிலை. 430



பொய்யென்றும் பேசார்; புகழ்தேடி ஓடிடார்
வையத்தில் வண்ணமிகும் வாழ்வுற்றா(ர்) - ஐயரவர்
தன்னையே தந்தார் தமிழுக்(கு) எனப்போற்றிச்
சென்னையில் வைத்தார் சிலை. 431

வந்தார் புவிமீது வற்றாத் தமிழின்பம்
தந்தார் மிகுந்த தகவுட(ன்) - அந்தமிலா
இன்னமு(து) எம்மவர்க்(கு) ஈந்தா(ர்) எனப்போற்றிச்
சென்னையில் வைத்தார் சிலை. 432

சிலைவைத்துப் போற்றுகின்ற செம்மை உடையார்
மலையென உள்வைத்தார் மாண்பு - குலையாத
சீர்பலவும் தாய்மொழிக்குச் சேர்த்தார் சிறப்புற,
நேர்வழி தன்னில் நிலைத்து. 433

செம்மொழி இன்று, சேவைகள் அன்று

செம்மொழி என்றின்று செப்புகிறோம் பீடுடன்
அம்மொழிக்குச் செம்மை அவரளித்தார் - தம்மளவில்
முற்றுமதை எண்ணி முழுமனதாய்ச் சேவைதனை
உற்றவழி ஈந்தார் (உ)வந்து. 434

செந்தமிழ் பெற்றது செம்மொழி என்னுஞ்சீர்,
முந்தியவர் தந்த முழுவுழைப்பால் - இந்தநற்
பேறு தமிழ்மொழி பெற்றிடக் கொட்டினார்
ஊறேது(ம்) இல்லா உழைப்பு. 435

இன்று தமிழர் இறும்பூது கொண்டிட,
அன்று விதையை அவரிட்டார் - நன்று
பணிபலவும் ஐயர் பலவாண்டாய் ஆற்ற
அணிகின்றோம் இப்பே(று) அறி. 436

மாரின்று தட்டுகிறோம்; மங்காத் தமிழ்ப்பெருமை,
பார்ளங்கும் கேட்கப் பகர்கின்றோம் - சீரனைத்தும்
தாய்மொழி காணத் தளரா தவர்தந்தார்
ஓய்வின்றி வற்றா உழைப்பு. 437

அடித்தளம் கட்டினா(ர்), ஐயரதில் ஏறி
முடித்தோம் பணியை முனைந்து - படித்துவக்கக்
காப்பிய நூல்களைக் கண்டெடுத்துத் தந்தவரைக்
கூப்புவேன் கைகள் குவித்து. 438

வித்திட்டா(ர்) அன்றையர்; வெற்றிக் கனிதன்னைக்
கொத்தாக இன்றுகை கொள்கின்றாய் - புத்தகமாய்க்
காவியங்கள் இன்றுன் கரம்தவழத் தந்தவர்க்குக்
கூவியுன் நன்றிதனைக் கூறு. 439

செம்மொழியே எம்மொழி செப்புகிறோம் ஓர்குரலில்
நம்மொழியின் சீரறிந்து நாவினிக்க - அம்மொழிக்கே
ஐயர் அயராமல் அன்றளித்த நற்பணியை
மெய்யுறவே என்றென்றும் மெச்சு. 440

முடிவுரை

அப்பாவோ அம்மாவோ ஆருமிலா எம்மொழிக்குத்
தப்பாமல் வந்தாரித் தாத்தாவும் - ஒப்பார்
எவருமே இன்றி இமயமாய் நின்ற
அவர் சரிதை சொன்னேன் அகழ்ந்து. 441

சீரோங்கு தாய்மொழிக்குச் சித்திக்க வைத்தார்நற்
பாரோங்கு நூல்கள் பதிப்பித்து - மாரோங்கி
மன்னுபுகழ் தாத்தாவின் மங்காப் பெருமைகளை
உன்னுவது செய்ததென் உள். 442

பேறுமிகப் பெற்றேன் பெரியவர் வாழ்ந்தவகை
கூறுவதி(ல்) உள்ளம் குளிர்ந்தவனாய் - வீறுகொண்டு
செந்தமிழுக்(கு) உற்றபல செம்மைமிகு காப்பியங்கள்
தந்தவர்தாள் வைப்பேன் தலை. 443

ஐயரின் செம்மை அனைத்தையும் சொல்வது
மெய்யா(ய்) இயலாது மேதினியில் - பொய்யுரையேன்
என்னளவி(ல்) ஏலுவதை எண்ணி இதுகாறும்
பன்னினேன் இங்குசில பா. 444

ஏற்றமுறு வண்ண(ம்) இனியதமிழ்ச் சேவைபல
ஆற்றினா(ர்) ஐயர் அயராமல் - நாற்றிசையும்
போற்றிப் புகழப் புரிந்த செயலெல்லாம்
சாற்றினேன் உண்மையைச் சார்ந்து. 445

ஐயர் சரிதை அடியேன் உரைத்ததுவும்
ஐய(ன்) அளித்த அருளன்றோ? - மெய்யுணர்வு
தூண்டப் பகர்ந்தேன்; துதித்தேன் மறவாமல்,
ஆண்டவன் தாளை அணைந்து. 446

இத்துடன் காதை எழுதி முடிக்கின்றேன்
வித்தகர் வாழ்வை விவரித்துச் - சித்தமதில்
ஏற்றபணி இவ்வா(று) இனிதே நிறைவேற்ற
ஆற்றலவன் தந்தான் அறி. 447

சாமிநாத வெண்பா நிறைவுற்றது.



உ.வே.சாமிநாதையர் - முக்கியமான வாழ்க்கை நிகழ்ச்சிகள் பட்டியல்

ஆண்டு	*அப்போது, ஐயரின் உத்தேச வயது*	*அவர் வாழ்வில் நடந்த முக்கியமான நிகழ்வுகள்*
1855	பிறப்பு	**19–02–1955** திங்கட் கிழமை – தஞ்சை மாவட்டத்தில் சூரிய மூலை என்னும் ஊரில் வேங்கட சுப்பையருக்கும், சரஸ்வதி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார்.. வேங்கடராமன் என்று பெயர் சூட்டப் பெற்றார்.
1861	**5**	அரியலூர் சடகோப ஐயங்காரிடம் பாடம் கேட்கத் துவங்கினார்.
1862	**7**	உபநயனம் நடந்தது
1868	**13**	**16–06–1868** அன்று மதுராம்பாளை மணந்து கொண்டார். மனைவிக்கு வயது எட்டு.
1869	**14**	செங்கணம் விருத்தாசல ரெட்டியாரிடம் யாப்பருங்கலக்காரிகை பாடம் கேட்கத் தொடங்கினார்.
1871	**16**	மாய்வரம் சென்று மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் மாணவராகச் சேர்ந்தார். பிள்ளையவர்கள் அவரைச் சாமிநாதன் என்றழைக்கத் தொடங்கினார். அப் பெயரே நிலைத்தது. ஆசிரியர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை மூலம் சாமிநாதையருக்குத் திருவாவடுதுறை ஆதீன கர்த்தர் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர், வித்துவான் தியாகராசச் செட்டியார் ஆகியவர்களின் தொடர்பும் ஆதரவும் கிடைத்தன மாயவரம் கோபாலகிருஷ்ண பாரதியாரைச் சந்தித்ததும் இவ்வாண்டில் தான்.

1872	17	பிள்ளையவர்களுடன் திருவாவடுதுறை சென்றது.
1874	19	செங்கணத்தில் விருத்தாசல ரெட்டியார் குமாரரின் வேண்டுகோளுக்கிணங்கி, அவர்கள் குல தெய்வமான நீலியம்மன் என்றழைக்கப் பட்ட துர்க்கையம்மன் பேரில் முதல் நூலை வடித்தார் நூலின் பெயர் “நீலி இரட்டை மணிமாலை” செங்கணத்தில் திருவிளையாடற் புராணம் தொடர் சொற்பொழிவு செய்தார்
1876	21	**31–01–1876** ஆசிரியர் மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை மறைந்தார். திருவாவடுதுறை மடத்தில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கினார் மாணவராக இருந்து தேசிகரிடம் பாடம் கேட்டார்.
1877	22	ஆதீன கர்த்தர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் ஐயரவர்களுக்கு இல்லம் அமைத்துக் கொடுத்தார்.
1878	23	ஆதீன கர்த்தர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகருடன் மதுரை, திருநெல்வேலி முதலிய ஊர்களுக்குப் பயணம் செய்தார். ஆதீனகர்த்தர் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் சாமிநாதையருக்குச் சன்மானம் அளித்தல்.
1880	25	வித்துவான் தியாகராசச் செட்டியார் அவர்களின் தளராத முயற்சியால், கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தமிழாசிரியராக வேலை ஏற்றார். சேலம் இராமசுவாமி முதலியார் தொடர்பு கிடைத்து, அதனால் சீவக சிந்தாமணி கற்கத் தொடங்கினார். அது தொடர்பாகப் பல சமண மதத்தினரைக் கண்டு அவர்களுடன் நட்பை வளர்த்துக் கொண்டார். சீவக சிந்தாமணி நூலின் பல்வேறு ஏட்டுப் பிரதிகளையும் தேட ஆரம்பித்தார். அவ்விதம் ஏடுகளைத் தேடும்பணி பின்னர் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்தது.



1883	28	திருக்குடந்தைப் புராணம் பதிப்பித்தார்.
1884	29	முதன் முறையாகச் சென்னை வந்தார். பரம்பரைச் சொத்தாகிய நிலத்தை ஒத்தியிலிருந்து மீட்டார்
1885	30	கும்பகோணத்தில் மகா மகம் திருவாவடுதுறை சந்நிதானம் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் சாமிநாதையருக்கும் அவர் தந்தையாருக்கும் பீதாம் பரம் அளித்தார். சாமிநாதஐயர் புதல்வன் கலியாணசுந்தரத்திற்கு சந்திர ஹாரம் என்ற பொன்னாபரணமும் வழங்கினார்
1887	32	சீவக சிந்தாமணி நூலைப் பதிப்பித்தார்.
1888	33	திருவாவடுதுறை சந்நிதானம் ஸ்ரீசுப்பிரமணிய தேசிகர் இவ்வுலக வாழ்வை நீத்தார். தியாகராசச் செட்டியாரும் மறைந்தார். திருநெல்வேலி மாவட்டத்தில் தீவிரமாக ஏடுகளைத் தேடும் பணியில் சாமிநாத ஐயர் இறங்கினார்
1889	34	பத்துப் பாட்டு நூல் அச்சேறியது. சிலப்பதிகாரம் பதிப்பிக்கும் பணி துவக்கினார். சென்னை வந்து பூண்டி அரங்கநாத முதலியாரின் கச்சிக் கலம்பகம் அரங்கேற்றத்தில் கலந்து கொண்டார்.
1891	36	சீவக சிந்தாமணி பதிப்பினைக் கண்டு மகிழ்ந்து, பாரிஸிலிருந்து பேராசிரியர் ஜூலியோன் வின்ஸோன் ஐயருக்குப் பாராட்டுக் கடிதம் எழுதினார்.
1892	37	சிலப்பதிகாரம் ப்திப்பை வெளியிட்டார். சேலம் இராமசுவாமி முதலியார் மறைந்தார் பாஸ்கர சேதுபதி மன்னரின் அழைப்பை ஏற்று இராமநாதபுரம் சென்று நவராத்திரி விழாவில் கலந்து கொண்டார்.
1894	39	புறநானூறு நூலைப் பதிப்பித்தார். கும்ப கோணத்தில் சொந்த வீடு வாங்கினார். பாண்டித்துரைத் தேவருடன் சந்திப்பு புறப்பொருள் வெண்பா மாலை பதிப்பித்தார்.

1895	40	ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் ஜி.யூ.போப் அவர்களுடன் கடிதத் தொடர்பு தொடக்கம்.
1898	43	மணிமேகலை பதிப்பித்தார்.
1903	48	கும்பகோணத்திலிருந்து சென்னை மாநிலக் கல்லூரிக்கு வேலை மாற்றம் நிகழவே சென்னை சென்று வேலையை ஏற்றுக் கொண்டார்.
1906	51	வருடப் பிறப்பன்று 1–1–1906 அன்று மகா மகோ பாத்தியாய – பட்டம் பெற்றார். கல்வி இலாகா அவருக்கு ரூ 1,000 வழங்கியது சென்னை மாநிலக் கவர்னர் லார்டு கார்மைக்கேல் பிரபுவைச் சந்தித்து உரையாடி, அவருடைய பாராட்டைப் பெற்றார்.
1909	54	சென்னையில் திருவட்டீஸ்வரன் பேட்டையில் சொந்த வீடு கட்டி அதற்குத் தியாகராசச் செட்டியார் நினைவாகத் தியாகராச விலாசம் என்று பெயர் சூட்டிக் குடி புகுந்தார்.
1911	56	ஜார்ஜ் மன்னர் முடிசூட்டு விழாவை ஒட்டி ஆண்டுக்கு ரூ.100 பென்ஷன் வழங்கப் பட்டது.
1912	57	சென்னை மாநிலக் கவர்னர் துரையவர்கள், ஐயரவர்கள் பாடம் சொல்லிக்கொடுத்த தமிழ் வகுப்பிற்கு வந்து 1–1/2 மணி நேரம் இருந்தார்.
1916	61	மைசூர் பல்கலைக்கழகத்தில் போர்டு உறுப்பினராக நியமிக்கப்பெற்றார்.
1917	62	காசி பல்கலைக் கழகத்தில் போர்டு மெம்பர் பரீட்சகராக நியமிக்கப் பெற்றார். காசி பாரத தர்ம மகா மண்டலத்தாரால், "திராவிட வித்யா பூஷணம்" என்ற பட்டம் வழங்கப்பட்டது. சாமிநாதையரின் மனைவியார் மரணமடைந்தார்.

1919	64	39 வருட உழைப்பிற்குப் பின்னர், வேலை யிலிருந்து ஓய்வு பெற்றார். வங்கக் கவி ரவீந்திர நாத் தாகூர் அவர்களைச் சென்னையில் அவர் தங்கியிருந்த இடத்திற்குப் போய் ஐயர் சந்தித்துப் பேசினார் அன்று மாலையில், கவி ரவீந்திரநாத் தாகூர் ஐயரவர்களின் வீட்டிற்கே வந்து ஐயரைச் சந்தித்து உரையாடி மகிழ்ந்தார்.
1922	67	மேன்மை தங்கிய வேல்ஸ் இளவரசர் சென்னைக்கு வந்திருந்த போது, "கில்லத்து" வழங்கப்பட்டது ஐயருக்கு.
1924	69	பெருங்கதை பதிப்பித்தார்.
1924	69	சிதம்பரம் மீனாட்சி கல்லூரி முதல்வராகப் பணியேற்றார்.
1925	70	காமகோடி பீடாதிபதி ஜகத் குரு ஸ்ரீசங்கராச்சாரியார், ஐயருக்கு "தாஷிணாத்ய கலாநிதி" என்ற பட்டத்தை வழங்கினார்
1927	72	சென்னைப் பல்கலைக்கழகத்தில் சங்ககாலத் தமிழும், பிற்காலத் தமிழும் என்ற தலைப்பில் பத்து தினங்கள் தொடர் சொற்பொழிவு நிகழ்த்தினார்.
1932	77	சென்னைப் பல்கலைக் கழகம் வழங்கிய டாக்டர் பட்டம் பெற்றுக் கொண்டார்.
1933	78	ஆசிரியர் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் சரித்திரம் – முதல் பாகம் நூலைப் பதிப்பித்து வெளியிட்டார். ஆந்திரப் பல்கலைக்கழகத்தின் தமிழ் போர்டில் அங்கத்தினராக நியமிக்கப்பட்டார்.
1934	79	ஆசிரியர் மகாவித்துவான் ஸ்ரீமீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் சரித்திரம் இரண்டாம் பாகம் நூலைப் பதிப்பித்து வெளியிட்டார்.

1935	80	எண்பதாவது வயது நிறைவு விழா நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.
1937	82	பாரதீய சாஹித்திய பரீஷித் கூட்டத்தில் மகாத்மா காந்தியின் தலைமையில் வரவேற்புரை வழங்கினார். காந்தியைச் சந்தித்து உரையாடினார்.
1938	83	சென்னையில் வைஸ்ராய் அளித்த விருந்தில் கலந்து கொண்டார். ஆக்ஸ்போர்டு ஸமஸ்கிருத ஆசிரியர் கூட்டத்திற்குச் சென்றார். ரசிகமணி டி.கே.சி, கல்கி இருவரும் வீட்டிற்கு வந்து ஐயரவர்களைச் சந்தித்து உரையாடினார்கள். என் சரித்திரம் என்ற தலைப்பில் தன்னுடைய சுய சரிதையை ஐயர் ஆனந்த விகடன் பத்திரிகையில் எழுதத் துவங்கினார்.
1941	86	திருச்சி வானொலியில் எது தமிழ் என்ற தலைப்பில் பேசினார்.
1942	87	உலகப்போர் மூண்டதால் சென்னை நகர் விட்டு நீங்கித் திருக்கழுக்குன்றம் சேர்ந்தார்
1942	87	28–04–1942 அன்று மாலை இவ்வுலக வாழ்க்கையை நீத்தார்.

ஐயர் மறைவுக்குப் பின் நிகழ்ந்தவை

1943	டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம் தொடங்கப்பெற்றது.
1948.	சென்னை மாநிலக் கல்லூரியில் ஐயரவர்களின் உருவச்சிலை திறக்கப்பட்டது.
1955	ஐயரவர்களின் நூற்றாண்டு விழா மிகச்சிறப்பாக நாடு முழுவதிலும் கொண்டாடப்பட்டது.
1983	ஐயரவர்களின் தலைமாணாக்கராகிய கி.வா.ஜகந்நாதன் அவர்களால் உ.வே.சாமிநாதையரின் வாழ்க்கை வரலாறு (என் ஆசிரியப்பிரான்) என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தது.



தமிழ் தாதா

கல்கி

தமிழ்த்தாத்தா ஸ்ரீஉ.வே.சாமிநாதய்யர் அவர்கள் சமூகத்துக்குப் பேரன் பரிவுடன் எழுதிக் கொள்வது.

பெரியவாள் என்ன யோசிக்கிறீர்கள்? இது என்ன புதிய பட்டமாயிருக்கிறது. இவன் யார் கொடுப்பது என்றா? அப்படியெல்லாம் தாங்கள் நிராகரிக்க மாட்டீர்களென்று நம்புகிறேன். சகலமும் அறிந்த பெரியாராகிய தாங்கள், நான் அளித்திருக்கும் பட்டத்தின் பொருத்தத்தை அங்கீகரிக்காமல் இருக்க முடியாது. முதலாவது ஔவையாருக்கு எப்படித் தமிழ்ப்பாட்டி என்னும் பட்டம் பொருந்துமோ அது போலவே, தங்களுடைய பிராயத்தினாலும், தமிழுக்குத் தாங்கள் செய்திருக்கும் தொண்டினாலும் (தமிழ்த் தாத்தா) என்னும் பட்டம் தங்களுக்குப் பொருந்தும்.

இரண்டாவதாக, மேற்படி பட்டத்திலுள்ள இரண்டு (த்)களையும் நீக்கி விட்டால், தாங்கள் (தமிழ் தாதா) ஆகிறீர்கள். நமது நாட்டின் பரம்பரை வழக்கத்தை அனுசரித்து, அகப்பட்ட நூல்களையெல்லாம் ஒளித்து வைக்காமல் அச்சிட்டு வெளியாக்கிப் பதினாயிரக்கணக் கானவர்களுக்குப் பயன்படும்படி செய்த தங்களை (தமிழ் தாதா) என்று சொல்லாமல் வேறு யாரைச் சொல்வது?

மூன்றாவது, (உருசி கண்ட பூனை உறியைத் தாவும்) என்பது போல, தமிழன்பர்கள் இன்னமும் தங்களை நோக்கித் (தமிழ் தா தா) தமிழ் நூல்களைத் தா தா என்று கேட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள். (மேற்படி சிலேடை என் சொந்தமல்ல, இரவல் தான் என்பதையும் பெரியவாளிடத்தில் தெரிவித்துக் கொண்டு விடுகிறேன்).

தங்களுடைய புத்தகங்களின் உதவியினால் அநேகர் பல் உடைந்து, காது கிடுகிடாய்க்கும்படியான தமிழ்நடையெல்லாம் எழுதும்

போது, தாங்கள் மட்டும் எனக்கெல்லாம்கூட விளங்கும்படியான வெள்ளைச் சொற்களையே உபயோகிக்கிறீர்களே, அது ஏன்? நானும் தங்களுடைய கட்டுரைகளை எல்லாம் படித்தேன், தாங்கள் எழுதிய ஸ்ரீமீனாக்ஷி சுந்தரம்பிள்ளை அவர்கள் சரித்திரத்தையும் படித்தேன். எனக்கு விளங்காத வார்த்தை ஒன்றுகூட இல்லை. இது தங்களுடைய கௌரவத்துக்குக் குறைவு என்று தாங்கள் நினைக்கவில்லையா?

போகட்டும், தங்களுக்குச் சமீபத்தில் எண்பது வயது நிரம்பப் போகிறது என்று சொல்கிறார்களே, அது உண்மைதானா? எனக்கு என்னமோ நம்பிக்கையில்லை. பார்த்தால் பாலியமாய்த் தோன்று கிறதே? தாங்கள் செய்யும் வேலையைப் பார்த்தாலும், அவ்வளவு வயதானதாக நினைக்கக்கூடவில்லையே?

கடைசியாக ஒன்று தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதாவது மார்ச்சு மாதம் 6ந் தேதி வைபவங்கள் முடிந்து 7ந் தேதி பிறந்ததோ இல்லையோ, உடனே இந்த வயது விவகாரங்களையெல்லாம் மறந்துவிடுங்கள். நீங்கள் பாட்டுக்குத் தமிழ்த் தாயின் சேவையில் ஈடுபட்டிருங்கள். தப்பித்தவறி வயதைப் பற்றி ஞாபகம் வந்தால், 81 என்பதைத் திருப்பி வைத்து 18 என்று எண்ணிக் கொள்ளுங்கள் என்றும் பதினாறு வயதாயிருந்த மார்க்கண்டனைப்போல, தாங்களும் 18 வயதுக்குமேல் போகாமலே இருந்து விடுங்கள்.

ஏனெனில், தாங்கள் செய்ய வேண்டிய தொண்டுகள் இன்னும் எவ்வளவோ பாக்கியிருக்கின்றன. தமிழ்த்தாய் இன்னமும் கையில் ஏராளமான பழைய நகைகளை வைத்துக் கொண்டு காத்திருக்கிறாள். அவைகளையும் தாங்கள் மெருகிட்டுத் தரவேண்டுமாம். எப்படியும் ஸ்திரீயல்லவா? அசாத்திய நகை ஆசை)

வானதி பதிப்பகம், வாழ்க சுதந்திரம் வாழ்க நிரந்தரம்.



முக்கியமான மேற்கோள் நூல்கள் பட்டியல்

1. என் சரித்திரம்

எழுதியவர்

மகாமகோபாத்தியாய, தாக்ஷிணாத்ய கலாநிதி, டாக்டர் உ.வே.சாமிநாதையர் வெளியிட்டோர்.

டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், திருவான்மியூர், சென்னை 600 041. நான்காம் பதிப்பு 1997 ஆம் ஆண்டு வெளியீடு.

2. என் ஆசிரியப் பிரான் (ஐயரவர்கள் சுயசரித்திரத்தின் தொடர்ச்சி)

எழுதியவர்

வாகீச கலாநிதி கி.வா.ஜகந்நாதன்

வெளியிட்டோர்

அமுத நிலையம், 17 ஸ்ரீபுரம் இரண்டாவது தெரு,
இராயப்பேட்டை, சென்னை 600 041.
மீள் பதிப்பு – 2010 ஆம் ஆண்டுப் பதிப்பு.

3. வாழ்க சுதந்திரம் வாழ்க நிரந்தரம் கல்கி, வானதி பதிப்பகம்.

உ.வே.சா. அவர்கள் எழுதிய / பதிப்பித்த நூல்களின் பட்டியல்

நூலின் / புத்தகத்தின் பெயர்	பதிப்பித்த ஆண்டு
நீலி இரட்டை மணிமாலை	1874
வேணுவனலிங்க விலாசச் சிறப்பு	1878
திருக்குடந்தைப் புராணம்	1883
மத்தியார்ச்சுன மான்மியம்	1885
சீவக சிந்தாமணி	1887
கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடுதூது	1888
திருமயிலைத் திரிபந்தாதி	1888
பத்துப்பாட்டு மூலமும் உரையும்	1889
தண்டபாணி விருத்தம்	1891
சிலப்பதிகாரம்	1892
திருப்பெருந்துறைப் புராணம்	1892
புறநானூறு	1894
புறப்பொருள் வெண்பா மாலை	1895
புத்தசரித்திரம், பௌத்த தருமம், பௌத்த சங்கம்	1898
மணிமேகலை	1898
மணிமேகலைக் கதைச்சுருக்கம்	1898
ஐங்குறுநூறு	1903
சீகாழிக்கோவை	1903
திருவாவடுதுறைக்கோவை	1903
வீரவனப் புராணம்	1903
சூரைமாநகர்ப்புராணம்	1904
திருக்காளத்தி நாதருலா	1904

திருப்பூவண நாதருலா	1904
பதிற்றுப்பத்து	1904
திருவாரூர்த் தியாகராச லீலை	1905
திருவாரூருலா	1905
திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்	1906
தனியூர்ப்புராணம்	1907
தேவையுலா	1907
மண்ணிப்படிக்கரைப் புராணம்	1907
திருப்பாதிரிப் புலியூர்க் கலம்பகம்	1908
மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் பிரபந்தத்திரட்டு	1910
திருக்காளத்திப் புராணம்	1912
திருத்தணிகைத் திருவிருத்தம்	1914
பரிபாடல்	1918
உதயணன் சரித்திரச் சுருக்கம்	1924
பெருங்கதை	1924
நன்னூல் சங்கர நமச்சிவாயருரை	1925
நன்னூல் மயிலை நாதருரை	1925
சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்	1928
தக்கயாகப் பரணி	1930
தமிழ்விடு தூது	1930
பத்துப்பாட்டு மூலம்	1931
மதுரைச் சொக்கநாதர் உலா	1931
கடம்பர் கோயிலுலா	1932
களக்காட்டு சத்தியவாகீசர் இரட்டை மணிமாலை	1932
சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தங்கள்	1932
பத்மகிரி நாதர் தென்றல் விடுதூது	1932

பழனிப் பிள்ளைத்தமிழ்	1932
மதுரைச் சொக்கநாதர் மும்மணிக்கோவை	1932
வலிவல மும்மணிக்கோவை	1932
சங்கரலிங்க உலா	1933
திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா	1933
பாசவதைப் பரணி	1933
மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் – பகுதி 1	1933
சங்கரநயினார் கோயிலந்தாதி	1934
மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் சரித்திரம் – பகுதி 2	1934
விளத்தொட்டிப்புராணம்	1934
ஆற்றூர்ப்புராணம்	1935
உதயண குமார காவியம்	1935
கலைசைக் கோவை	1935
திருஇலஞ்சி முருகன் உலா	1935
பழமலைக் கோவை	1935
பழனி இரட்டைமணி மாலை	1935
இயற்பகை நாயனார் சரித்திரக் கீர்த்தனை	1936
கனம் கிருஷ்ணையர்	1936
கோபால கிருஷ்ண பாரதியார்	1936
திருநீலகண்டனார் சரித்திரம்	1936
திருமயிலை யமக அந்தாதி	1936
திருவள்ளுவரும் திருக்குறளும்	1936
நான் கண்டதும் கேட்டதும்	1936
புதியதும் பழையதும்	1936
புறநானூறு மூலம்	1936
பெருங்கதை மூலம்	1936

மகாவைத்தியநாதையர்	1936
மான் விடுதூது	1936
குறுந்தொகை	1937
சிராமலைக்கோவை	1937
தமிழ்நெறி விளக்கம்	1937
திருவாரூர்க்கோவை	1937
நல்லுரைக்கோவை பகுதி 1	1937
நல்லுரைக்கோவை பகுதி 2	1937
நினைவு மஞ்சரி – பகுதி 1	1937
அழகர் கிள்ளை விடுதூது	1938
சிவசிவ வெண்பா	1938
திருக்கழுக்குன்றத்துலா	1938
திருக்காளத்திநாதர் இட்டகாமிய மாலை	1938
திருமலையாண்டவர் குறவஞ்சி	1938
நல்லுரைக் கோவை பகுதி 3	1938
குமர குருபர சுவாமிகள் பிரபந்தத் திரட்டு	1939
தணிகாசல புராணம்	1939
நல்லுரைக் கோவை பகுதி 4	1939
புகையிலை விடு தூது	1939
மகரநெடுங் குழைக்காதர் பாமாலை	1939
கபாலீசுவரர் பஞ்சரத்தினம்	1940
திருக்குற்றாலச் சிலேடை வெண்பா	1940
வில்லைப் புராணம்	1940
செவ்வைச் சூடுவார் பாகவதம்	1941
நினைவு மஞ்சரி – பகுதி 2	1942
வித்துவான் தியாகராசச் செட்டியார்	1942



பார் காத்தார் ஆயிரம் பேர்; பசித்தவர்க்குப்
பயிர் காத்தார் ஆயிரம் பேர், பாலர்க்காக,
மார் காத்தார் ஆயிரம் பேர்; வாழ்ந்த நாட்டில்
மனங்காத்த தமிழ்த்தாய் என்னுடைமை எல்லாம்
யார் காப்பார் எனக் கேட்க, ஒருவன் அம்மா
யான் காப்பேன் எனஎழுந்தான் சாமிநாதன்,
நீர்காத்த தமிழகத்தார் நெஞ்சினுள்ளான்,
நிலைகாத்த இமயத்தின் நெற்றி மேலான்.

பொய்யாத தமிழ்க்குமரி ஈன்றசாமி
போகாத புகழ்க்கன்னி மணந்த நாத,
செய்யாத மொழித்தொண்டு செய்த ஐய,
சிறுகாத நெஞ்சத்தேம் வணங்கும் செம்மல்,
எய்யாத திருவடியால் எண்பதாண்டும்
இளையாத உள்ளத்தால் எங்கும் சென்றே
நெய்யாத தொன்னூல்கள் நெய்து வைத்த,
நீங்காத தமிழ்க்குயிரே! நின்தாள் வாழ்க.

வ.சு.ப.மாணிக்கம்

நிதியறியோம், இவ்வுலகத் தொருகோடி இன்பவகை
நித்தம் துய்க்கும்
கதியறியோம் என்று மனம் வருந்தற்க, குடந்தைநகர்க்
கலைஞர் கோவே,
பொதிய மலைப் பிறந்த மொழி வாழ்வறியும் காலமெலாம்
புலவோர் வாயில்,
துதியறிவாய், அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய், இறப்பின்றித்
துலங்கு வாயே

பாரதியார்

